பக்கங்கள் - 24

# புதுவிதி
PUTHU VITHI


அறிமுகவிலை 20/=

புண்ணுண்ட தேசத்தின் உயிர் எங்குளது?
எள்ளிருக்க இடமின்றி எறிகணைகள்
துளைத்த இடங்களிலா?
விண்கற்கள் போல பல்குழல் பீரங்கிகள்
வீசிய கணைகள்
சல்லடை போட்ட காயங்களிலா?
ஊனம் பட்ட தேசத்திற்கு உண்டா
நல்லழகும் புத்துயிர்ப்பும்
மறுவாழ்வும் புரிந்துணர்வினால் அமையும்
நல்லிணக்கமும், நேயமும்
இசைகுலையா லயமும் ?



■ சு.வில்வரத்தினம்

புதுமை : 01 | 23 ஜூலை 2016 | விதி : 06



## கம்பஸ் கலவரத்துக்கு பின்னால்...!



# கட்டுநாயக்கா: கலங்கிய கதை

‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’

# ஆறாவடு

## தொடர்கதை

சயந்தன்



06

**‘தளபதிகளை அவசரமாக அழைத்த அண்ணை பெரிய யாழ்ப்பாண வரைபடத்தைக் கீழே விரித்து வைத்திருந்த றீப்பைத் தடியால் அளவெட்டியையும் சண்டிலிப்பாயையும் இணைத்து ஒரு கோடு கீறினார்.’**

ஐயாத்துரை பரந்தாமன் என்கின்ற எனக்கு இயக்கத்தில் இரண்டு பெயர்களை ஐந்து வருட இடைவெளியில் வைத்தார்கள். முதலாவது பெயரான இவான் இந்திய இராணுவம் வெளியேறிய இரண்டாவது மாதத்திலும் இரண்டாவது பெயரான அமுதன் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்திற்கு வர ஆறு மாதம் முன்னரும் வைக்கப்பட்டன.

எனக்கேதும் நடந்தால், அமுதன் என்று அழைக்கப்படுகின்ற ஐயாத்துரை பரந்தாமன் என்றே அறிவித்தல்கள் வருகிற அளவில் இரண்டாவது பெயரே பின்னர் நிரந்தரமாயிருந்தது. முன்னைய பெயரான இவான் ஒரு ரஷ்யச் சிறுவனின் பெயர் என்றும் அவனுக்கு ஒரு கதையிருந்து என்றும் பிற்காலங்களில் கேள்விப்பட்டடிருக் கின்றேன்.

### இவானின் கதை

ஹிட்லரின் படைகள் சோவியத் திற்குள் நுழைந்தார்கள் அந்த யுத்தத் தில் இவானின் அம்மா, அப்பா, தங்கையென்று எல்லோரும் செத்துப் போயிருந்தார்கள். தன் குடும்பத்தை அழித்தவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று அவனுக்குள் முடிவனது. ஹிட்லரின் நாஸிப்படை களை எதிர்த்து சோவியத் ஒன்றியம் திரண்டெழுந்த போது இவான் தன்னையும் அவர்களோடு இணைத்துக் கொண்டான். அப்பொழுது இவானுக்கு வெறும் பன்னிரண்டு வயதுதான் நடந்து கொண்டிருந்தது.

(நான்கைந்து வருடங்களுக்கு முன்னர் ஒலரா ஒட்டணு மல்லாவிக்கு வந்து அண்ணையைச் சந்திக்கும் வரைக்கும் இயக்கத்திலும் பன்னிரண்டு, பதின்மூன்று வயதுக்காரர் சேர்க்கப்பட்டுத்தானிருந்தனர். பலர் வீரச்சாவும் அடைந்திருக்கிறார்கள். அதனால் வெறும் பன்னிரண்டு என்று ஆச்சரியப்படத் தேவையில்லை என்று நினைக்கிறேன்)

ஆனாலும் இவான் சாதாரணமான வன் இல்லை. இவான் சோவியத் படை களின் உளவாளியாக உருமாறினான். இவர்களுக்கும் எதிரிப்படை நிலத்திற்கும் குறுக்கேயிருந்த நதியைக் கடந்து அந்தப்பக்கம் போய் அவர்களின் கூடாரங்களை மேய்ந்து செய்திகளைக் காவி மீண்டும் தளம் திரும்புகின்ற வேலையை அவன் செய்து கொண்டிருந்தான்.

இறுதியில் சோவியத் மகத்தான வெற்றியைக் கண்டது. ஜேர்மனியின் நாடாளுமன்றத்தில் சோவியத் செஞ்சேனையின் செங்கொடி காற்றில் சடசடத்துப் பறந்த போது அதற்கு விலையாக இரண்டு கோடி சோவியத் உயிர்கள் தம்மைத் தந்திருந்தனர். அவர்களில் இவானும் ஒருவன். இவனை ஜேர்மனிய ராணுவம் சுட்டுக் கொன்றிந்தது. பின்னர் அவர்கள் எழுதிய அவனது சாவுக்குறிப்பில் இவன் கொரில்லாக்களோடு தொடர்பு கொண்டிருந்தானென்றோ அவர்களுக்காக உளவுப் பணியேதும் செய்தானென்றோ நிரூபிக்கக் கூடிய எந்தச் சான்றுகளும் இல்லை என எழுதியிருந்தார்கள்.

எனக்குப் பெயர் வைக்கும் போது “இனி உமது பெயர் இவான்” என்பதை விடுத்து இந்தக் கதை பற்றி எதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லை. உண்மையில் இரு ஒரு நல்ல பரப்புரைக் கதை. பன்னிரண்டு வயது, செங்கொடி, உளவாளியென்று பல இடங்களில் எங்களோடு பொருந்திப் போகிறது. இது பற்றியேதும் படங்கள் வந்திருக்கிறதா என்று தேட வேண்டும்.

இரண்டாவது பெயரை நானாகவே அமுதன் ஆக்கியிருந்தேன். அந்த நாட்களில் யாழ்ப்பாணத்திலிருந்த இங்கிலிஷ் கடைப்பெயர்கள் எல்லாம் தமிழுக்கு மாறிக் கொண்டிருந்தன. நகையகம், குளிரகம், எழிலகம், வெதுப்பகம் என்று ஒவ்வொரு நாளும் புதுப்புதுப் பெயர்களோடு பலகைகள் முளைத்தன. கல்வியங்காடு முத்திரைச் சந்தியில் சைக்கிள் ரியூப் ஒட்டுகிற கடையொன்றின் முகப்பில் ‘ராஜா ஒட்டகம்’ என்று பெரிய போர்ட் வைத்திருந்தார்கள். இரண்டு மூன்று நாட்களில் அது இராசா ஒட்டகம் என்று மாறியிருந்தது.

ஆனைக்கோட்டைச் சந்திக்கு கொஞ்சம் தள்ளி ரவுணுக்குப் போகிற வழியில் டில்ஷான் ரீறூம் என்ற சாப்பாட்டுக்கடையொன்று இருந்தது. கடை ஓனர் தனது மகனின் பெயரால் அப்படி வைத்திருந்தார். சீர்திருத்தம் வந்த பிறகு கடைப்பெயரை டில்ஷான் தேனீர்ச்சாலை என மாற்ற அவர் விரும்பினார். ஆனால் டில்சான் தமிழ்ப்பெயர் இல்லையென்று அவருக்கு எடுத்துச் சொல்லப்பட் டது. அடுத்த விண்ணப்பமாக தில்சான் தேனீர்ச் சாலையென்பதை அவர் முன்மொழிந்தார். தமிழ்ச் சரித்திரத்திலேயே அப்பிடி ஒரு பெயர் இல்லையென்பதால் அதுவும் மறுக்கப்பட்டது. கடுப்பாகிய ஓனர் கடைசியாக தான் இன்னுமொரு பிள்ளையைப் பெற்று அதற்கொரு தமிழ்ப் பெயர் வைத்து அந்தப் பெயரைக் கடைக்கு வைப்பதாகவும் அதுவரை சும்மா தேனீர்ச் சாலையென்றே பெயர் வைக்கப்போவதாகவும் அறிவித்தார். சும்மா என்பது தமிழ்ப் பெயரா இல்லையா என்பதில் பொறுப்பானவர்களுக்கு குழப்பமிருந்தது. ஒரு தமிழ்ப் பண்டிதரிடம் இதை விசாரித்து இருக்கிறார்கள். அவரும் சும்மா தமிழ்ப் பெயர்தான் என்றும் பழந்தமிழ் இலக்கியங்களில் இந்தப் பெயர் உள்ளதாகவும் சொன்னார். இதன் காரணமாக கடை ஓனர் ‘சும்மா’ விடப்பட்டிருந்தார்.

இப்படியாகவே இயக்கப் பெயர்களும் மாற்றப்பட்டன. அது வரைக்கும் கென்னடி, லோறன்ஸ், மிரேஸ் என்று புழக்கத்திலிருந்த இயக்கப் பெயர்கள் நிலவன், வளவன், இரும்பொறை, இராவணன் என்று மாறின. வெளியீட்டுப் பிரிவினால் நல்ல தமிழ்ப் பெயர்கள் என்றொரு சிறு நூல் வெளியானது. அதில் ‘அ’ வரிசையில் பத்தோ பதினைந்தாவதோ பெயராக அமுதன் இருந்தது.

பெயரை மாற்றிய பத்தாவது நாள் எனது அணியைக் கொண்டு போய் சண்டிலிப்பாய் - அளவெட்டி லைனில் நிறுத்தினார்கள். அவசர அவசரமாக அண்ணை அதனைத் திட்டமிட்டிருந்தார். பயிற்சிக்கென்று நேரமிருக்கவில்லை. இரவும் பகலுமென தொடர்ந்து ஷெல் பக்டரிகள் இயங்கின. அப்படியொரு நாள் நடுச்சாமத்தில் தாவடி ஷெல் பக்டரியில் ஏதோ பிசகாகி அது வெடித்து விளாசி எரிந்து இருண்ட வானத்தை சிவக்கச் செய்தது. சத்தம் கேட்டவர்கள் “சந்திரிக்கா புதுச் சாமான் ஒன்றை இறக்கிப்போட்டாள்” என்று நித்திரை கொள்ளாமல் அச்சத்தில் இருந்தார்கள். பக்டரியில் சம்பளத் திற்கு வேலை செய்த ஏழு பேர் கருகிச் சாம்பலானார்கள். அவர்களுக்கு இயக்கம் நாட்டுப்பற்றாளர் விருது கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் அராலி, வட்டுக்கோட்டை தொடங்கி சண்டிலிப்பாய் வரை இராணுவம் மூன்று நாட்களில் பிடித்திருந்தது. நிறையச் சனங்கள் செத்துப் போயிருந்தார்கள். நவாலியில் மட்டும் ஒரு சேர்ச்சில் இருநூறு சடலங்கள் எண்ணப்பட்டிருந்தன. நல்லூர்க் கோவிலும் நகரத்துப் பாடசாலைகளும் சனங்களால் நிறைந்தன.

அநுரத்த ரத்வத்தை இன்னும் ஐந்து நாட்களில் மொத்த யாழ்ப்பாணத்தையும் பிடித்து விடுவோம் என்றும் புலிகளில் அறுபதோ எழுபது வீதமான ஆட்களை அழித்தாயிற்று என்றும் ரூபவாகினியில் சொன்னாராம்.

தளபதிகளை அவசரமாக அழைத்த அண்ணை பெரிய யாழ்ப்பாண வரைபடத்தைக் கீழே விரித்து வைத்திருந்த றீப்பைத் தடியால் அளவெட்டியையும் சண்டிலிப்பாயையும் இணைந்து ஒரு கோடு கீறினார்.

பதின்மூன்றாம் திகதி நடுச்சாமம் பன்னிரண்டு மணி கழிந்த கொஞ்ச நேரத்தில் எங்கள் லைனில் நாங்கள் முழங்கத் தொடங்கினோம். குவிந் திருந்த இருளில் எரியொளிகள் வெடித்து வெடித்துச் சிதறின. எங்களில் பெரிய சண்டைகள் ஐந்தாம் அல்லது முதலாம் நம்பர்களில் தான் தொடங்கும். ஆமிக்காரன் ஒன்பதாம் நம்பரில் தொடங்குவான். கொஞ்ச நேரத்திலிலேயே இராணுவத் தின் பங்கர்களும் மண்மூட்டைக் கூடுகளும் எங்களிடம் விழுந்து கொண்டிருந்தன. மூன்று நாட்களில் அவர்கள் அவ்வளவாக நிலையெடுத் திருக்கவில்லை.

**(வலிகள் இன்னும்...)**

## கலை முடுக்கி

ஒரு முத்தம்
ஒரு முறைப்பு
ஒரு சிரிப்பு
ஒரு மௌனம்
இப்படி ‘ஸ்மெய்லிஸ்’களால்
அடுக்கிவைக்கப்பட்டிருந்த
உன் வட்ஸப் ஸ்டேட்ஸை
கவிதையாக்குதல்
ஒரு கலை மாதம் ஒரு முறை
மாற்றப்படும் உன்
முகப்புப் படத்திற்கு
இதயத்தில் விருப்பிட்டு
‘லைக்’ கிட்ட பெண்களின்
எக்கவுண்டை ஆராய்வது என்பதுவும்
ஒரு கலை புழக்கத்தில் இல்லாத
வைபரில் உன் பெயரை
கிறுக்கியெழுதி
கீழே என் பெயரிட்டு
அனுப்புவதும் கூட ஒரு கலை
இப்படி எத்தனை கலைகளை
உருவாக்கினேன் என்பதை
கண்டும் காணாது என்னை முடக்குதல்
என்பது நூற்றாண்டுத் துயரம்
என்பதை அறிவாயாக

கௌதமி

# மறக்க வேண்டுமா மயிலிட்டியை?

இன்று போகலாம். நாளை போகலாம் என்று காத்திருக்கிறார்கள். இருபத்தைந்து ஆண்டுகள் என்றால் என்ன சாதாரண காலமா?





சிக்மலிங்கம் றெஜினோல்ட்

டேவிட் கமரோன் பதவியை விட்டுவிட்டு, பிரதமர் மாளிகையிலிருந்து போகும் காட்சியைக் கண்டு உலகம் கண்ணீர் விட்டது. ஏனோ தெரியவில்லை, எனக்கு அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருக்கும் சபாபதிப்பிள்ளை அகதி முகாமே நினைவில் வந்தது.

கடந்த ஆண்டுக்கு முதல் ஆண்டு கமரோன் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது சபாபதிப்பிள்ளை முகாமுக்கும் வந்திருந்தார். அந்த முகாமில் அப்படியொரு அதிசயம் நடக்கும் என்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. ஏன், பிரித்தானியப் பிரதமர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்றே எதிர்பார்த்திருக்காத ஒரு காலமே இருந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த கமரோன், அப்படியே சபாபதிப்பிள்ளை முகாமில் தங்கியிருந்த வலி வடக்கு அகதிகளைப் பார்த்தார் என்றால் அதை லேசாக நம்பமுடியுமா? அதிலும் எல்லோராலும் கைவிடப்பட்டிருந்த வலி வடக்கு அகதிகளைப் பார்த்துப் பேசுவதென்றால்!

## ஒரு தலைமுறைக் கால காத்திருப்பு

சபாபதிப்பிள்ளை முகாமிலிருக்கும் வலி வடக்கு அகதிகள் என்றால் மயிலிட்டிப் பகுதிச் சனங்கள்தான். இருபத்தைந்து ஆண்டுகளாக சபாபதிப்பிள்ளை முகாமலிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இவர்கள் இருக்கிறார்கள். இன்று போகலாம். நாளை போகலாம் என்று காத்திருக்கிறார்கள். இருபத்தைந்து ஆண்டுகள் என்றால் என்ன சாதாரண காலமா? வெள்ளி விழா ஆண்டு. இன்னொரு விதமாகச் சொன்னால் கால் நூற்றாண்டு. பிறந்த பிள்ளை திருமணம் முடித்துப் பிள்ளை பெறும் காலம். ஒரு தலைமுறைக்காலம்.

அன்று சபாபதிப்பிள்ளை முகாமில் இருந்த சனங்களுக்குக் கமரோன் சொன்னார், "நீங்கள் எல்லாம் விரைவில் உங்கள் சொந்த இடங்களுக்கு, சொந்த வீடுகளுக்குப் போகக்கூடியதாக இருக்கும்" என்று.

கமரோன் சொன்னால் தப்புமா? அவருடைய அந்த வார்த்தைகளைக் கேட்ட அத்தனை சனங்களும் சந்தோசத்தில் துள்ளிக்குதித்தனர். கமரோன் போய் விட்டார். இப்பொழுது அவர் பிரதமர் பதவியை விட்டு, பிரதமர் மாளிகையை விட்டும் போய்விட்டார். அப்படிப் போன கமரோனுக்கு சொந்த வீடிருந்தது. அவர் அங்கே குடும்பத்துடன் போனார்.

ஆனால், சபாபதிப்பிள்ளை முகாம் சனங்கள் இன்னும் அப்படியே, அதே முகாமில், இன்னும் சொந்த இடத்துக்கு, சொந்த வீட்டுக்குப் போக முடியாமல் அகதிகளாகவே இருக்கிறார்கள்.

## இரண்டாவது அதிசயம்

இதற்கிடையில் இரண்டாவது அதிசயமொன்றும் நடந்தது.

இப்படித்தான் ஒருநாள் யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி மைத்திரி வந்தார். எதை எண்ணினாரோ தெரியவில்லை. சபாபதிப்பிள்ளை முகாமுக்குப் போனார். அங்கே இருந்த அகதிக் குடிசையொன்றினுள் நுழைந்து, அங்கிருந்தவர்களுடன் கதைத்தார். அவர்களிடம் எதையோவெல்லாம் கேட்டார். "ஊருக்குப் போவதே தங்களுடைய விருப்பம்" என்றனர் எல்லோரும். "ஓ... தாராளமாகப் போகலாமே. விரைவில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றார் மைத்திரி. கையசைத்து விடைபெற்றுச் சென்றார்.


ஜனாதிபதி சொன்னால் சும்மாவா? நம்பிக்கையோடு காத்திருந்தனர் எல்லோரும். இந்த இந்த வாரம் போகலாம். அடுத்த கிழமை போகலாம் என்று. நாட்கள் வாரங்க்ளாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதம் வருடமாகப்போகுது.

ஆனால், மயிலிட்டிக்குப் போக வழியில்லை.

## போகும் வழி தெரியவில்லை

தலைவர்களின் இதயக்கதவு திறந்திருந்தாலும் படையினரின் பாதுகாப்புக் கதவுகள் திறக்கப்படாதிருப்பது ஏன்? அப்படியென்றால், தலைவர்களை விடவும் பாதுகாப்புத் தரப்பினர்தான் செல்வாக்குடையவர்களா? அவர்கள் தான் இந்த மாதிரி விசயங்களில் எதையும் தீர்மானிக்கும் வல்லமையைக் கொண்டிருக்கிறார்களா?

> முடப்பட்ட பாதைகள் இன்னும் திறக்கப்படவில்லை. சனங்கள் தட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். தேவன்கள் திறப்பதாயில்லை. சனங்கள் கேட்டுக்கொண்டேயிருக்கிறர்கள். தேவன்கள் செவிமடுப்பதாக இல்லை.



வலி வடக்கில் இன்னும் சனங்கள் குடியேறாமல் இருக்கின்ற பிரதேசங்கள் குறைவென்றாலும் அவை ஏதோ ஒரு வகையில் முக்கியமானவை. மயிலிட்டி, பலாலி, வறுத்தலைவிளான், கட்டுவன், வளலாய் மேற்கு என ஒரு பட்டியல் உண்டு.

## அலையாடும் கடலும் வலையாடும் மீனும்

எனக்கு மயிலிட்டி என்றால் நினைவுக்கு வருவது மீன்தான். அந்த மாதிரி மீன் மயிலிட்டிக்கு வரும். வடக்கிலுள்ள பெரிய மீன்பிடித் துறைமுகம் அங்கேதான் இருந்தது. அந்தப் பெரிய துறைமுகத்தில் அலையாடிக் கொண்டிருக்கும் நூற்றுக்கும் மேலான படகுகள். இரவு கடலோடும். காலையில் கரை மீளும். ஆழக்கடலில் போகும் படகுகள், ஆழமற்ற கடலில் கரை நீளம், நீளவோடும் படகுகள் என்று அது அதற்கு என்று தொழில்களும். தொழில்களுக்குத் தோதாக வலைகள். படுப்பு வலை, அறக்கொட்டியான் வலை, திருக்கை வலை, சூடை வலை அல்லது சாளை வலை, டிஸ்கோ வலை, எட்டிஞ்சி வலை, நாலு இழை, ஒன்பது இழை என்று.. ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொன்று.

## வாடியடித்து ஊர் மீளல்

எந்தக் காற்றுக்கும் மயிலிட்டியில் தொழில் இருக்கும். ஆனால், சில மாதங்களில் சீரிருக்காது. அந்த நாட்களில் நெடுந்தீவுக்குப் போவர். இன்னொரு சீசனுக்கு வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி, கட்டைக் காட்டுப் பக்கம் போவார்கள். வாடைக்காற்றில் நெடுந்தீவு என்றால், சோழகத்தில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, சுண்டிக்குளம். அங்கே போய் வாடியடித்து, தங்கி, தொழில் செய்து ஊர் மீளுவர்.

மயிலிட்டித்துறைக்கு வரும் மீனைக் கூறு வைக்கவும் கூவி அழைக்கவும் என்றொரு கூட்டம். அந்தக் கூட்டத்தில் தலையான்கள், தலைப்பெண்கள் என்று ஒரு அணி. கூறு மீனை நானும் வாங்கியிருக்கிறேன்.

(20 ஆம் பக்கம் பார்க்க...)



தொகுப்பு: அரவான்

# கம்பஸ் கலவரத்துக்கு பின்னால்...

இலங்கை முழுதும் கடந்தவாரம் பிரதான பேசுபொருள் யாழ். பல்கலைக்கழக 'அடிதடி' தான். விஞ்ஞான பீடத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் தமிழ் மரபான தவில்-நாதஸ்வர இசையுடன் கண்டிய நடனத்தை சிங்கள மாணவர்கள் ஆட முனைந்தபோது, தமிழ் மாணவர்கள் சிலர் அதைத் தடுக்க முற்பட்டனர். அது கைகலப்பாக மாற, அந்த இடமே கொஞ்ச நேரத்தில் ரணகளமாகிப் போனது. அதுவரையும் 'மச்சான்' என்று வாய் நிறைய அன்போடு அழைத்தவர்கள் மீதே இரு தரப்பினரும் இனத்தின் பெயரோடு கூடிய வசைச் சொற்களை அள்ளி எறிந்தனர். கையில் என்ன கிடைத்ததோ அதைக் கொண்டு மாறி, மாறி தாக்கினர். நிலைமை கட்டுமீற முதல் பொலிஸார் உள்நுழைந்ததால், பெரும் சமர் தவிர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இது குறித்து இரு தரப்பினரும் மாறி மாறி ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்துகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சிங்கள, தமிழ் மாணவர்களிடம் பெறப்பட்ட கருத்துகள் இங்கு தரப்படுகின்றன. இந்த கருத்துகள் எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம் பெறாதிருப்பதற்கு உதவக் கூடும்.

## குற்றச்சாட்டு- 1

**கண்டிய நடனத்தை வரவேற்பு நிகழ்வில் ஆட அனுமதி பெறப்படவில்லை**

### சிங்கள மாணவர்கள்

நான்கைந்து வருடங்களாக நாங்களும் எங்களது தமிழ் நண்பர்களும் இந்நிகழ்வை ஒழுங்குபடுத்துகிறோம். கடந்த வருடம் கூட நாங்களும் தமிழ் மாணவர்களும் திட்டமிட்டே நிகழ்வுகளை வடிவமைத்தோம்.

இந்த முறை எமது கலாசார கண்டிய நடனத்தையும் இணைத்துக் கொள்ளக் கேட்டோம். முதல் நாள் இரவு இது தொடர்பில் தமிழ் மாணவர்களும் நாங்களும் கதைத்து ஒரு முடிவுக்கு வந்தோம்.

ஆனால் நிகழ்வு நாளன்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இது தொடர்பில் தமக்கு உடன்பாடில்லையெனவும் சில மாணவர்கள் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் சொன்னார்கள். இதனால் இந்த பிரச்சினையை எமது பீடாதிபதிக்கு தெரிவித்தோம்.

பீடாதிபதி மற்றைய பீட மாணவர்களை தலையிட வேண்டாமென திருப்பி அனுப்பினார்.

பின்னர் இரண்டு ஆற்றுகைகளுமே வேண்டாமெனக் கூறினார். ஆனால் வரவேற்பு நிகழ்வு ஆரம்பித்த வேளை பீடாதிபதியின் வாக்குறுதிக்கு மாறாக, அவர்கள் (தமிழ் மாணவர்கள்) தங்கள் மங்கள வாத்தியங்களைக் கொண்டு விரிவுரையாளர்களையும் புதுமுக மாணவர்களையும் வரவேற்றனர். ஆகவே நாமும் எமது நடனத்தையும் நடாத்த விரும்பினோம். ஆகவே இரண்டாம் வருட சிங்கள மாணவர்கள் ஆடத் தொடங்கினார்கள். அதன்போது மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் எங்களைத்தாக்க வந்தனர். ஆகவே நாங்களும் திருப்பித்தாக்கினோம்.



### தமிழ் மாணவர்கள்

நிர்வாகத்தின் அனுமதி ஒருபோதும் கண்டிய நடனத்துக்கு வழங்கப்படவில்லை. வெள்ளிக்கிழமை நிகழ்வு ஒழுங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதுதான் கண்டிய நடனம் குறித்து தெரியப்படுத்தி உள்ளனர். இந்த நிலையில் எமது மரபார்ந்த வழக்கத்தின் படியே அழைப்பு நிகழ்வு நடைபெறும் எனத் தெரியப்படுத்தினோம். ஆனால் கண்டிய நடனத்தை நடத்தியே தீரவேண்டும் என சிங்கள மாணவர்கள் சிலர் விடாப்பிடியாக இருந்தனர்.

நிகழ்வு நடைபெறும் தினத்தன்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு, விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் கடிதத் தலைப்பில் 'வரவேற்பு நிகழ்வில் கண்டிய நடனம் நடைபெறும்' என்ற கடிதம் வந்தது. உடனேயே இது குறித்து விஞ்ஞான பீடாதிபதிக்கு தெரியப்படுத்தினோம்.

அதற்கு அவர் "இதில் நீங்கள் தலையிடமுடியாது சிங்கள மாணவர்கள் என்ன உடைபோட்டு ஆடினாலும் ஆடலாம். இதில் நீங்கள் தலையிடாமல் வெளியேறுங்கள்" என்று தெரிவித்தார். அதன்பின்னர் கண்டிய நடனத்தை நிறுத்தும்படி சிங்கள மாணவர்களிடம் பீடாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால் அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. கண்டிய நடனம் நடக்கா விட்டால், தவில்-நாதஸ்வர வரவேற்பும் நடக்கக் கூடாது என்று கூறியுள்ளனர்.

அதன் பின்னர் நிகழ்வு நடக்கும் போது, திடீர் என்று வெளியில் இருந்து அழைத்து வந்த கண்டிய நடனக்காரர்களை ஆட விட்டனர். அதை நாங்கள் தடுத்தோம். அவர்கள் அதற்கு அடிதடியில் இறங்கி விட்டனர்.

## குற்றச்சாட்டு- 2

**வெளியில் இருந்து- அதுவும் இராணுவப் புலனாய்வாளர்களை- கண்டிய நடனக்காரர்கள் என்ற போர்வையில் சிங்கள மாணவர்கள் அழைத்து வந்தார்கள்**

### சிங்கள மாணவர்கள்

இது அப்பட்டமான பொய். நாங்கள் எந்தவொரு இராணுவப் புலனாய்வாளர்களையும் பல்கலைக் கழகத்துக்குள் அழைத்து வரவில்லை. எமது பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் வருட மாணவர்களே கண்டிய நடனம் ஆடத் தயாராக இருந்தார்கள். மாணவர்களுக்கு புலனாய்வாளர்கள் என்ற சாயத்தை பூசாதீர்கள்.



### தமிழ் மாணவர்கள்



அவர்கள் வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட இராணுவப் புலனாய்வாளர்கள் தான். இதனை ஒன்றுக்கு பலமுறை உறுதிப்படுத்திய பின்னரே அவர்களைத் தடுக்க முனைந்தோம். இராணுவ வாகனத்தில் தான் அவர்கள் பல்கலைக் கழகத்துக்கு கொண்டு வந்து இறக்கி விடப்பட்டனர். சம்பவம் தொடர்பாக ஊடகங்களில் வெளியான புகைப் படங்கள், வீடியோக் காட்சிகளில் கண்டிய நடனக்காரர்களின் முகங்கள் தெளிவாகப் பதிவாகியுள்ளன. அதனை ஆராய்ந்தாலே அவர்கள் பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்களா, புலனாய்வாளர்களா என்ற உண்மை தெரிந்துவிடும்.

## குற்றச்சாட்டு- 3

**தமிழ் மாணவர்கள் மோசமான வன்முறையில் இறங்கியதால், சிங்கள மாணவர்களும், மாணவிகளும் காயமடைய நேரிட்டது.**

### சிங்கள மாணவர்கள்

கண்டிய நடனத்தை தடுத்த ஆத்திரத்தில் சிங்கள மாணவர்கள் சிலர், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளோடு கைகலப்பில் ஈடுபட்டனர். ஆனால் அதற்கு பின்னர், பொலிஸார் வருவதற்கிடையில் தமிழ் மாணவர்கள் ஹெல்மெட், ரெயின் கோட் அணிந்து வந்து எம்மைக் கடுமையாகத்தாக்கினர். இதன் போது எங்களில் சிலருக்கு காயமேற்பட்டது. குறிப்பாக பெண் மாணவிகளும் காலில் காயமடைந்தனர். ஆனால் எங்களை எந்தவொரு விஞ்ஞான பீட தமிழ் மாணவரும் தாக்கவில்லை.



### தமிழ் மாணவர்கள்

சம்பவம் நடந்த போது, தமிழ் மாணவர்களை விடவும் சிங்கள மாணவர்களே அதிகமிருந்தனர். அதனால் அவர்கள் தமிழ் மாணவர்களைச் சரமாரியாகத் தாக்கத் தொடங்கியிருந்தனர். அவர்களின் தாக்குதலில் இருந்து தமிழ் மாணவர்கள் விலகி வந்துவிட்டனர். அதன் பின்னும் சிங்கள மாணவர்கள் ஒன்று கூடி நின்று, இனவாத கோஷங்களை எழுப்பினர். கூச்சலிட்டு கேலி செய்தனர். அதன் பின்னர் விஞ்ஞான பீடத்தின் கண்ணாடி யன்னல்களையும், அலங்காரங்களையும் அடித்து நொருக்கத் தொடங்கினர். அப்போது சிதறி ஓடிய மாணவர்களும், மாணவிகளும் கண்ணாடித் துண்டுகள் பட்டதால் காயமடைந்தனர். அதனால் தான் அவர்களின் பாதங்களில் மட்டும் காயம் ஏற்பட்டது. சில சிங்கள மாணவர்கள் எம் மீது பழி போடுவதற்காகவும், தங்கள் கைகளில் தாங்களே கீறிக் கொண்டார்கள். நாங்கள் யாரையும் வெளியில் இருந்து அழைத்து வரவோ, சிங்கள மாணவர்களைத் திட்டமிட்டு தாக்கவோ இல்லை.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## மாணவர்களின் பக்குவம்

மீண்டும் ஒருமுறை யாழ். பல்கலைக்கழகம் இலங்கையர் அனைவரினதும் கவனத்தை தன்னை நோக்கி இழுத்துள்ளது. புகுமுக மாணவர் வரவேற்பின் போது ஏற்பட்ட சர்ச்சை அடிதடியாக மாறி அதற்கு தமிழ் - சிங்கள இனச்சண்டையாக சாயமும் பூசப்பட்டு விட்டது.

யார் முதலில் அடித்தது ? யார் பிரச்சினைக்கு அடித்தளமிட்டது? கண்டிய நடனம் தேவையா இல்லையா? என்ற கேள்விகளுக்கு அப்பால் இனிவரும் காலங்களில் இப்படியான பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பது எப்படி என்பது பற்றியே நாம் அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது.

பல்கலைக்கழகமென்பது தனியே பட்டதாரிகளை உற்பத்திசெய்யும் வெறும் தொழிற்சாலை அன்று. மாறாக அது நாளைய சந்ததிகளை கட்டமைக்கும் ஒரு நிறுவனம். எதிர்காலச் சந்ததி எப்படி சிந்திக்கப்போகின்றது, எந்த வழியில் பயணிக்கப்போகின்றது என்பதையெல்லாம் பல்கலைக்கழகமே தீர்மானிக்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்களுக்கிடையே மோதல்கள் நடப்பதென்பது இது முதல் தடவையல்ல. அநேகமாக வருடத்திற்கு ஒருமுறையேனும் மாணவர்கள் முட்டி மோதிக் கொள்ளவே செய்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் இரு பீடங்களுக்கிடையிலான முரண்பாடாகவோ அல்லது இரு வேறு வருட மாணவர்களுக்கு இடையிலான சச்சரவாகவோதான் இருக்கும். எனினும் இந்த முறைதான் பல்கலையில் நடந்த அடிதடி ஒன்றுக்கு தமிழ் - சிங்கள மாணவர்கள் மோதல் என்ற இன வாத அடையாளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது மிக ஆபத்தான அடையாளம். வேறெந்தச் சொல்லையும் விட, உணர்வையும் விட இனம் என்ற சொல் / உணர்வு மிகையான உணர்ச்சிவசப்பட்ட நிலைக்கு தள்ளக்கூடியது. இதனால் நிதானமான முடிவுகளை எடுக்க முதலே தவறான காரியங்களில் ஈடுபடும் அபாயம் உண்டு. யாழ். பல்கலையில் நடந்த மோதல், பலரிடம் இன்னொரு கறுப்பு ஜூலைக்கான விதையாகப் போய்விடுமோ என்ற அச்சத்தையே ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் 1983 ஜூலையில் திருநெல்வேலியில் நடந்த கண்ணிவெடித்தாக்குதலின் எதிரொலியாகத்தான் கொழும்பில் இன வன்முறை வெடித்திருந்தது. தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டிருந்தார்கள். சொத்துகள் சூறையாடப்பட்டன. அப்படியான ஒரு கறுப்பு ஜூலையாக இந்த வருடமும் அமைந்து விடுமோ என்ற ஏக்கமே பலரிடம் உருவாகியிருந்தது.

ஆனால் மோதலுக்குப் பின்னர் யாழ். பல்கலைக்கழக தமிழ் மாணவர்களும், சிங்கள மாணவர்களும், மாணவர் ஒன்றியங்களும், ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் நம்பமுடியாத நிதானப் போக்கை கடைப்பிடித்தார்கள். ஒவ்வொரு வார்த்தையையும் மிகக் கவனமாகவே வெளியிட்டார்கள். இந்த மோதலை வைத்து இன வன்முறையைத் தூண்டி அரசியல் இலாபம் தேட முயன்றவர்களின் வலைகளுக்குள் சிக்காமல் சாதுரியமாகச் செயல்பட்டார்கள். அதனால் இன்னொரு கறுப்பு ஜூலைக்கு இடமில்லாமல் போயிற்று. மாணவர்களின் இந்தப் பக்குவத்தை பாராட்டத்தான் வேண்டும். அதே சமயம் இந்தப் பிரச்சினைகளுக்கான மூலவேர்களைக் கண்டறிந்து களையவும் வேண்டும். அதுவே நிரந்த நிம்மதிக்கு வித்திடும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# கட்டுநாயக்கா: கலங்கிய கதை

மாயன்



இலங்கையை மட்டுமல்ல உலகையே உலுக்கிய தாக்குதல்களில் கட்டுநாயக்கா வான் படைத் தளம் மீதான கரும்புலித் தாக்குதலும் ஒன்று. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான படைச்சமநிலையை ஒரே நாளில் தலைகீழாக்கியது இந்த தாக்குதல்.

விடுதலைப்புலிகளின் கரும்புலிகள் வாகனத்திலோ அல்லது உடலிலோ வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு சென்று அதனை வெடிக்கவைத்து இலக்கைத் தகர்ப்பதே வழக்கமாக இருந்தது. எனினும் வான் படைத்தளங்கள் மீது இந்த உத்தி பலிக்காதென்பதால் கொமாண்டோ பாணியிலான ஊடுருவித்தாக்கும் கரும்புலிகள் அணியை புலிகள் 1990 களிலேயே உருவாக்க முனைந்தார்கள்.

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதலை 1993 நவம்பரில் புலிகள் நடத்திய போது 13 பேர் கொண்ட கரும்புலிக் கொமாண்டோ அணி பலாலி விமானத்தளத்துக்குள் தாக்குதல் நடத்தச் சென்றது. ஆனால் அது தோல்வியில் முடிந்தது. 13 கரும்புலிகளும் சாவடைந்தனர். அதன் பின்னர் 1994 ஓகஸ்ட் 2 இல் மேஜர் கெனடி தலைமையிலான கரும்புலிக் கொமாண்டோ அணி பலாலிக்குள் புகுந்து ஹெலி ஒன்றைத் தகர்த்திருந்தது. ஆயினும் அது கூட பூரண வெற்றியைத் தராத தாக்குதல் என்றே கணிக்கப்பட்டது.

இவ்வாறு இரண்டு தோல்விமுகங்கண்ட கரும்புலிக் கொமாண்டோ தாக்குதலில் இருந்து பாடங்கற்றுக்கொண்ட விடுதலைப்புலிகள் அடுத்த தாக்குதலை செம்மையாகத் திட்டமிட்ட முறையில் நடத்த முயன்றனர். இந்த முறை இலக்கு கட்டுநாயக்கா விமானப்படைத் தளமாக இருந்தது. வேவுத்தகவல்கள் துல்லியமாகச் சேகரிக்கப்பட்டன. 14 பேர் கொண்ட கரும்புலிகள் அணி தீவிர பயிற்சியின் பின்னர் கொழும்புக்குள் ஊடுருவியது.


2001 ஜூலை 23 ஆம் திகதி நள்ளிரவு மின்சாரம் தடைப்பட்ட சமயத்தில் காத்திருந்த கரும்புலிகள் அணி கட்டுநாயக்க விமானப்படைத்தளத்துக்கு பக்கத்திலிருந்த புறத்தரையூடாக முன்னேறியது. மின் தடை புலிகளின் நகர்வை படையினரின் கண்களில் இருந்து மறைத்திருந்தது. அடுத்த நாள் ஜூலை 24 அதிகாலை திட்டமிட்டபடி கரும்புலிகள் அணி தாக்குதலைத் தொடங்கியது. புலிகள் தலைநகரில் அதியுயர் பாதுகாப்பிலுள்ள வான்படைத் தளத்திற்குள் புகுந்த அதிர்ச்சியில் இருந்து படையினர் மீள்வதற்கிடையில் புலிகளின் கொமாண்டோ அணி அங்கிருந்த போர்விமானங்களையும், ஹெலி கொப்ரர்களையும் அழித்துவிட்டிருந்தது.

விமானப்படைத்தளத்திலிருந்த சகல விமானங்களையும் அழித்து / சேதப்படுத்திய பின்னர் கரும்புலிகள் தம்மைத்தாமே வெடிக்கவைத்து சாவடைந்தனர். இந்தத் தாக்குதலின் போது இலங்கை அரசுக்கு சொந்தமான நான்கு கிபிர் ரக குண்டு வீச்சு விமானங்கள் உட்பட 26 வானூர்திகள் அழிக்கப்பட்டிருந்தன. 14 கரும்புலிகளின் உயிர்த்தியாகத்தில் விடுதலைப்புலிகளின் மகத்தான வெற்றியொன்று இலங்கையின் தலைநகரில் பதிவுசெய்யப்பட்டது.

வழக்கமாக தலைநகரில் நடத்தப்படும் கரும்புலித்தாக்குதல்களின் போது பொது மக்களுக்கும் சேதமேற்படுவதுமுண்டு. ஆனால் கட்டுநாயக்கா தாக்குதலின் போது புலிகள் மிகச் சாதுரியமாக செயற்பட்டு எந்தவொரு பொதுமகனுக்கும் சிறுகாயம் கூட ஏற்படாமல் தாக்குதலை முடித்துக்கொண்டார்கள். இதன்போது கடைசியாக உயிரிழந்த கரும்புலி ஒரு கட்டத்தில் பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் உட்புகுந்த போதும், பொது மக்கள் இருந்த இடத்திலிருந்து விலகிச்சென்று யாருமில்லாத தனியறையொன்றுக்குள் புகுந்து தன்னைத்தானே வெடிக்க வைத்திருந்தார்.

இந்தத் தாக்குதலால் நிலைகுலைந்த இலங்கையரசு புலிகளோடு பேச்சு நடத்த மேசைக்கு வந்தது. தமது வரலாற்றில் அதி உச்ச வெற்றியைப் பெற்றுத்தந்த கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீதான தாக்குதலை தாமே நடத்தினரென்று புலிகள் ஆரம்பத்தில் உரிமை கோரவில்லை. இரண்டு வருடங்களுக்கு பின்னர் தான் அந்தத் தாக்குதலை நடத்தியது தங்களின் கரும்புலிக் கொமாண்டோ அணி என்று புலிகள் ஒப்புக்கொண்டார்கள். 15 வருடங்கள் கடந்த பின்னரும் கூட இன்று வரை அந்தத் தாக்குதலில் சாவடைந்த கரும்புலிகளின் பெயர்களை புலிகள் கடைசி வரை உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை. அவர்கள் மண்ணுக்குள் முகம் மறைத்து உறங்கும் மாவீரர்கள்.

# அலம்பல் ஆச்சி



செல்வி

கனகாலத்துக்குப் பிறகு நாட்டுக்கு வந்து பாக்க புத்தர் சிலைகளெல்லாம் அருள் வழங்க நாடு நல்ல அமைதியாக் கிடந்துது. கடையள் கட்டடங்கள் எல்லாம் சோக்கா இருந்திச்சுது. நல்லிணக்கம் வரப்போகுதோ எண்டு சரியாக் கவலைப்பட்டனான்.. என்ன கவலை எண்டு யோசிக்கிறியளோ? பிரச்சினை இருந்தா எப்பிடி அரசியல் நடக்கும்? ஆக்களெல்லாம் சோம்பல் பத்திடுவினை. பம்பல்.. முசுப்பாத்தியள்.. எல்லாம் இல்லாமை போயிடும்... நினைச்சு முடிக்கேல்லை... யாழ்ப்பாணக் கம்பசிலை சிங்களப் பெடியளும் தமிழ்ப் பெடியளும் சண்டையாம்.. என்ன விசயமெண்டு கேட்டா... புதுசா வாற பெடி பெட்டையளை வரவேற்கிற நிகழ்ச்சியிலை கண்டிய ஆட்டம் ஆடோணுமெண்டவையாம். இதென்னடாப்பா... எனக்கு தெரிஞ்ச அளவிலை மேளதாளத்தோடை தான் இவ்வளவு காலமும் வரவேற்றவை.. தெற்கிலை கண்டிய நடனமாடினா அதை அவையோடை வைச்சுக்கொள்ளோணும்.

எதுக்கு எங்களிட்டை கொண்டுவாறியள்? ஆனா உதிலை ஒரு விசயம் இருக்கு கண்டியளோ. தமிழனைக் கண்டாலே பயந்த சிங்களவன் இண்டைக்கு தமிழன் தாயகத்திலை நிண்டுகொண்டு சண்டித்தனம் காட்டுறாங்களெண்டா.. அது சும்மா சின்னப் பிள்ளைச் சண்டை எண்டு விட்டுட்டு போகேலாது.. அதுவும் யாழ்ப்பாண கம்பஸ் என்டுறது எங்கடை தேசியத்தின்ரை ஒரு அடையாளம்.. அதுக்கை வந்து அவையின்ரை விளையாட்டு.. அப்பிடி கண்டி ஆட்டம் கொழும்பு ஆட்டம் என்னெண்டாலும் ஆடோணுமெண்டா மாணவர்களின்ரை நிகழ்ச்சியா செய்திருக்கலாம்.. அதுதான் சோடி சோடியா ஆடுற ஆட்டமெல்லாம் போன முறை ஆடினீங்கள் தானே.. அதிலை ஆடுறதை தடுக்க ஏலாது.. அவைக்கு அந்த உரிமை இருக்கு.. ஆனா.. பாரம்பரிய வரவேற்பு முறையிலை அவையின்ரை வாலை நீட்டேலாது.

சரி.. பெடியளும் பெடியளும் சண்டை போட்டுதுகள்.. உவையேன் அவசரம் அவசரமாய் அந்தரப்பட்டு அதுகளை வசுவேத்தி அனுப்பினவை.. உவையளுக்கு சிங்கள ஆக்கள் தமிழாக்கள் மேலை துவேசமா இருக்கோணும்.. இல்லாட்டி சாப்பாடு தொண்டைக்காலை இறங்காது போலை கிடக்கு.. இதிலை இருக்கிற மறைஞ்சிருக்கிற நிகழ்ச்சி நிரல் என்னெண்டு விளங்கிக்கொள்ளுங்கோடாப்பா... கண்டிய நடனம் இல்லை பிரச்சினை.. வரலாறு அப்பிடியே திரும்புது... நல்லிணக்கமெல்லாம் மதத்தின்ரை பெயராலை இனவாதத்தை படிச்சு வைச்சிருக்கும் மகாவம்சத்தின்ர மாத்தையாமாரிட்டை வேகாது... இண்டைக்கு கதிர்காமம் போற ஆக்களுக்கு அடிப்பாங்கள்.. நாளைக்கு மற்ற கம்பசுகளிலை படிக்கிற எங்கடை பெடிபெட்டையள் பாவம்.. பிறகு யாழ்ப்பாண வசுக்கள் எரியும்..

இதிலை பம்பல் என்னெண்டா கம்பசோடை சம்மந்தப்படாதவங்கள் எல்லாம் கைக்கு வந்தபடி எழுதுறாங்கள்.. வெளியிலை இருக்கிறவை எழுதக்கூடாதெண்டில்லை... ஆனா கதை விளங்காமைக் கதைக்கிறாங்கள்... கண்டிய நடனம் தான் பிரச்சினை எண்ட போலை கதைபோட்டுது... ஏன் ஆடவிட்டிருக்கலாம் தானே எண்டுகினை.. அறப்படிச்ச காகிதப் போராளியள்.. தெற்குப் பல்கலைக்கழகத்தின்ர வரவேற்பு நிகழ்ச்சியிலை மேள தாளத்தோடை (பறையும்) அடிச்சு ஒரு நாட்டுக்கூத்தொண்டு ஆடுங்கோவன் பாப்பம். ஆச்சி உதெல்லாம் கதைக்கலாமோ எண்டு பாக்காதேங்கோ... ஆச்சியும் பழைய மாணவிதான்டாப்பா..

எது எப்பிடியெண்டாலும் இனியொருக்கா பிள்ளையளை அடிபாட்டுக்கு அனுப்பிப்போட்டு கோயில் கோயிலா திரியிற அளவுக்கு எங்கடை இனத்திட்டை சக்தி இல்லை.. இணையத்தளங்களிலை அடிபடுற எண்டா வாங்கோ.. கனபோராளியள் இருக்கினை... சும்மா சுண்டிச் சுண்டி அடிபடுவாங்கள்.. ஆனா கம்பசுகளிலை படிக்கிற எங்கடை பெடியள் தான் பாவங்கள். இனி அதுகளுக்கு மேலை ஒழுக்காற்று நடவடிக்கை எல்லாம் வரும்.. உதே போலை சம்பவம் கிழக்கிலங்கையிலை நடந்து இப்ப தமிழ்ப்பெடியள் தான் விசாரணைக்கு போகோணும் எண்டு செய்தி வந்திருக்கிது.. யாழ்ப்பாண கம்பஸ் தமிழ்ப் பெடியளையும் விசாரணைக்குக் கூப்பிட்டு பிணையில விட்டிருக்காம். தமிழ்ப் பெடியளை விசாரணைக்குக் கூப்பிட்டவை ஏன் சிங்களப் பெடியளை கூப்பிடேல்லை?

உது திடீரெண்டு நடந்த பிரச்சினை இல்லை மோனையவை.. திட்டம் போட்டு செய்திருக்கிறாங்கள்.. கொஞ்சம் கொஞ்சமா சிங்கள மாணவர்களை உள்வாங்கி.. தமிழ் பெடியளின்ரை அளவுக்கு வரச்செய்திட்டாங்கள்.. பாவம் எங்கடையள்.. முதுகெலும்பில்லாத அதிகாரங்களிட்டை நசியப்போதுகள்.. ம்ம்.. என்ன செய்யிறது எல்லாம் காலம்.. யோசிக்காதேங்கோடாப்பா... எங்கடை புளியும் பூக்குந்தானே.

# கனவு அணி

"லோர்ட்ஸ்", நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கமைய டெஸ்ட் போட்டிகளை மையமாக வைத்து அவ்வப்போது, கிரிக்கெட் ஜாம்பவான்கள், தமது கனவு அணியை வெளியிடுவது வழமை. சிலசில வேளைகளில் காரணங்காட்ட முடியாதளவு, புறக்கணிக்கத்தக்கவர்களும் அவ் அணியில் இடம் பெறத் தவறுவதில்லை. ஆயினும் கனவு அணியை அறிவித்தவரின் மனதில் அதற்கான நியாயப்படுத்தத்தக்க காரணம் இருக்கலாம்.

டெஸ்ட் கனவு அணி போல, எமது வடக்கு மாகாண சபை அங்கத்தினரையும் உள்ளடக்கியதாக ஓர் அரசியற் செயற்பாட்டு கனவு அணி ஒன்றை அறிவிக்க அல்லது, உள்ள 31 பேரை அவர்களது நடவடிக்கைகள், செயற்பாடு ரீதியாக வரிசைப்படுத்தினால், யார் முன்னணியில் நிற்பர் என்கின்ற ஒரு ஏக்கம் எனக்கு உண்டு.

மந்திரிமாரை விலக்கி ஏனைய உறுப்பினர்களை வரிசைப் படுத்தினால் அதில் முதலிடத்தில் யாரிருப்பர் என எடை போடுவது ஒரு சுகமான அனுபவம். அவர்களால் ஆற்றப்பட்ட உரைகள், செயற்பட்ட விதம், கருத்துக்களை முன் வைக்கும் பாங்கு, மக்களுடன் மக்களாக இணைந்து கொள்ளல், பிரச்சினைகளை அறிந்து வைத்திருத்தல், மக்களை விழிப்பூட்டல், ஆக்கபூர்வமான வெளிப்படுத்துகை, போன்ற இன்னோரன்ன அம்சங்களை கருத்திற்கொண்டு, யார் தூக்கலாக நிற்கின்றார்கள் என்று காய்தல், உவத்தல், கட்சி, காட்சி, பால், சமய பேதமின்றி ஒரு முறை எனக்குள் வரிசைப்படுத்திப் பார்த்தேன்.

அடுத்த முறை தேர்தல் ஏதாவது வந்தால், அவ்வாறு வந்து தற்போதுள்ளவர்களில் யாருக்கு வாக்களிப்பது போன்ற தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள தேர்தல் வருமுன் சிந்திப்பது நல்லது என்று தோன்றியது. அதனால் தூங்காது விழித்திருந்து கனவு நாயகனை அல்லது நாயகியை என் மனக்கண் முன் கொண்டு வந்தேன். 31 - 4 இல், முதல் மூன்று இடங்களில் யார் வருவர், அல்லது யாரை நான் சிபார்சு செய்யலாம் என்றால் முதலில் என் கண்முன் நிற்பவர், சாட்சாத் முல்லை ரி. ஆர்.தான். மக்களுக்குக் "கரம்" கொடுப்பவராக, என்னளவில் காணப்படுகின்றார்.

அப்போ இரண்டாவது மூன்றாவது நான்காவது இடங்களைப் பெறுபவர் யார் என்று நீங்கள் கேட்பது எனக்குக் கேட்கிறது. இப்ப என்ன அவசரம். தேர்தலுக்கு இன்னும் காலமிருக்கின்றது. அவ்வேளை பார்த்து பலர், தமது "மக்ஸிமம் பவரைக்" காட்டுவர். அப்போது "பினிஸிங்கில்" நான் முன் வைத்த கன்வு நாயகன் பின் தள்ளப்படவும் கூடும். அல்லாமலும் இதுபற்றி எதிர்வுகூற நான் பெரிய அரசியல் ஜாம்பவானும் அல்லன். கண்ட கனவை யாரோடாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதால் எழுதினேன்.

அல்லாமலும் காலஞ்சென்ற எங்கள் தந்தை செல்வநாயகம், தமிழரை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறியிருந்தார். அதில் மாறுபட்ட கருத்துக் கொண்டவன் நானில்லை. ஆனாலும், யாரிடமிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்று சொல்லி வைக்காதது ஒரு குறையாகவே எனக்குத் தோன்றுகின்றது.

ஏனெனில் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த நாம் ஒன்றாகச் சென்றதில்லை. முள்ளிவாய்காலில் உயிர் நீத்தோருக்கும் அவ்வாறே. அண்மைய தாண்டிக்குளம், ஓமந்தைப் பிரச்சினையிலும் அதே, அதே. ஆயினும் பெரியளவில் இடைவெளியில்லை. ஒரு ஆறு, ஏழு கிலோ மீற்றர் இடைவெளிதான் எமது தரப்பினரிடம் உள்ளது. தாண்டிக்குளத்துக்கும், ஓமந்தைக்குமிடையிலுள்ளது கொஞ்சம்தான். இலங்கையின் நீள அகலம் உலகின் சுற்றளவு அதனுடன் ஒப்பிடுகையில் இந்த 7 கி.மீ என்பது மிக அற்பமானது. விஞ்ஞான ரீதியிற் சொன்னால், "புறக்கணிக்கத்தக்களவு" இடைவெளியே எமது பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் வடமாகாண சபையினிடையே உள்ளது. அவ்வாறானவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவும் ஒன்றாகப் போவதில்லை. ஏனெனில் சுதந்திரம் என்பது ஒன்றல்ல. ஒன்றிற்கு மேற்பட்ட சுதந்திரங்கள் உள்ளன. அதனை அன்றே பாரதியார், பாடி வைத்தான். "வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின் வேறொன்று கொள்வாரோ?" என்று. ஆகவே வீர சுதந்திரம் என்று ஒன்று உள்ளது. அப்போ மற்ற சுதந்திரம் எது? அதனை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகின்றேன்.

செல்லப்பா

# நாசமாக்கப்படும் யமுனா ஏரி



தணிகன்

> தென்னிலங்கை பகுதிகளில் சென்று பார்த்தால் தெரியும் அங்குள்ள ஒவ்வொரு வரலாற்று சின்னங்களும் தொன்மங்களும் மிகக்கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றது. இனத்தின் வரலாறு என்ற ஒரு விடயத்துக்கு தான் அவர்கள் எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

யாழ்ப்பாண வைபவ மாலையின் படி 'யமுனா ஏரி' யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தி வம்ச மன்னனான சிங்கையாரியச் சக்கரவர்த்தி காலத்தில் கட்டப்பட்டது எனக் கூறப்படுகின்றது. 1478 ஆம் ஆண்டில் இந்தியாவின் யமுனா நதி நீர் கலக்கப்பட்டதால் இது பின்னர் யமுனா ஏரி என அழைக்கப்பட்டது.

இது யாழ்ப்பாணத்தைக் கடைசியாக ஆண்ட சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த சங்கிலித்தோப்பு வளவில் உள்ளது.

ஒல்லாந்தர் காலத்திலும் இக் கேணியானது, பூங்காவின் மத்தியிலே குளிப்பதற்கு உரிய குளமாகவோ அல்லது அழகூட்டும் நோக்குடனோ பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகளை அக்காலத்து வரைபடங்களில் காண முடிகின்றது. மந்திரிமனைக்கும் யமுனா ஏரிக்குமிடையே தரைக்குக் கீழாக சுரங்கப் பாதையொன்று புராதன காலத்தில் அமைந்திருந்தது என்றும் நம்பப்படுகின்றது.

## ஒல்லாந்த வடிவமைப்பு

யமுனா ஏரியானது பொழிந்த முருகைக்கற்களையும், வெள்ளைக்கற்களையும் கொண்டு கட்டப்பட்ட பகர வடிவிலமைந்த ஒரு கேணி ஆகும். தற்போதைய இவ்வேரியின் தோற்றமானது ஒல்லாந்தர் காலத்தில் வடிவமைக்கப்பட்டதாகும். கோட்டைக்குரிய சுவர் அமைப்பு முறையிலே இவ்வேரியின் இறுதிவடிவம் ஒல்லாந்தர் காலத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

யமுனா ஏரி மற்றும் சங்கிலித்தோப்பு என்பன அமைந்திருக்கும் பகுதி யாழ். வண்ணார் பண்ணை சிவன் ஆலயத்தின் நம்பிக்கை சொத்து. ஆனாலும் இவை அமைந்திருக்கும் காணிகள் தனியாருக்கு சொந்தமானவை என்று ஒரு குழுவினர் உரிமை கோருகின்றனர். இது சம்பந்தமான வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாகத் தெரிகிறது.

## யாருக்குச் சொந்தம்?

இன்னொரு புறம், யமுனா ஏரியை யாழ்.மாநகர சபையின் முன்னைய நிர்வாகம் தனியாருக்கு விற்பனை செய்துவிட்டதாக தற்போதைய மாநகர சபை குற்றம் சாட்டுவதாகவும் அதை முந்தைய நிர்வாகமும் மாகாண சபையும் மறுப்பதாகவுமாக எந்தவொரு தெளிவான விளக்கம் இல்லாத நிலை தான் இன்றும் நிலவுகின்றது.

எனினும் யமுனா ஏரி, மந்திரிமனை, சங்கிலி வளைவு, சங்கிலித்தோப்பு என்பன பல நூற்றாண்டுகள் பழமையான தமிழ் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் கலைகளையும் பறைசாற்றுகின்ற வரலாற்றுத் தொன்மங்கள். அதை மறந்து தத்தமது சுயலாபத்துக்காக எமது வரலாற்றுத் தொன்மம் கண் முன்னே அழிந்தொழிந்து போவதை சிரத்தையில்லாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

## அக்கறை அவர்களுக்கு அலட்சியம் எங்களுக்கு

சிங்கள மக்களுக்கும் எமக்கும் உள்ள மிகமுக்கியமான வேறுபாடு இதுவே. வரலாற்றை பாதுகாத்தல். தென்னிலங்கை பகுதிகளில் சென்று பார்த்தால் தெரியும் அங்குள்ள ஒவ்வொரு வரலாற்று சின்னங்களும் தொன்மங்களும் மிகக்கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன. இனத்தின் வரலாறு என்ற ஒரு விடயத்துக்கு தான் அவர்கள் எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

அது நூறடித் தூபியாக இருந்தாலும் சரி, ஒரு அடி செங்கல்லாக இருந்தாலும் சரி, ஆயிரமாண்டு பழமையாக இருந்தாலும் சரி, நூற்றாண்டு பழமையாக இருந்தாலும் சரி, அவர்களைப் பொறுத்தவரை அவை எல்லாமே என்றும் முக்கியமானதும், பாதுகாக்கப்பட வேண்டியமானதாகவே கருதுகின்றனர். அரசு பொறுப்பெடுக்கத் தவறுமிடத்து அந்தந்த பகுதி மக்களே அந்தப் பொறுப்பை எடுத்து திறம்பட செய்கின்றனர்.

ஆனால் நாங்கள் அப்படியா? அரசும் அக்கறை எடுப்பதில்லை, அரச அதிகாரிகளும் கவனிப்பதில்லை, ஊர் மக்களுக்கும் நேரம் கிடைப்பதில்லை. பாதுகாப்பது தான் இல்லை என்றாலும் கூட நாசமாக்காமலாவது இருக்கின்றோமா என்றால் அதுவும் கிடையாது. எல்லா நாச வேலைகளையும் நாங்களே செய்கின்றோம்.

ஒரு இனத்தின் அடையாளம் அதனது மொழி என்றால் அவ்வினத்திற்கு அர்த்தம் தருவது அதனது வரலாறு. அதைத்தான் நாம் அழித்துக் கொண்டிருக்கின்றோம். அழிவதைப் பார்த்தும் பாராமல் இருக்கின்றோம்.

யாழ்ப்பாண அரும்பொருளகத்திலுள்ள மட்பாண்ட ஓடுகள், இந்து தெய்வ சிலைகள் பெரும்பாலானவை இந்த யமுனா ஏரியிலிருந்தே எடுக்கப்பட்டவை. போர்த்துக்கீச காலத்தில் பெரும்பாலான இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டதாகவும் அதன் போது அக்கோயில் சிலைகள் இந்த ஏரியில் தான் போடப்பட்டதாகவும் வரலாற்று பதிவுகளுள்ளன. எனில், எமது வரலாற்றின் ஒரு பகுதி இன்னமும் இந்த ஏரியின் அடியில் தான் உறங்கிக்கொண்டிருக்கின்றது.

யமுனா ஏரியை சுற்றி உள்ள பகுதிகளும் வரலாற்று எச்சங்களை தன்னகத்தே கொண்டிருப்பினும் அவற்றை மறந்து அதன் மேல் குடியிருப்புக்கள் எழுப்பப்பட்டுள்ளன. ஏரிக்கு அருகில் வலயக்கல்வி திணைக்களத்தின் புதிய கட்டடத்தொகுதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. அதன் போதும் ஒருதொகை புராதன சின்னங்களும் கடவுள் சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றை அரும்பொருளகத்திலாவது ஒப்படைத்திருக்கலாம். ஆனால் அவை அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கின்றன.

## எஞ்சிய ஒரே ஒரு புகைப்படம்

அச்சமயம் எடுக்கப்பட்டவை எல்லாம் அழிக்கப்பட்டு விட்டதாகவும் அங்கு கிடைக்கப் பெற்ற சின்னங்களுக்கு ஆதாரமாய் ஒரு புகைப்படம் மட்டுமே எஞ்சியிருப்ப தாகவும் தொல்லியல் திணைக்கள ஊழியர் ஒருவர் தெரிவித்தார். வரலாற்றை அழித்தல் ஒரு இனத்தின் ஆதாரத்தின் அழிவு என்பதை கூட அறியாத மூடர்களாகவும் சுயநல வாதிகளாகவும் இருப்பதற்கு நாம் வெட்கப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் யமுனா ஏரியின் நான்கு கரைகளிலும் ஏரிக்கட்டுடன் ஒத்ததாக குடியிருப்புகளின் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அக் குடியிருப்புகளுக்கான நீர் விநியோகம் கூட அந்த ஏரியிலிருந்தே பெறப்படும் போதும் அந்த ஏரியை சுத்தமாக வைத்திருக்கவோ பாதுகாக்கவோ அக்குடியிருப்பு வாசிகள் எந்த முயற்சியும் எடுத்ததாக தெரியவில்லை.

ஏரிக்கட்டுகளில் நின்று குளித்து துணி துவைத்ததை அங்கிருக்கும் வெற்று சவர்க்கார உறைகளும் ஷாம்பு பக்கற்றுகளும் சொல்லுகின்றன. தமது சொத்து போல உரிமை எடுத்து அந்த ஏரியை பாவித்து அதிலிருந்து பயன்பெறும் அப்பகுதி மக்கள் கூட அதே உரிமையுடன் அதைப் பாதுகாக்க மறந்தது தான் ஏன் என்று தெரியவில்லை.

ஏரிக்குள் எண்ணற்ற பொருட்கள் மிதக்கின்றன. அதில் பெரும்பாலானவை மதுபான போத்தல்களே. மிதப்பவையே ஏராளமானதாய் இருக்கும் போது நீரில் மூழ்கியிருக்க கூடியவை நிச்சயம் எண்ணற்றதாய் இருக்கும். ஏரியைச் சுற்றியும் நிறைய மதுபான போத்தல்களும் பொலித்தீன்களுமே தென்படுகின்றன. இது நிச்சயமாக இன்னும் பல வருடங்களில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழன் குடியில் சிறந்து விளங்கினான் என்று பறைசாற்றும்.

இது பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள தொல்லியல் திணைக்கள ஊழியர்களிடம் கேட்டிருந்தேன். "ஏன் இதற்கு ஒரு வேலி அமைத்து எல்லைப்படுத்தி பாதுகாக்கவில்லை?" என்று "இன்னும் அதற்கான காணி உரிமம் எமக்கு கிடைக்கவில்லை. வழக்கு நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. இப்போது தான் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, நாங்கள் இங்கு புதுசா வந்து மூன்று வருடங்கள் தான்" என்று பல்வேறுபட்ட் பதில்கள் காரணங்களாக முன் வைக்கப்பட்டன.

## நம்மை நாமே நாசமாக்குவோம்

குறைந்த பட்சம் ஒரு பெயர்ப் பலகையும் அறிவுறுத்தல் பலகையும் கூட அமைக்க முடியாத கையாலாகாத நிலையில் தான் தொல்லியல் திணைக்களமும் மாநகர சபையும் மாகாண சபையும் உள்ளன. அரசையும் அரச அதிகாரிகள் பற்றியும் நன்கு தெரிந்த அப்பிரதேச மக்களாவது தாமாக முன் வந்து ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

ஆனால் அங்கு எதுவும் நிகழவில்லை. எப்போது நிகழுமென்றும் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்றது. நாசமாக்கல். நம்மை நாமே அழிப்போம். கூடவே எமது வரலாற்றையும் சேர்த்தே அழிப்போம். ஏனெனில் நாம் தமிழர்கள்.

நம்மை அழிக்க வெளியிலிருந்து ஒருத்தன் வர வேண்டாம்... நாமே அழிந்து கொள்வோம்.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# கம்பஸ் கலவரத்துக்கு பின்னால்...

## குற்றச்சாட்டு- 4

**நிகழ்ச்சி நிரலில் இல்லாத போதும் சிங்கள மாணவர்கள் கண்டிய நடனத்தை நடத்த முற்கூட்டியே இரகசியத் திட்டத்தோடே இருந்தார்கள்.**

### சிங்கள மாணவர்கள்

எந்தவொரு திட்டமும் எங்களிடம் இல்லை. "கண்டிய நடனமும் நடக்காது, அதேபோல தவில்- நாதஸ்வர வரவேற்பும் நடக்காது" என்றே பீடாதிபதி கூறியிருந்தார். அதை நாங்களும் நம்பினோம். ஆனால் திடீரென நாதஸ்வர இசையோடு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்ட பின்னர்தான், உண்மை புரிந்தது. அதனால் உடனேயே இரண்டாம் வருட மாணவர்களின் கண்டிய நடனத்தை அதில் இடம் பெற செய்ய முடிவெடுத்தோம்.

### தமிழ் மாணவர்கள்

அவர்கள் முன்னரே இப்படிக் கண்டிய நடனம் ஆடுவது என்று திட்டமிடாவிட்டால் எப்படி உடனடியாக கண்டிய நடனம் ஆடுபவர்கள் ஒப்பனையோடு உடனடியாகக் களமிறங்க முடிந்தது. அத்துடன் கடந்த நான்கு வருடங்களாக சிங்கள மாணவர்களுக்கு வராத கண்டிய நடன நினைப்பு, இந்த வருடம் மட்டும் திடீரென வந்தது எப்படி? அப்படி வந்ததோடு மட்டுமல்லாமல் அதை நடத்தியே தீருவது என்று விடாப்பிடியாக நின்றதும் பல சந்தேகங்களை எழுப்புகின்றது.

## குற்றச்சாட்டு- 5


**ஒரு சில மாணவர்களே தாக்குதலின் சூத்திரதாரிகள்**

### சிங்கள மாணவர்கள்

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருப்பது விஞ்ஞான பீட தமிழ் மாணவர்கள் இல்லை. அது எமக்குத் தெளிவாகத் தெரியும். ஏனைய பீடங்கள் மற்றும் மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த சிலர்தான் இந்தத் தாக்குதலின் பின்னணியிலும், முன்னணியிலும் நின்று செயற்பட்டனர். அவர்கள் தான் இதை ஒரு இனவாத விடயமாகப் பெரிதுபடுத்தி எமக்குள் முரண்பாட்டை வளர்த்தார்கள். எமது பீட தமிழ் மாணவ நண்பர்களுடன் இரண்டு வருடமாக வாழ்கிறோம். அவர்களைப் பற்றி எங்களுக்கும், எங்களைப் பற்றி அவர்களுக்கும் நன்கு தெரியும்.எம்மைத் தாக்கியவர்களிலும் எமது பீடத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் இருக்கவில்லை. ஏனைய பீடத்தைச் சேர்ந்தவர்களே எம்மைத் தாக்கினர்.

### தமிழ் மாணவர்கள்

சிங்கள மாணவர்கள் எல்லோருமே இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்படவில்லை. ஒரு சிலர் தான் கண்டிய நடனத்தைக் கட்டாயம் ஆட வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். ஏனைய சிங்கள மாணவர்கள் மத்தியிலும் கண்டிய நடனம் ஆடப்பட வேண்டும் என்ற கருத்தையும் இவர்கள் தான் பரப்புரை செய்தனர். அன்றைய சம்பவத்தின் போது, நாலைந்து மாணவர்கள் தான் பொல்லுகள், தடிகள், இரும்புக்கம்பிகளோடு தமிழ் மாணவர்கள் மீது இனவாதக் கோசங்களோடு, தாக்கினார்கள். அப்படியான ஒரு சிலரின் நடத்தையால், ஒட்டு மொத்த சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களுக்கு எதிராக நின்றார்கள், கண்டிய நடனத்தை ஆட வேண்டும் என பிடிவாதமாக நின்றார்கள் என்பது போன்ற விம்பம் ஏற்பட்டு விட்டது.






இப்படி இருதரப்பும் தமது பக்க நியாயங்களை எடுத்துரைக்கிறார்கள். அவரவர் பக்கத்தில் அவரவர் நியாயம் சரியானதே. இவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது இரு தரப்பிலும் ஒரு சிலரே இந்த வன்முறைக்கு தூபம் போட்டுள்ளார்கள். சாதாரண ஒரு மாணவர் முரண்பாட்டை இன முரண்பாடாக சித்திரிக்க அவர்கள் முயன்றுள்ளார்கள். அவர்களை இனங்காண்பதன் ஊடாக எதிர்காலத்தில் இத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறுவதைத் தடுக்க முடியும்.

நல்ல வேளையாக யாழ். பல்கலைக்கழக மோதலை ஏனைய பல்கலைக்கழக மாணவர்களோ, தமிழ் சிங்கள ஊடகங்களோ ஊதிப் பெரிதாக்கவில்லை. அதனால் ஒரு பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. ஒரு சில சிங்கள அரசியல்வாதிகள் இதனை ஒரு இனவாத விடயமாக மாற்ற முயன்று ஊளையிட்டுத் தோற்றுப்போனார்கள். இதைவிட மிக முக்கியமானது என்னவெனில் பல்கலைக் கழக நிர்வாகத்தின் முதுகெலும்பற்ற ஆளுமைத் திறன்தான். இந்த விவகாரம் தொடர்பில் ஆரம்பத்திலேயே துணைவேந்தரோ அல்லது விஞ்ஞான பீடாதிபதியோ தீர்க்கமான ஒரு முடிவினை வெளிப்படுத்தி இருந்தால், இந்த மோதல் இடம் பெறுவதற்கான சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காது என்று தமிழ் - சிங்கள மாணவர்கள் ஒரே குரலில் கூறுகிறார்கள். தமது கதிரைகளைத் தக்கவைப்பதற்காக நிர்வாக பீடத்தில் உள்ளவர்கள் முடிவுகளை நழுவல் போக்கில் விட்டுவிடுவது எத்தகைய விபரீதத்தை உண்டுபண்ணும் என்பதற்கு இந்தச் சம்பவமே மிகச் சிறந்த எடுத்துக் காட்டு. இனியாவது மாணவர் சம்பந்தப்பட்ட விடயங்களில் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும். அதுவே மாணவர் நலனுக்கும், பல்கலைக்கழக நலனுக்கும் உகந்தது.



## இனிமேல் மாணவர்களின் நிலைப்பாடு என்ன?



**பதும் வீரசிங்க**
(யாழ் பல்கலைக்கழக சிங்கள மாணவர் ஒன்றியத் தலைவர்)

அன்று நடந்தது உண்மையில் இரு இனங்களுக்கிடையிலான மோதல் அல்ல. இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையிலான மோதலே. பெரும்பாலான சிங்கள மாணவர்கள் அச்சத்தின் காரணமாக சொந்த இடத்துக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்துக்கு திரும்பச் சென்றால் எங்கேனும் தாக்கப்படக்கூடும் என்ற அச்சம் இப்போதும் உள்ளது.
எனவே பல்கலைக்கழகத்துக்கு பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டால் மாத்திரமே மீளவும் சிங்கள மாணவர்களாகிய நாம் யாழ் பல்கலைக்கழகத்திற்கு வருவதென முடிவெடுத்துள்ளோம். அத்துடன் இனிவரும் காலங்களில் இத்தகைய முரண்பாடுகளைத் தவிர்க்க எமக்கென (சிங்கள மாணவர்களுக்கென) தனியான விடுதி வேண்டும் எனவும் கோரவுள்ளோம்.

**த.சிசிதரன்**
(யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்)

சிங்கள மாணவர்கள் எந்தவித அச்சமுமில்லாமல் மீண்டும் இங்கு வந்து கற்கைகளை மேற்கொள்ள முடியும். அதற்கு தமிழ் மாணவர்கள் எந்தவிதத்திலும் தடையாக இருக்க மாட்டார்கள். சிங்கள மாணவர்களின் பாதுகாப்பிற்கு மாணவர் ஒன்றியம் உத்தரவாதம் கொடுக்கும். மாணவர்களுக்குள் சண்டை நடப்பதும் பின்னர் அவர்கள் ஒற்றுமையாவதும் சகஜமான நிகழ்வு. அதுபோன்றே இதனையும் பார்க்க வேண்டும். எல்லா சிங்கள மாணவர்களும் தென்னிலங்கைக்கு செல்லவில்லை. இப்போதும் பலர் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். அவர்கள் மீளவும் பல்கலைக்கழகம் வருவதற்கு தயாராகவே உள்ளார்கள். சிங்கள மாணவர்களுக்கு தனி விடுதி கொடுப்பது பற்றி நிர்வாகம் தான் முடிவெடுக்க வேண்டும்.

# வாரச்சக்கரம்



★ 2016-ஆம் ஆண்டில் உலகின் அதிகம் சம்பாதிக்கும் 100 பிரபலங்களின் பட்டியலை அமெரிக்காவின் பிரபல ஃபோர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. கடந்த ஜூன் முதல் இந்த ஜூன் வரை எடுக்கப்பட்ட இந்த கணக்கெடுப்பில் இந்தியாவின் ஷாருக்கான் மற்றும் அக்ஷய் குமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆண்டிற்கு ரூ. 221 கோடி வருமானம் ஈட்டி ஷாருக்கான் 86-ஆவது இடத்தையும், ரூ.211 கோடி வருமானத்துடன் அக்ஷய் குமார் 94-ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

சர்வதேச புலிகள் தினம்

★ ஜூலை 29



★ எக்வடார் நாட்டின், கையாக்வில் நகரில், ரிவர் எக்வடார் மற்றும் ஒளக்காஸ் அணிகளுக்கிடையே கால்பந்துப் போட்டியொன்று நடந்து கொண்டிருந்தது. அப்போது போட்டி தொடங்கிய 10 ஆவது நிமிடத்தில், தேனிக் கூட்டம் ஒன்று விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள் மற்றும் கால்பந்து ரசிகர்களைக் கொட்டத் தொடங்கியதை அடுத்து, போட்டி நிறுத்தப்பட்டது.





★ போக்கிமான் கோ கேம் விளையாட ஆயிரக் கணக்கான மக்கள் நியூயோர்க் மத்திய பூங்காவில் ஒரே நேரத்தில் திரண்டதால் அங்கு பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுளில் போக்கிமான் கோ மொபைல் கேம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கேமை கோடிக் கணக்கான பேர் டவுண்லோட் செய்து விளையாடி வருகின்றனர். ஜி.பி.எஸ் வசதியுடன் விளையாடக் கூடிய கேம் இது. நிஜ உலகத்தோடு கனவுலகத்தை இணைத்து இந்த கேம் உருவாக்கப்பட்டுள்ளது.



★ சரவணன் மீனாட்சி தொடரின் சீசன் 3 முடிவடைந்த நிலையில் மீண்டும் சன் மியூசிக் புகழ் றியோவை சரவணனாக வைத்து அடுத்த சீசனையும் தொடங்கிவிட்டார்கள் விஜய் ரீவி காரர்கள். ஒரே ஆளை எத்தனை பேர்தான் காதலிப்பார்கள் என்று இணையவாசிகள் விஜய் ரீவியை கலாய்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.



★ பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியாமிர்சா தனது சுயசரிதைப் புத்தகத்தை (ACE against ODDS) வெளியிட்டு உள்ளார். அந்த புத்தகத்தில் பல்வேறு தகவல்களை அவர் பதிவு செய்துள்ளார். புத்தக வெளியீட்டின் போது, தன்னை தேசப்பற்று இல்லாதவள் என்று மற்றவர்கள் விமர்சித்ததற்கு மனமுடைந்து போனதாக தெரிவித்தார். இவர் பாகிஸ்தான் கிரிக்கட் வீரரை திருமணம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.






## உளவிக்குளம் பிள்ளையார் கோயில்

★ அச்சுவேலி உளவிக்குளம் கோயிலில் ஆமிக்காரர் தேர் இழுத்தது பெரும் பரபரப்பையும் விவாதத்தையும், சென்ற வாரத்தில் ஏற்படுத்தியிருந்தது. பலர் இதற்கு கண்டனம் தெரிவித்து பண்பாட்டு நிகழ்வில் இப்படியான கேலிக்கூத்துக்கள் நடைபெறக் கூடாது எனக் கூறியுள்ளனர்.

★ ஜூலை 29



★ **சாமுவேல் கோல்ட்** - ரிவோல்வர் என்ற கைத்துப்பாக்கியைக் கண்டு பிடித்தவரின். பிறந்த நாள். இன்று பயன்படுத்தும் கைத்துப்பாக்கிக்கெல்லாம் இவரே முன்னோடியாவார்.



★ பாகிஸ்தானிய 'மொடல்' ஸ்டாரான கன்தீல் பலூச் அவரது சகோதரனினால் "கௌரவக் கொலை" செய்யப்பட்டுள்ளார். கலாசாரத்தை மீறினார் என்று சொந்த சகோதரனால் இப் பாகிஸ்தானிய மொடல் அழகி கௌரவக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

# வாரப் பலன்

### மேடம்
சயன போசன மகிழ்சி. சோம்பல் மிகுதி. காரியானுகூலம். மாணவர் கல்வி மேன்மை. பயிர் பலிதம். விருந்துச் சிறப்பு. கடன்படுதல்.

### மிதுனம்
புகழில் நாட்டம். பன்முக ஆர்வம். தூக்க மேன்மை. தனவிருத்தி. காரிய தாமதம். கல்விச் சிறப்பு. காமக்களிப்பு. கணவனால் கவலை.

### சிம்மம்
ஆன்மீகச் சேர்க்கை. அனுபவச் சிறப்பு. கலையார்வம். விருந்தில் களிப்பு. வேலையாட்களால் சுகம். தாவரம் சிறக்கும். நடைக் கஷ்டம். சமூகச்செலவு.

### துலாம்
உறக்கமின்மை. ஊதிய உயர்வு. பயிர் பலிதம். உத்தமர் சேர்க்கை. பிரயாணம். எதிர்ப்பாலின உதவி. துணை சுகம். மக்களால் செலவு. வீரியச் செயல்.

### தனுசு
தவறை எண்ணி வருந்துதல். வர்க்க மேலாண்மை. கலையில் ஆர்வம். கேளிக்கை மிகுதி. விளையாட்டுப் போக்கு. வனிதையர் வசீகரம்.

### கும்பம்
காதல் மகிழ்ச்சி. சீரிய சிந்தனை. ஆன்மீக சோதனை. அயலவர் அன்பு. அந்நிய செய்தியால் குழப்பம். எடுத்த காரியசித்தி.

### ரிஷபம்
தார சங்கடம். சரீரக் கேடு. பிறதேச சஞ்சாரம். தெய்வ வழிபாடு. தெற்கிலிருந்து செய்தி. உணவில் நாட்டமின்மை. உறவால் செலவு.

### கடகம்
கள்ளர் பயம். தலயாத்திரை. தாகமேன்மை. தன்னம்பிக்கை. நடந்ததை எண்ணிக் கவலை. சமூகப்பற்று. தவத்தால் நன்மை.

### கன்னி
கண் சோர்வு. தூக்கமின்மை. தானம் தடைப்படும். தொழில் மேன்மை. அஜீரணக் கோளாறு. புத்திரரால் சிறப்பு. கடன் தொல்லை தீரும்.

### விருச்சிகம்
ஏற்றத்தாழ்வற்ற நிலை. எண்ணச் சிறப்பு. மண் ஆசை. மக்கள் சிறப்பு. ஆபரணச் சேர்க்கை. அதிஷ்டம். விருந்தில் நாட்டம்.

### மகரம்
பணமுடை. பயிர் சேதம். நட்பால் வரவு. இரக்க மேன்மை. ஈகை வேட்கை. அந்நியர் நட்பு. பக்குவ நிலை. இறை நம்பிக்கை மேன்மை.

### மீனம்
மருந்துச் செலவு. எண்ணிய காரியத் தடை. ஏக்கம் அதிகம். பொறுமை. போசனச் சிறப்பு. வாகன மேன்மை. வணிக லாபம். விக்கினம் அகலும்.




# யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

# தன்னிகரற்ற

## சாதனைகளின் களம்

ஆசியாவின் முதலாவது தமிழ் கலவன் பாடசாலையாகவும் யாழ் மாவட்டத்தின் முதலாவது கலவன் பாடசாலையாகவும் யா/ தெல்லிப்பளை யூனியன் கல்லூரி தன்னுடைய நீண்ட வரலாற்றைத் தொடங்குகின்றது. அந்நியராட்சிக் காலத்தில் மதத்தைப் போதிப்பதற்கும் கல்வியை விதைப்பதற்காகவும் 1816 இல் அமெரிக்கன் மிசனரியினரால் வித்திட்ட இப் பாடசாலை இன்று 200 வருட பழமையையும் பாரம் பரியத்தையும் எடுத்துக் கூறும் சின்னமாக விளங்குகிறது..

1816 - 10 - 15 அன்று கலாநிதி டானியல் பூவர் அவர்களால் 6 மாணவர்களுடனும் 2 ஆசிரியர்களுடனும் அமெரிக்கன் மிசனரிப்பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று 1024 மாணவர்களுடனும் 60 ஆசிரியர்களுடனும் கல்விப்பணி புரிகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

தற்போது திரு.ஏ.மு.இரத்தினகுமார் அவர்கள் கல்விப்பணி புரிகின்றார்.

இவ் வகையில் இப் பாடசாலையானது வலிகாம கல்வி வலயத்தின் 1 AB பாடசாலைகளில் ஒன்றாகவும் தரம் 6 முதல் தரம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசரலையாக விளங்குவதோடு கல்விச் செயற்பாடுகளுடன் இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து சாதனை படைக்கும் கல்லூரியாக தன்னிகரற்று திகழ்கிறது சாதனை.

பிரதேசத்தின் அறிவுக்கண்ணாக விளங்கும் யூனியன் கல்லூரியானது தனது 200 வருட நிறைவில் கால்பதிக்கும் தருணத்தில் எத்தனை ஆயிரம் விதைகளை விருட்சங்களாக்கிய பெருமையை தன்னகத்தே கொண்டுள்ளது. ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோககத்தர்கள், விளையாட்டு வல்லுர்கள், என்றவாறு பல்லாயிரம் மைந்தர்களைப் பெற்ற பாடசாலையாக இக் கல்லூரி திகழ்வதோடு பிரதேசத்தின் உயர்கல்வி நிறுவனமாகிய யாழ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்களாக விளங்கிய பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் மு.குணரட்ணம் போன்ற ஆளுமைகளை உருவாக்கிய பாடசாலையாகும்.



## சவால்கள்

இப்பாடசாலையும் தனது 200 வருட வரலாற்றில் சவால்களினூடாகவே சாதனைகளை புரிந்து வருகின்றது.நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலை, இடப் பெயர்வுகள், சொத்துக்கள் இழப்பு, உயிரிழப்பு, என்ற வகையில் பல இடர்களை சந்தித்து அவற்றுக்கெல்லாம் சளைக்காது போராடி வீறுநடை போட்டு மீண்டும் சொந்த இடத்தில் கல்விப்பணி புரிகின்ற அதே வேளை பௌதீக வளரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. தளபாடப் பற்றாக்குறை, போதிய இட வசதியின்மை, உள்ளக விளையாட்டரங்கு, தேசியமட்டபோட்டிகளில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கான நிதியுதவிகள், போசாக்கின்மை, குடிநீர்பிரச்சினை, மீள்குடியேறிய குடும்பங்களில் இருந்து வருகைதரும் வறியமாணவர்கள், சமகால சூழல்பிரச்சினைகள், போதைவஸ்து பாவனை, துஷ்பிரயோகங்கள் போன்றவற்றிலிருந்து மாணவர்களை மீட்டெடுத்து மாணவர்களை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடவைப்பதென்பது பாரிய சவாலாகவுள்ளது. ஆயினும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளது ஒன்றிணைந்த செயற்பாடே கல்லூரியின் உயர்விற்கும் சாதனைகளுக்கும் உறுதுணையாக அமைகின்றமை ஆரோக்கியமான ஒன்றாகக் காண்டப்படுகின்றது.


Throw ball under 19 boys Provincial Level champion


Champion throw ball girls under 19 provincial level

## சாதனைகள்

இவ் வகையில் கல்லூரியானது க. பொ. த உயர் தரம், க.பொ. த. சாதாரண தரம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று விளங்குவதோடு விளையாட்டு, சாரணியம், போன்ற துறைகளிலும் தொடர்ந்து சாதனைகளை புரிவது குறிப்பிடத்தக்கது. பெருவிளையாட்டுக்களாகிய வலைப்பந்து, எறிபந்து, உதைபந்து, கொக்கி, எல்லே, கரப்பந்து போன்றவற்றோடு மேசைப் பந்தாட்டம் சதுரங்கமாகிய உள்ளக விளையாட்டுகளிலும் முன்னனி வகிக்கின்றது.

இவ் வருடத்திற்கான நிகழ்வுகள் என்ற வகையில் கோட்டம், வலயம், மாவட்டம், என்ற நிலைகளைக் கடந்து மாகாண மட்டத்தில் விளையாட்டுத் துறையில் பல சாதனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் தேசிய மட்ட போட்டிகளுக்கு அணிகள் தயார் நிலையில உள்ளன. அவ்வகையில் வலைப் பந்தாட்டம் 15, 17 வயது அணிகள் மாகாணமட்டத்தில் 2 ஆம் இடத்தை பெற்றுள்ளதோடு எறிபந்து 19 வயது ஆண், பெண் அணிகள் முதலிடம் பெற்றுள்ளன. கொக்கி 19 வயது அணி முதலாம் இடத்தை தக்கவைத்துள்ளது. அதேபோல மேசைப்பந்து 19 வயது ஆண்கள் அணி 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன. அத்துடன் இக்கல்லூரியின். சாரணமாணவர்கள் தேசிய சாரணர் விழாவில் பங்குபற்றி சாதனை புரிந்ததோடு சிறந்த சாரணர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கல்லூரியின் விவாதிகள் கழகமானது விவாதப் போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்களையும் பாராட்டுகளையும் பெற்றுள்ள தோடு வாதம் புரிவோரை உருவாக்கும் களமாகவும் அமைந்துள்ளது.

இவைமட்டுமல்லாது கணித விஞ்ஞான போட்டிகள், வணிகப்போட்டிகள், சமூக விஞ்ஞான போட்டிகள், ஆங்கிலப் போட்டிகள், சங்கீத, நடன, நாடகப் போட்டிகளிலும் கல்லூரியின் மாணவர்கள் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுக் கொள்வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அண்மையில் நடைபெற்ற 2016 ஆம் ஆண்டினற்கான தமிழ்மொழி தினப்போட்டிகளில் மேற்பிரிவு பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு எமது கல்லூரி மாணவன் செல்வன் க.பிரகான் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றமை சிறப்பிற்குரியதாகும்.


Hockey under 19 boys champion provincial level

சிறுவர் தொடர்

06



# பூதத்தீவுப்புதிர்கள்

- செங்கை ஆழியான் -

தென்னை மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றிற்கு அப்பால் அடர்ந்த காடு விரிந்து கிடந்தது. உயர்ந்த மரங்கள் தெரிந்தன.

"இது எந்த இடம்?" என வசந்தன் கேட்டான்.

"தெரியவில்லை" என்றான் சின்னப்பு

"முதலில் இறங்கிப் பார்ப்போம். சற்று இளைப்பாறிவிட்டு தீவுக்குள் போய் விசாரிப்போம். மீன் பிடிக்க வந்து நாங்கள் சில வேளைகளில் இப்படித் தீவுகளில் அகப்பட்டிருக்கிறோம். படகினைத் திருத்திக்கொண்டு பின்னர் புறப்படுவோம்" என்றான் மாணிக்கம்.

எல்லோருக்கும் அது சரியாகப்பட்டது அவர்கனிள் வயிற்றில் பசி பூதாகரமாகக் கிளம்பியது. நாக்கு நல்ல நீருக்காக ஏங்கியது. கடற்பரப்பில் இருந்து நிலத்தில் கால்களைப் பதிக்க அவர்கள் ஒவ்வொருவரும் துடித் தனர். வசந்தன் சற்றுத் தயக்கத்துடன் காணப்பட்டான்.

கடற்கரையில் பறவைகள் கீச்சிட்டபடி அலைந்தன. மீன்களைக் குத்தி எடுத்தபடி அவை வானில் கிளம்பின. இனந்தெரியாத சத்தங்கள் சன்னமாகத் தூரத்தில் இருந்து கேட்டன.

மாணிக்கம் அவர்களைப் பக்குவமாகக் கரையில் ஒவ்வொருவராக இறக்கி விட்டான். அவர்கள் சோர்ந்து நடந்து கடற்கரையின் வெண்மணலில் அப்படியே அமர்ந்து கொண்டனர். அவர்களின் மனதில் இனந்தெரியாத நிம்மதி படர்ந்தது.

"அப்பாடா!" என்றார் மூர்த்தி.

வசந்தன் கடைசியாகப் படகில் இருந்து இறங்கினான். மாணிக்கமும் சின்னப்பாவும் படகினை இழுத்து கரையில் நீட்டிக்கொண்டிருந்த தூண் போன்ற பாறையொன்றில் பிணைத்தனர். வசந்தன் கரையில் நின்றபடி சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரே தென்னை மரங்களும் அவற்றிற்கு அப்பால் உயர்ந்த காட்டு மரங்களும் தெரிந்தன. ஓரிடத்தில் ஒரு பாதை தெரிந்தது.

"அங்கே ஒரு வீதி தெரிகிறது சேர்" என்றான் வசந்தன், சுட்டிக்காட்டியபடி. எல்லோரும் அவ்விடத்தினைப்பார்த்தனர். வசந்தன் அவ்விடத்தை நோக்கி முன்னே நடக்க, அவர்கள் அவனை உற்சாகத்துடன் பின் தொடர்ந்தனர்.

"வலு துணிச்சலான பையன்" என்றாள் கமலம்.

'ஓம்' என்று ஆமோதித்தார் மூர்த்தி.

அது ஒரு மண் வீதி. கடற்கரையிலிருந்து ஆரம்பமாகுமிடத்தில் ஒரு மரக்குற்றியில் ஒருவன் அமர்ந்திருந்தான். அடர்ந்த தலைமயிர். கரிய நிற மேனி. மான் தோலை அரையில் வரிந்து கட்டியிருந்தான். அவன் கையில் வில் ஒன்றும் அம்புகள் பலவும் கிடந்தன. அவன் மௌனமாக அமர்ந்திருந்தான். பாதையின் குறுக்கே ஒரு கோடு கீறப்பட்டிருந்தது.


அவனை அவர்கள் வியப்புடன் பார்த்தனர். வேடன் போலும், அவன் அவர்கள் வந்ததை கவனிக்காதவன் போல் அமர்ந்திருந்தான். "ஐயா" என்று மூர்த்தி அழைத்தார். அவன் பேசாது அமர்ந்திருந்தான்.

"இலங்கையில் வேடர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விந்தனைப் பகுதியில் இருப்பதாகப் படித்திருக்கிறோம். அப்படியாயின் நாங்கள் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் கரையொதுங்கியிருக்கிறோமோ?" என்று வசந்தன் தன்னருகில் வந்து கொண்டிருந்த சீலனைக் கேட்டான்.

"எனக்குத் தெரியவில்லையடா" என்றான் மருட்சியுடன் சீலன்.

"ஐயா பெரியவரே" என்று அவன் தோளில் கை பதித்து ஆசிரியர் மூர்த்தி உலுப்பினார். அவனை அசைக்க முடியவில்லை. கல்லில் கை வைத்த மாதிரி இருந்தது. கரத்தை இழுத்துக் கொண்டார்.

(புதிர்கள் தொடரும்...)



# அழி இறப்பர் பேசுகிறேன்...!

சிறுவர்களே! நான் யாரென்று தெரிகிறதா? நன்றாக உற்றுப் பாருங்கள். நான் தான் உங்கள் புத்தகப் பையினுள் எப்போதும் இருக்கும் சின்னப் பொருள். ஆம்.

நான் தான் அழி இறப்பர் பேசுகிறேன்.

என்னை எப்போதும் உபயோகிக்கும் உங்களுக்கு நான் எப்படிப் பிறந்தேன் என்று தெரியுமா?

1770 ஆம் ஆண்டு பிரபல விஞ்ஞானி சேர்ஜோசப் பிரீஸ்ட்லே, இறப்பர் மரத்திலிருந்து பாலை எடுத்து, அதன் மூலக் கூறுகளை ஆராய்ந்து, இறப்பரின் குணங்களை வெளிப்படுத்தினார்.

அதே ஆண்டு, இறப்பர் துண்டுகளை வைத்து பிரிட்டன் பொறியியலாளர் எட்வர்ட் நெய்மே என்பவர் ஆராய்ச்சி செய்தார். அப்போது சில குறிப்புகளை பென்சிலால் எழுதும் போது தவறுகள் ஏற்பட்டன. அந்தக் காலத்தில் பென்சில் எழுத்துக்களை அழிக்க ரொட்டித் தூள்களைப் பயன்படுத்துவர். அதன்படி குறிப்புகளில் பிழையாக எழுதப்பட்ட பென்சில் எழுத்துக்களை அழிக்க ரொட்டித் தூள்களை எடுப்பதாக நினைத்துக் கொண்டு , தவறுதலாக இறப்பர் துண்டுகளை எடுத்து அழித்தார். அப்போது பென்சில் எழுத்துக்கள் சுத்தமாகவும் விரைவாகவும் அழிப்பதைக் கண்டு ஆச்சரியம் கொண்டு, உடனே களத்தில் இறங்கினார். பென்சில் எழுத்துக்களை அழிக்கும் இறப்பர் துண்டுகளை சந்தைக்கு அறிமுகம் செய்தார்.

உணவைப் போலவே, இறப்பரும் சில நாட்களில் பழுதடையும் தன்மை கொண்டது. இதனால் இறப்பரை பல நாட்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கு தீர்வைக் கண்டு பிடித்தார் சார்ள்ஸ் குட்இயர். 1839ஆம் ஆண்டு கந்தகத்தைப் பயன்படுத்தி இறப்பரைக் கெட்டியாக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் எத்தனை ஆண்டுகளானாலும், கெட்டுப் போகாத அழி இறப்பரான நான் உருவாகி, மாணவச் செல்வங்களின் தவறுகளைத் திருத்தி வருகிறேன். தவறுகளைத் திருத்துவதால் நான் உங்களின் பிரியத்துக்குரியவனாகி விட்டேன்.



# அழகான ஆபத்து

சிறுவர் நீதிக் கதை

ஒரு குளத்தில் பல வகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன.

அதில் இரு மீன்கள் நீரில் ஓடிப்பிடித்து, விளையாடி கொண்டிருக்கும்போது , கரையில் ஒரு யானை நீர் குடித்துக் கொண்டிருப்பதைக் கண்டன. யானையின் பெரிய உருவத்தையும், கருமை நிறத்தையும் கண்டு பயந்து, குளத்தின் ஆழத்துக்கு ஓடின.

அதனைக் கண்ட ஒரு வயதான மீன் "செல்லங்களே! ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்?" எனக் கேட்டது

அதற்கு "கரையில் ஒரு கறுத்தப் பயங்கரமான மிருகம் நிற்கிறது" என்று மீன் குஞ்சுகள் பதிலளித்தன.

"ஓ....! அது யானை. அந்த விலங்கால் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை. உருவத்தை மட்டுமே வைத்து ஒருவரைப் பற்றி தவறாக நினைக்கக் கூடாது" என்று அந்த பெரிய மீன் சொல்ல, மற்ற மீன் குஞ்சுகள் "இந்தத் தாத்தாவுக்கு வேற வேலை இல்லை. எப்பவும் உபதேசம் தான். வாருங்கள் போகலாம்" எனக் கூறிச் சென்றன.

அடுத்த நாள் . குளத்தின் கரையில் கொக்கு ஒன்று அமர்ந்து இருந்தது. அதை பார்த்த மீன் குஞ்சு கள், "அட! என்ன பறவை அது? வெள்ளையாக எவ்வளவு அழகா இருக்கிறது! அலகும் நீளமாகக் கச்சிதமா இருக்கிறதே" என்று அதன் அழகை ரசித்த படி கொக்கின் அருகே சென்றன.

மீன் குஞ்சுகள் பேசும் சத்தம் கேட்டு குளத்தை நெருங்கியது கொக்கு.

உடனே மீன் குஞ்சுகள் "நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள். உங்கள் அலகைத் தொட்டுப் பார்க்கலாமா?"என்று கேட்டன.

கொக்குக்கு ஒரே கொண்டாட்டம் .

"ஓ, தாராளமாகத் தொட்டுப் பாருங்கள்" என்று அலகை விரித்தது.

ஒரு மீன் குஞ்சு கொக்கை நெருங்க, 'லபக்' என்று கொக்கு அந்த மீனைக் கௌவிக் கொண்டு பறந்தது.

"ஐயோ, அழகைப் பார்த்து ஆபத்தில் சிக்கி னோமே" என்று அலறிக் கொண்டு ஏனைய மீன் குஞ்சுகள் ஓடி மறந்தன.

**நீதி: புற அழகை வைத்து எவரையும் எடைபோடக் கூடாது.**

# குட்டீஸ் 2 பரிசுப்போதி

**1. எழினியின் அம்மாவுக்கு மூன்று பெண் பிள்ளைகள். மூத்த மகளின் பெயர் இயல், இரண்டாவது மகளின் பெயர் இசை. அப்படியானால் மூன்றாவது மகளின் பெயர் என்னவாக இருக்கும்?**

விடை அனுப்ப வேண்டிய முகவரி:

**குட்டீஸ் பரிசுப்பொதி - 02**
**புதுவிதி, 107, இராசவீதி,**
**கோப்பாய் - திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**முடிவுத்திகதி: 03.08.2016**

★ தரம் 11 க்கு உட்பட்ட மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.



# 'கரகம்' ஆவணப்படம் இணையத்தில்




★ கடந்த 2014 ஆம் ஆண்டு கரவெட்டி பிரதேச சபையின் கலாசாரப் பேரவைக்காக மதிசுதா இயக்கியிருந்த, அவரது முதலாவது ஆவணப்படமான கரகம் ஆவணப்படம் ஜூலை 15 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு இணையத்தில் வெளியிடப்பட்டது. வடமராட்சியில் உள்ள கரகக் கலைஞர்களின் வாழ்வியலை இந்த ஆவணப்படம் பதிவு செய்துள்ளது.

இந்த ஆவணப்படம் 2015 இல் நோர்வே திரைப்பட விழாவில் ஆவணப்படப் பிரிவில் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த ஆவணப்படத்துக்கு மதுரன் ரவீந்திரன், ஜனகன் ஆகியோர் ஒளிப்பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கல்யாண ராசி

தொலைக்காட்சி தொகுப்பாளர்களில் மிகவும் பிரபலம் அஞ்சனா. இவருக்கு என்று பெரிய ரசிகர்கள் வட்டம் இருக்கின்றது. இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன் இவர் கயல் படத்தின் நாயகன் சந்திரனை திருமணம் செய்துக்கொண்டார். கயல் படத்திற்கு பிறகு பெரிதும் எந்த படத்திலும் ஒப்பந்தம் ஆகாமல் இருந்த சந்திரன் திருமணத்திற்கு பிறகு வரிசையாகப் பல படங்களில் நடித்து வருகிறார். இவர் தற்போது கிரகணம், ரூபாய் ஆகிய படங்களில் நடிக்கிறார். அத்தோடு, 'டூ மூவி பப்ஸ்' நிறுவனம் தயாரிக்கும் ஒரு படத்திலும் நடிக்கவும் ஒப்பந்தமாகியுள்ளார்.

## வில்லனாகும் விஜய் சேதுபதி



★ வெற்றிமாறனின் கனவுப்படமான 'வட சென்னை' படத்தில் தனுஷ் நாயகனாகவும், ஆண்ட்ரியா முக்கிய வேடத்திலும் நடிக்கின்றனர். சமந்தாவின் திருமண விவகாரங்களால் அவருக்குப் பதிலாக அமலாபாலை நடிக்க வைக்க பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இந்தநிலையில் விஜய் சேதுபதி இப்படத்தில் வில்லனாக நடிக்கிறார் எனப் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இப்படத்திற்காக சமுத்திரக்கனி, கிஷோர், டேனியல் பாலாஜி, கருணாஸ் என ஒவ்வொரு நடிகரையும் பார்த்துப் பார்த்து வெற்றி மாறன் தேர்வு செய்துவருகிறார். வெற்றிமாறன் இயக்கம், நடிகர்கள் தேர்வு, லைக்கா தயாரிப்பு ஆகியவை வட சென்னையின் மீது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. அந்த வரிசையில் தற்போது விஜய் சேதுபதியும் இணைவும் எதிர்பார்ப்பை எகிற வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.



## 'ஒரே கன

★ 'ஒரு ஊர்ல' எனும் குறும்படத்தின் மூலம் ப
இயக்குனர் அசாத் இப்போது 'ஒரு ஊர்
தனது திறமையை நிரூபித்துள்ளார். மிகச் சிறு வ
தில் தேசிய விருது பெற்ற இசையமைப்பாள
திக் விஜயரட்ணம் ஒளிப்பதிவு செய்ய, 'பரு
குறும்படங்களை இயக்கிய சனாதனன் உள்ளிட்
டுக்களையும் பெற்ற இக்குறும்படம் கடந்த ச
கலையரங்கில் பலரது முன்னிலையில் திரையி
இணையத்திலும் வெளியாகி அ

தனிப்பட்ட ஒரு மனிதனின் தி
குறும்படம், சாதிக்க விரும்பும் ஒ
ஏற்ற இறக்கங்கள், அவனுடன்
முறை, தொடர் தோல்வியால் ஏற்
எடுத்து சொல்கிறது.

இக்குறும்படத்தில் பணியாற்
பல படைப்புகள் மூலம் திரைத்து
கின்றோம்.

## வித்தியாச வேடத்தில் மிதுனா



### பி.வாசு இயக்கத்தில்

★ ராகவா லாரன்ஸ் - ரித்திகா சிங் நடிக்கும் 'சிவ லிங்கா' திரைப்படத்தின் படப்பிடிப்புகள் கடந்த வாரம் பூஜையுடன் தொடங்கியுள்ளன.

### காத்திருக்கும் சௌந்தர்யா

★ சௌந்தர்யா ரஜினிகாந்த் தனது அடுத்த படத்தை லைவ் அக்ஷனில் இயக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளார். தனது அக்கா கணவர் தனுஷை வைத்து ஒரு காதல் நகைச்சுவை படத்தை இயக்குகிறாராம்.

★ இயக்குனர் ஆர்.வி. எம். ரமேஷின் இயக்கத்தில், ஈழத்து நடிகை மிதுனாவின் நடிப்பிலும் விறுவிறுப்பாக தயாராகி வரும் திரைப்படம் "தியானா". நாயகியை பிரதான பாத்திரமாகக் கொண்டு இந்தப் படத்தின் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. வழக்கமாக மென்மையான பெண் கதா பாத்திரங்களில் நடித்த மிதுனா, இந்தப் படத்தில் ஆக்ரோஷமான, வித்தியாசமான பாத்திரத்தில் நடித்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

### தொங்கும் த்ரிஷா

★ நாயகியை மையப்படுத்திய கதைகளில் நடிக்க தீவிரம் காட்டி வருகிறார் த்ரிஷா. இதனால் வாய்ப்புகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு நடித்து வருகிறார். "நாயகி", "மோகினி" என பேய்ப் படங்களாக தொடர்ந்து நடித்துவரும் த்ரிஷா வை 60 அடி உயரம், 100 அடி உயரம் எனக் கட்டித் தொங்கவிட்டு காட்சிகள் எடுப்பதால் முன்பைவிட ரொம் பவே கஷ்டப்பட வேண்டி யிருப்பதாகப் புலம்புகிறாராம்.




### சமூகச் சீர்கேடுகளைப் பேசும் 'காமம்'

இயக்குனர் புவிகரனின் இயக்கத்தில் விரைவில் வெளிவரவிருக்கும் 'காமம்' குறும்படத்தின் புதிய போஸ்டர் ஒன்றை அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. வவுனியாக் கலைஞர்களின் பங்களிப்போடு உருவாகியிருக்கும் இந்தக் குறும்படம், சமூகச் சீர்கேடுகளைப் பேசுபொருளாகக் கொண்டு உருவாகி வருகின்றது.

## ஷகீலா ச



# ஈழ சினிமாவும் கிணற்றுத் தவளைகளும்



அண்மையில் புது விதி பத்திரிகையில் ஓர் கருத்து பகிரப்பட்டிருந்தது.

★ "ஹீரோ, ஹீரோயின், வழமையான காதல், வில்லன், அயிட்டம் சாங், பைட் இது எல்லாம் இந்திய சினிமாவில் இருந்து கொப்பியடிப்பதாகவும், எங்கட நாடக தமிழ்(ஈழத்தமிழாம்) வன்றை மட்டும் பயன்படுத்தினால் மட்டும் அது ஈழத்து படம் ஆகிவிடாது அதுவும் கொப்பி தான்"

- இப்படி ஈழத்து இயக்குநர் ஒருவர் முகநூலில் தெரிவித்த கருத்தே அது. இந்த கருத்தை கொண்டிருப்பவர்கள் இந்தியசினிமாவை தாண்டி உலக சினிமா எதையும் பார்த் திருக்கவோ,திரைக்கதை விதிகள் பற்றிய வாசிப்பறிவோ அற்றவர்களாக இருக்கக்கூடும். கிணற்றுத் தவளைக்கு தன் கிணறை விட உலகில் பெரியது எதுவுமில்லை என்ற எண்ணம் இருப்பது போலவே அவர்களின் எண்ணமும் உள்ளது.

உலகில் எந்த நாட்டில் எடுக்கப்படும் ஜனரஞ்சகப் படமாக இருந்தாலும் சரி, அவைகள் ஸிட் ஃபீல்டின் அடிப்படை விதிகளை கொண்டுதான் அறிந்தோ அறியாமலோ எடுக்கப்படுகின்றன. கலைப்படங்கள் என்ற (Art Cinema) மட்டும் தான் இந்த விதிகளில் சேராது.

"எந்த நாட்டின் எந்த மொழிப் படமாக இருந்தாலும் ஹீரோ/ ஹீரோக்கள், வில்லன்/வில்லன்கள், ஒரு லட்சியம், அதை நோக்கிய பயணம், இடையூறுகள், இறுதியில் சுபம் என்பது தான் மனிதன் தோன்றிய நாட்களிலிருந்தே நாடகங்கள்/ புதினங்கள்/ கதைகள்/ கவிதைகள்/ திரைப்படங்கள் ஆகியவற்றின் கருக்களாக இருக்கின்றன" என தமிழ்த் திரைப்பட ங்களில் திரைக்கதை ஆலோசகராகப் பணியாற்றும் ராஜேஷ் குறிப்பிடுகிறார்.

"உங்கள் ஊர்களில்(ஈழத்தில்) ஆயிரம் கதைகள் கொட்டிக்கிடக்கின்றன அதை விட்டு தென்னிந்திய. வணிக பாணியில் படங்களை செய்து அடையாளம் இழக்காதீர்கள்" என உலக நாயகன் கமலஹாசன் அண்மை யில் ஓர் பேட்டியில் ஈழத்து இயக்குனர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

"உங்கள் பேச்சு தமிழ்(ஈழத்து மொழிவழக்கு) கேட்பதற்கு அவ்வளவு இனிமையானது. தமிழ்நாட்டின் அத்தனை வட்டார வழக்குகளும் பிரபல நடிகர்கள் அத்தனை பேரினதும் குரல் மற்றும் உடல்மொழி என்னால் போலச் செய்ய முடிந்தாலும் உலகெங்கும் எம்மை அழைத்து மேடையேற்றி ரசிக்கும் ஈழத்தமிழர்களின் மொழிவழக்கை சரியான முறையில் கற்றுக்கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம் எப்போதுமே எனக்கு உண்டு" என ரோபோ சங்கர் (மிமிக்கிரி கலைஞர் சினிமா நடிகர்) நெல்லியடி "சிரிக்கலாம் வாங்க" நிகழ்ச்சியில் கூறியிருந்தார்.


மாற்றான் தோட்டத்துக்கே மணக்கும் மல்லிகையாக இருக்கும் எம் ஈழத்து மொழிப்பிரயோகத்தை உதாசீனம் செய்து விட்டு, தமது படைப்புக்களுக்கு மட்டும் 'ஈழத்துப் படைப்பு' என 'லேபிள்' ஒட்டு பவர்களை காலம் கண்டுகொள்ளாது என்பதே என் எண்ணம்.

- கிருத்திகன்(இயக்குநர், நடிகர்)

# 'தலை'யிடாத 'தல'



★ அஜித்தின் மைத்துனி ஷாமிலி, "வீர சிவாஜி" படத்தைத் தொடர்ந்து வேறு எந்தப் படத்திலும் நடிக்க ஒப்புக்கொள்ளவில்லை. காரணம், கதை கேட்டு கணிக்கத் தெரியாதாம். இதனால் தன் அக்கா ஷாலினியையே கதை கேட்கச் சொல்லிவிட்டாராம். தற்போது அக்கா ஷாலினி மொத்தம் மூன்று கதைகளை ஒப்புக்கொண்டுள்ளாராம். "வீர சிவாஜி" வெளியீட்டுக்கு பின்னராக அவற்றில் நடிக்க ஒப்பந்தம் போடுவாராம். மறந்தும் கூட மைத்துனி விஷயத்தில் தலையிடுவதில்லையாம் 'தல' அஜித்.




# ...ரே கனா' - ஓர் அறிமுகம்

...மூலம் பலரது கவனங்களையும் ஈர்த்த இளம் ஈழத்து ...ஒரு ஊர்ல' என்னும் குறும்படம் மூலம் மீண்டும் ...கச் சிறு வயதேயான அவர் இயக்கிய இக்குறும்படத் ...மைப்பாளர் ஸமீல் அவர்கள் இசையமைக்க கார்த் ...ப, 'பருக்கை', 'தெருவில் ஒரு சிறுவன்' போன்ற ...உள்ளிட்ட பலர் நடித்துள்ளார்கள். பலரது பாராட் ...கடந்த சனிக்கிழமையன்று கொழும்பு ஐ.எஸ்.எஸ் ...ல் திரையிடப்பட்டது. அத்துடன் அன்றைய தினமே ...பாகி அனைவரது பாரட்டுதல்களையும் பெற்றது.

...தனின் திரைக்கனவைப்ப பற்றி கூறும் 'ஒரே கனா' ...ரும்பும் ஒரு இளைஞனின் வாழக்கையில் ஏற்படும் ...னுடன் கூட இருப்பவர்கள் அவனை அணுகும் ...யால் ஏற்படும் மனநிலை போன்றவற்றை அழகாக

...ணியாற்றிய அனைத்துக் கலைஞர்களும் மேலும் ...திரைத்துறையில் வலம் வரவேண்டுமென வாழ்த்து



# பாகுபலி-2 எப்போது?

தெலுங்கு சினிமாவில் மிகவும் பிரமாண்டமாக தயாராகி 500 கோடி இந்திய ரூபாவை வசூலித்த படம் பாகுபலி. ராஜமௌலி இயக்கும் பாகுபலி படத்தின் இரண்டாம் பாகப் படப்பிடிப்பு மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முதல் பாகத்தில் 1000 பேர் பணிபுரிந்த நிலையில் இரண்டாம் பாகத்தில் மொத்தம் 5000 பேர் பணிபுரிந்து வருகின்றனர். இத்தனை பேரை வைத்துக் கொண்டு படக் குழுவினர் எப்படி படத்தை உருவாக்கி வருகின் றனர் என்பது படம் வந்தால் தான் தெரியும். தற்போது படக் குழுவினர் பாகுபலி இரண்டாம் பாகம் வரும் ஏப்ரல் 14 ஆம் திகதி 2017 ஆம் ஆண்டு வெளியாகும் என்று உறுதிபடுத்தியுள் ளனர்.

# கமலஹாசனுக்கு காயம்

★சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள அலுவலகத்தின் மாடிப்படியில் இருந்து கடந்த 13 ஆம் திகதி நள்ளிரவு கமலஹாசன் தவறி விழுந்தார். இதில் அவரது முதுகு தண்டுவடம் மற்றும் கால் எலும்பு முறிவ டைந்தது. சென்னை அப்பலோ மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்த அறுவை சிகிச்சைக்குப் பின்னர் கமலஹாசன் நலமுடன் இருப்பதாக மருத்து வமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மாறியது பெயர்




திருப்பதி பிரதர்ஸ் படம் தயாரிக்க ஆரம்பித்த நேரத்தில் அந்த நிறுவனத்துக்கு "பட்டாளம்" என்ற பெயரில் குழந்தைகள் படத்தை இயக்கித் தந்தவர் ரோஹன் கிருஷ்ணா. தற்போது தனது பெயரை பிரபு ராதாகிருஷ்ணன் என்று மாற்றிக்கொண்டு ஒரு புதுப்படத்தை இயக்குகிறார். 24 ஏ.எம் ஸ்டுடியோஸ் சார்பில் படத்தைத் தயாரிக்கும் இந்தப் படத்தின் கதை, திரைக் கதையையும் எழுத, பிரபு இயக்குகிறார். தமிழிலும், மலையாளத்திலும் உருவாகும் இந்தப் படத்தில் நிவின் பாலி தான் கதாநாயகன்.

# ...ா கதை படமாகிறது



★ கவர்ச்சி நடிகையாக ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த ஷகீலா, தன் வாழ்க்கையைப் பற்றிய சுயசரிதை எழுதி புத்தகமாக வெளியிட்டுள்ளார். அதைப் படமாக்கப் பலரும் முயற்சிக்க, கடைசியில் ஹிந்தியில் படமாகிறது அவரின் வாழ்க்கை. இந்திரஜித் லங்கேஷ் இயக்கும் இந்தப் படத்தில் இந்தி நடிகை ஹூமா குரேஷி நடிக்க சம்மதம் சொல்லிவிட்டாராம். ஏற்கெனவே "டர்ட்டி பிக்சர்" படத்தில் நடித்த வித்யா பாலனுக்கு விருது கிடைத்தது போல, தனக்கும் கிடைக்கும் எனவும் நம்பி இந்தத் துணிச்சலான முடிவை எடுத்திருக்கிறாராம்.

# சைபர் மீன்கள்



# f சுவரில் கொய்தவை

காஷ்மீர் ஆர்ப்பாட்டத்தில் பிரபாகரன்




பட்டதாரி (டி)?



## எட்டிப் பார்க்கும் குணம்

பேஸ்புக், வட்ஸ் அப், யூ-ரியூப் என சமூக வலைத்தளங்களில் இரண்டாவது வாரமாக வெற்றிகரமாக இணையவாசிகளால் முண்டியடித்துப் பார்க்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் தனியார் வங்கி ஒன்றில் ரகசியமாகப் பிடிக்கப்பட்ட வீடியோத் துணுக்குகள்.

லட்சக் கணக்கான பார்வையாளர்களையும் தாண்டி, கபாலி காய்ச்சலையும் ஒரேயடியாக அமுங்கச் செய்துவிட்டது இந்த ரகசிய வீடியோ. குறித்த வங்கிக் கிளையில் பணிபுரியும் பெண், கூடப் பணிபுரியும் ஆண் நண்பர்களுடன் அறைக்குள் செய்த அந்தரங்க விடயங்களை இந்த வீடியோ அம்பலமாக்கிவிட்டது. கணினியில் பொருத்தப் பட்ட 'வெப் கமெரா' மூலம் அங்குள்ள யாரோதான் இந்த காட்சிகளை படமாக்கி, வெளியே கசிய விட்டிருக்கிறார்கள். அடுத்தவர்களின் அந்தரங்கங்களில் நமது மூக்கை வலிய நுழைத்து, அதை எல்லோருக்கும் விருந்தாக்குவதில் இலங்கையர்களுக்கு நிகர் இலங்கையர்களேதான்.

தொழில்முறை நபர்கள் பங்கேற்கும் ஆபாச வீடியோக்களை விடவும், இப்படி நிஜவாழ்வில் நடந்த பாலியல் விடயங்களை-அது மிகத் தரங்குறைந்த வீடியோவாக இருந்தாலும்- ஒன்றுக்கு பலமுறை மீள மீளப் பார்ப்பதில் அப்படி ஒரு இன்பம் பலருக்கும். அத்தோடு தாம் பெற்ற இன்பத்தை தம் நட்புகளுக்கும் அனுப்பி, சமூக வலைத்தளங்களில் தங்களுக்கு இருக்கும் பிரபலத்தையும் வெளிப்படுத்துவதில் நம்மவர்கள் சளைத்தவர்களில்லை.

குறித்த வங்கிப் பெண்ணின் அந்தரங்கக் காட்சிகளை விடவும் அது தொடர்பில் வலைத்தளங்களில் லைக்ஸுகளுக்காக பலரும் எழுதிக் குவித்தவைகள் தான் அதி ஆபாச வாடையுடன் உலா வந்து மூக்கைச் சுளிக்க வைத்தன.

முன்னர் கிடுகு வேலி நீக்கலுக்குள்ளாலும், பொட்டுக்குள்ளாலும் ஒளித்து நின்று, அடுத்தவனின் அந்தரங்கங்களை எட்டிப்பார்த்து இன்புற்ற பழக்கம், பேஸ்புக் காலத்திலும் 'வெப் கமெரா', 'சீசிடி கமெரா' என்று புதிய வடிவங்களில் தொடர்வதில் ஆச்சரியமில்லையே.

**Praba**
நமக்கு முன்னுதாரணமானவர்கள் சிலவேளைளில் நமக்கு பின்னால் வந்தவர்களாக கூட இருக்கலாம்.

**Gowri Sutha**
நில ஆக்கிரமிப்பு ஆயுதங்களில்/உபகரணங்களில் இராணுவத்தை விட புத்தர் சிலைகளே வலிமையானவை..#நல்லாட்சி

**Yogoo Arunakiri**
நாமல் நோமலா வருவார் 😉

**Kanapathipillai Prapakaran**
நமக்கு காசு போடுற பேங்க்லயும் மிகுதி இல்ல, சார்ஜ் போடுற பேங்க்லயும் மிகுதி இல்ல !! ச்சைக்
#PowerBank

**Sabeena Sabee** feeling loved.
பெண்மையை கூரிய சொற்களால் கீரி காயப்படுத்துதல் அல்ல ஆண்மை
அன்பின் ஆளுமையில் ஆறுதல் வார்த்தைகளால் அடிமை படுத்துவதே பேராண்மை.. ♥♥♥

**Dilexsan Gnanapiragasam**
குழந்தைகளுக்கு எப்பவும் சாமி காப்பாத்தும்னு சொல்லி குடுக்காம, நீதான் உன்ன காப்பாத்திகனும்னு சொல்லி குடுங்க..
அப்பதான் தன்னம்பிக்கை வளரும் ::::!!!

**Aathi Parthipan**
சில குழந்தைத்தனங்களை இலகுவில் கடந்துவிட முடியாது அது ஒரு குழந்தையினதாக இல்லாத பட்சத்தில் ..
ஆதி.பா

**Kalavarshny Kanagaratnam**
கோழி இறைச்சி, டின் மீன், நெத்தலி, கருவாடு, மாசி இவற்றிற்கெல்லாம் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து விட்டது நல்லாட்சி அரசாங்கம். மனிதர்களை பூனை என்று நினைத்துவிட்டார்களோ? அவ்வாறு நினைப்பதை தடுப்பதற்கு இடையிடையே வேறு சில பொருட்களும் இன்க்லூடட்.. நல்லா வருவிங்க போங்க...

**Inshad Suood**
சக கைதிகளுக்கு யோகாசனம் கற்றுக் கொடுக்கிறார் நாமல் ராஜபக்ச. - செய்தி

கம்பி என்றதுக்கு இப்பிடி ஒரு பில்டப்பா
இரு டீ உங்க தம்பி மார்களுக்கும் சேர்த்து சொல்லி கோடுப்பாய்..
#நாமல்பேபி

### பரீட்சை ஹாலில் *கீதோபதேசம்*

பதில் தெரீலயே என்று விழிக்காதே...
எதை நீ படித்தாய் எழுதுவதற்கு?
எதை எழுதுவாய் ஆசிரியர் படிப்பதற்கு?
கேள்வி கேட்டவருக்கே பதிலும் தெரியும்...
இடையில் நீ யார் பதில் எழுத?
நடந்த பரீட்சை எல்லாம் நாடகமே...
நடக்கும் பரீட்சையும் நாடகமே...
இனி நடக்கப் போகும் பரீட்சைகள்கூட நாடகமே...
இடையில் நீ எழுதி என்ன சாதிக்கப் போகிறாய்?
எழுந்திரு...
கபாலி ஷோ உனக்காகக் காத்திருக்கிறது...
கடமையை செய்!
😂😂

## படித்ததில் பிடித்தது

முன்பொரு நாள், கடனில் மூழ்கிய கென்யாவின் ஒரு பட்டணத்தில் இருந்த ஒரேயொரு ஹோட்டலில் ஒரு வெளிநாட்டு சுற்றுலா பயணி நூறு டொலர் நோட்டை மேனேஜரின் மேஜை மேல் வைத்து விட்டு ரூம்களை பார்வையிட மேலே ஏறிச்சென்றார்..

உடனே அந்த ஹோட்டல் அதிபர் அந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்துக்கோண்டு தன் கடனை அடைக்க கறிக்கடைக்காரனிடம் ஓடினான்.

கறிக்கடைக்காரன் அந்த நோட்டை எடுத்துக்கோண்டு பன்றி பண்ணைக்கு தான் தர வேண்டிய பாக்கியை கொடுத்தான்..

பன்றி பண்ணை முதலாளி அந்த நோட்டை எடுத்துக்கோண்டு தீவன சப்ளையரிடம் தன் கடனை செலுத்தினான்..

தீவன சப்ளையரோ தன் வேலையாளுக்கு தர வேண்டிய சம்பள பாக்கியை தர... அந்த வேலையாள் ஹோட்டல் அதிபரிடம் ஓடி வந்து தான் வாங்கிய கடனை திருப்பித்தர..

அந்த நூறு ரூபாய் நோட்டு மீண்டும் அதே மேஜை மேல் வந்தது..

சுற்றுலா பயணி கீழே இறங்கி வந்தான்.. அவனுக்கு ஹோட்டல் அறை பிடிக்காததால் தன் நூறு டாலர் நோட்டை எடுத்துக்கோண்டு நடையை கட்டினான்..

யாருக்கும் எதுவும் கிடைக்கவில்லை..
ஆனாலும் கூட ஒரு மோத்த மக்கள்

**Siva Ramakrishnan**

## இந்தவார மீம்ஸ் (Meme)







**இணையவாசிகளுக்கு** உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/

# துருக்கிச் சதி: புரட்சியா? ஒத்திகையா?

கலையரசன்





## இதுவரை வெளிவாரத உண்மைகள்

துருக்கியில் நடந்த இராணுவ சதிப் புரட்சி தோல்வியடைந்துள்ளது. சதிப்புரட்சி பற்றிய தகவல்கள் உலகம் முழுவதும் வலம் வந்த போதிலும் உண்மையில் அங்கே என்ன நடந்தது என்பது தெளிவாவாவதற்கு ஒரு நாள் எடுத்தது. இருப்பினும், இதை எழுதிக் கொண்டிருக்கும் வரையில், சதிப்புரட்சியை நடத்திய வர்களின் நோக்கம் என்ன என்பது தெரியவில்லை. துருக்கி அரசு கூட ஊகங்களின் அடிப்படையில் தான் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தது.

15 ஜூலை, துருக்கி நேரம் இரவு ஒன்பதரை மணியளவில்,இஸ்தான்புல், அங்காரா போன்ற முக்கிய நகரங்களில் பெருமளவு இராணுவத்தினர் குவிக் கப்பட்டனர். இலட்சக் கணக்கான மக்கள் வசிக்கும் இரண்டு நகரங்களின் மீதும், போர் விமானங்கள் வட்ட மிட்டன. யாரும் பயந்த படி குண்டு போடவில்லை. ஆனால், ஹெலிகொப்டர்களில் இருந்து சுட்டதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தன. தலைநகர் அங்காராவில், பாராளுமன்றம், அமைச்சுக்கள், அரசு அலுவலகங்கள், ஊடக நிறுவனங்கள் யாவும் இராணுவக் கட்டுப்பாட்டில் வந்தன. தொலைக்காட்சி நிலையத்தில் இருந்து சதிப்புரட்சியை பிரகடனம் செய்த இராணுவத்தினர், தாம் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்புக் கொடுப்பதாக தெரிவித்தனர்.

### இருபது வயது புரட்சிக்காரர்கள்

இஸ்தான்புல் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டிருந்தது. வெளி நாட்டு, உள்நாட்டு விமான சேவைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள் ளன. விமான நிலையத்தில் யுத்த டாங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தன. இஸ்தான்புல் நகரில் காவல் துறையினர் எதிர்ப்புக் காட்டி உள்ளனர். இராணுவத் தினருக்கும், பொலிசாருக்கும் இடையில் நடந்த சண்டையில் பலர் கொல்லப்பட்டனர். சில மணி நேரத்தின் பின்னர்,

அதா வது சதிப்புரட்சி தோல்வி யுற்றதும், இராணுவத்தினர் பொலிசா ரிடம் சரணடைந்தனர். அன்றைய சதிப் புரட்சியில் ஈடுபட்ட இராணுவ வீரர்களில் பெரும்பான்மையானோர் இருபது வயது மதிக்கத்தக்க இளைஞர்கள். பலருக்கு என்ன நடக்கிறதென்பது தெரியவில்லை.

தாம் ஒரு பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்படுவதாக நம்பினார்கள். இதுவும் ஓர் ஒத்திகை என்று நினைத்தார்கள். அதனால் தான், சதிப்புரட்சி தோல்வியடைந்த நேரம் மக்களைத் தாக்காமல் சரணடைந்தார்கள். சதிப்புரட்சியாளர் கள் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படலாம்.

### மக்களை அழைத்த ஆட்சியாளர்

தலைநகரில் சதிப்புரட்சி நடந்த நேரம், ஜனாதிபதி எர்டோகன் தென் துருக்கியில் பிரபலமான சுற்றுலா ஸ்தலமான மார்மாரிஸ் நகரில் இருந்தார். ஆளும் கட்சியான, அவரது AK கட்சிக்கு எதிராகவே சதிப்புரட்சி நடந்துள்ளது. இராணுவத்தினர், அங்காரா நகரில் AK கட்சி தலைமை அலுவலகத்தை கைப்பற்ற முயற்சித்தனர். தனது ஆட்சிக் காலம் முழுவதும் மக்கள் போராட்டங்களை சகித்துக் கொள்ளாத ஜனாதிபதி எர்டோகன், தனது ஆட்சிக்கு ஆபத்து வந்துவிட்டது என்றதும், மக்களை வீதிக்கு வந்து போராடுமாறு அறைகூவல் விடுத்தார்.

தொலைக்காட்சி நிலையம் ஒன்று 'ஸ்கைப்' மூலம் உரையாடிய ஜனாதிபதியின் பேச்சை நேரடி ஒளி பரப்புச் செய்தது. எர்டோகனின் அறை கூவலை செவிமடுத்த அவரது கட்சி ஆதரவாளர்கள் வீதிகளில் இறங்கி சதிப்புரட்சியாளர்களுக்கு எதிராக சவால் விட்டனர். யுத்த டாங்கிகளை துணிச்சலுடன் எதிர்த்து நின்றனர். "இராணுவ சதிப்புரட்சி மக்கள் சக்தி மூலம் முறியடிக்கப் பட்டதாகவும், இராணுவத்தினர் மக்களைக் கொல்ல வில்லை..." என்றும் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டதில் ஒரு பகுதியே உண்மை.

### இராணுவம் சுட்டதா?

உண்மையில் சதிப்புரட்சியின் போது இரத்தக்களரி ஏற்பட்டது. இராணுவம் மக்களை நோக்கி சுட்டது. அதில் பல பொது மக்கள் மரணமடைந்தனர். இதைத் தவிர, பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சமரில், இரண்டு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.

சதிப்புரட்சியின் விளைவாக, மொத்தம் 260 பேர் மரணமடைந்ததாக ஊர்ஜிதப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இராணுவத்துக்குச் சம்பந்தமில்லை

சதிப்புரட்சி தோல்வியடைந்ததற்கு இன்னொரு காரணம் துருக்கி இராணுவம்! ஆமாம், தொண்ணூறு சதவீத படையினர் சதிப்புரட்சியில் பங்குபற்றவில்லை. அன்று இரவே, "இராணுவத்தில் ஒரு பிரிவினர் மட்டுமே சதிப்புரட்சியில் சம்பந்தப் பட்டுள்ளரென" பிரதமர் யில்ட்ரிம் (Yildrim) தெரிவித்திருந்தார். அது உண்மை தான். படையினரே சதிப்புரட்சியில் ஈடுபட்ட இராணுவ வீரர்களை தெருவில் பிடித்து வைத்து அடித்து உதைக்கும் காட்சிகளை அடுத்த நாள் காணக் கூடியதாக இருந்தது.

இதில் இன்னொரு முக்கிய விடயத்தையும் கவனிக்க வேண்டும். துருக்கியில் 1960 - 1980 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் மூன்று தடவைகள் இராணுவ சதிப் புரட்சிகள் நடந்துள்ளன. பல வருட காலம் இராணுவ சர்வாதிகார ஆட்சி நடந்துள்ளது. நவீன துருக்கியின் சிற்பியாக கருதப்படும், "தேசப் பிதா" கெமால் அட்டா துர்க் காலத்தில் இருந்து, துருக்கியில் இராணுவம்



ஒரு பலமான ஸ்தாபனம். ஜனநாயக தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப் படும் அரசாங்கங்கள் இராணுவத்துடன் சமரசமாகப் போகவே விரும்பும்.

துருக்கியில் மேலைத்தேய கலாசாரத்தை புகுத்தி, அதை ஒரு சராசரி ஐரோப்பிய நாடாக்கிய பெருமை அட்டா துர்க்கையே சேரும். துருக்கி அரசு மதச் சார்பின்மையை கறாராக பின்பற்ற வேண்டும் என்பது அவர் உத்தரவு. அதை இன்றைக்கும் நடைமுறைப்படுத்தி வரும் அரச இயந்திரம் இராணுவம் தான். இஸ்லாமியவாத எர்டோகன், பல தடவைகள் மத நம்பிக்கை சார்ந்த சட்டங்களை கொண்டு வர முயன்றார். அப்போதெல்லாம் இராணுவம் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. ஆனால், இந்த தடவை எர்டோகனின் ஆட்சி யைக் கவிழ்க்க நடந்த சதிப்புரட்சியை இராணுவம் ஆதரிக்கவில்லை.

### சூத்திரதாரி யார்?

ஆகவே, தற்போது நடைபெற்ற சம்பவங்களை வைத்துப் பார்க்கும் பொழுது, சதிப்புரட்சிக்கு மக்கள் மட்டுமல்ல, துருக்கி இராணுவம் கூட ஆதரவளிக்கவில்லை என்பது தெளிவாகின்றது. அப்படியானால் சதிப்புரட்சியை நடத்தியவர்கள் யார்? நிச்சயமாக இராணுவத்தில் ஒரு சிறு பிரிவினர் தான். ஆனால், அவர்களது நோக்கம் என்ன? பின்னணியில் வே யார் இருந்துள்ளனர்? இவை இன்னு மர்மமாகவே உள்ளன.

சதிப்புரட்சி தோல்வியடைந்ததும் அதில் ஈடுபட்ட எட்டு இராணுவ அதிகாரிகள் ஹெலிகொப்டரில் தப்பியோடி கிரீசில் தரையிறங்கி உள்ளனர். (இஸ்தான்புல் நகரில் இருந்து கிரேக்க நாட்டு எல்லை சி மைல் தூரம் தான்.) அவர்கள் அங் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க

அ.செ.முருகானந்தன்



ஈழத்தின் மிகச்சிறந்த கதை சொல்லிகளில் ஒருவரான அமரர். அ.செ.மு [அழகு செல்வ முருகானந்தன்], நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். மனித நேயக் கண்ணோட்டத் தோடு வாழ்வியலை அணுகுதலே இவரது படைப்புகளின் பொதுப் பண்பாக இருந்தது. அவரது சிறு கதைகள் 'மனிதமாடு' என்னும் பெயரில் யாழ். மாவட்டக் கலாசாரப் பேரவையாலும், விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தாலும் வெவ்வேறு காலப்பகுதிகளில் வெளியிடப்பட்டிருந்தன. அந்த தொகுதியில் இருந்து 'மனிதமாடு' சிறுகதை நன்றியோடு மீள்பிரசுரமாகிறது.

## சிறுகதை

# மனித மாடு



அவனுக்கு எழுபத்தைந்து வயது இருக்கும். எனது பாட்டனாரின் வயசு, அவருக்குள்ள கூன் முதுகு, வெண்தலை ஒல்லித்தேகம், தளர்ச்சி எல்லாம் அவனிடமும் காணப்பட்டன. தெருவோரமாக ஒரு வயது போன பூவரசின் கீழ் 'ரிக்ஷோ' வும் கையுமாக நின்றான். தெருவில் போகும் மகாராஜா மக்களின் வண்டிகளும் வாகனங்களும் கிளப்பிய புழுதியைக் குடித்துக்கொண்டு, வருகிறவர் போகிறவர்களின் முகத்தை அண்ணாந்து பார்த்தபடி அவன் நின்றான்.

தெருவோரம் போய்க் கொண்டிருந்தேன். கிழவனின் ஒளி மங்கிய கண்கள் என்னையும் தப்பவிடவில்லை. எனக்கும் ஒரு ஆவர்த்தனம் அழுது வைத்தான். "சாமி, ஏறுங்க சாமி, உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும் சாமி. பிள்ளை குட்டிகள் இரண்டு நாளாகப் பட்டினி சாமி, நீங்கள் எல்லாம் இப்படி நடக்க ஆரம்பித்தால் நாங்கள் போகும் கதி என்னவோ சாமி?"

எனக்கு வயது இருபது. அவனுக்கு எழுபத்தைந்து. கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். படம் ஆரம்பிக்க இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. மூன்று மைல் போக வேண்டும். நடந்து போவது என்றால் முடியாத காரியம்.

"சரி, சினிமாக் கொட்டகைக்குப் போக என்ன கேட்கிறாய்?"

> **வண்டி ஒருததரம் குலுங்கி எழுந்தது, அடுத்த கணம் மாயா சக்தி பெற்று அது பறக்கத் தொடங்கிற்று. எழுபத்தைந்து வயசுக் கிழவனுக்கு இந்த ஆவேசம் திடீரென்று எங்கிருந்து வந்துவிட்டது? தூக்கிய கால்கள் நிலத்தில் படாமல் விலா எலும்புகள் வெளியே தெறித்துவிடும் போல் இரைக் இரைக்க தலையும் காலும் ஒன்றாகக் கூனிக்குறுக, மனுஷன் தாவித்தாவி ஓடத் தொடங்கிவிட்டான்.**

ஒட்டி உலர்ந்த அவன் முகத்தில் ஒரு பிரகாசம் உண்டாயிற்று. "ஐயோ சாமி! உங்களிடம் எல்லாம் கூலி பேசுவதா? புண்ணியவான்கள் மனமிரங்கி ஏதோ கொடுத்ததை வாங்குகிறேன்...."

அவனுடைய வயதில் பாதி அந்த வண்டிக்கும் இருக்கும். அப்பழுக்கற்ற முதல்தர கர்நாடகம். ஆனால், எனக்கு இருபது வயசுக் குமரனுக்கு மூன்று மைல் நடந்து போவதற்கு இந்தக் கிழட்டுக் கர்நாடக ஜோடியின் உதவிதானே வேண்டியிருந்தது!.

இரண்டு நாளாகப் பட்டினி கிடந்த குடுகுடு கிழவன் மேல், அவனுடைய வலியிழந்த தேகத்தில் 'ரிக்ஷோ' ஏறியது. ரிக்ஷோவின் மேல் நான் ஏறினேன். கலப்பையில் பூட்டிய மாடுபோல அவன் ஒடுங்கி நின்றான். சவாரி ஆரம்பமாயிற்று. ஆகா! எத்தனை உல்லாசத்தோடு, பெருமிதத்தோடு உட்கார்ந்திருந்தேன் அப்போது. ஆமாம், அந்த எழுபத்தைந்து வயதுக் கிழவன் மேல்!

பட்டினிக்களை; வீட்டில் அவனுடைய அன்றைய சம்பாத்தியத்தை எதிர்பார்த்துக் கிடக்கும் நாலைந்து ஏழைச்சீவன்களைப் பற்றிய கவலை. நான் என்ன கொடுப்பேனோ என்ற ஏக்கம் - எல்லாம் சேர்ந்து கிழவனுக்குப் பெரும் யோசனையையும் சோர்வையும் கொடுத்திருக்க வேண்டும்! வண்டி மெல்லமாக ஊர்ந்து சென்றது.

ஆமாம், இந்த ஞானோதயம் எல்லாம் அப்போது எங்கே போயிருந்தனவோ? அடடா எவ்வளவு குரூப் பிராணியாக, ஈவு இரக்கமற்ற மிருகமாக மாறியிருந்தேன் அன்றைக்கு!

மாட்டுக்கும் 'மெஷினு' க்கும் விலகி, விலகி மனித வண்டி போய்கொண்டிருந்தது. குறுக்கும் மறுக்குமாக ஓடித் திரியும் இயந்திர பூதங்களுக்கூடாக அந்த உணர்வற்ற சடலங்களில் ஒன்றாக மனிதன், பகுத்தறிவுள்ள மனிதன் - நாகரிகமடைந்த மனிதன் - 'பெறற்கரிய மனிதப் பிறவி' போய்க் கொண்டிருந்தது. சவாரி சுகப்படவில்லை. வயது போன கிழட்டு மாடு ஊர்ந்து ஊர்ந்து போயிற்று! அக்கம் பக்கத்தில் எல்லாம் வேகம் வேகமாகப் பறந்து கொண்டிருந்தன. போகும்போது என் மேல், என் வண்டியின்மேல் ஒரு ஏளனப் புன்னகை. ஐயோ, என் மானம் போயிற்று! இரண்டு மைல் கடந்து வந்துவிட்டோம்.

"என்னப்பா வண்டிச் சக்கரங்களில் கறையான் பிடிக்கப்போகிறது!" என்றேன் சற்று உரமாக. கோபமும் ஏளனமும் கலந்த இந்த அதிகாரத் தொனியில் அந்த மனிதன் எவ்வளவு மிரண்டு போய்விட்டான்! நாகரிகத்தையும் கொஞ்சம் நகைச்சுவையையும் அனுசரித்து இந்த வார்த்தையைச் சொல்லிவிட்டேன். "எவ்வளவு விபரீதமாக முடிந்துவிட்டது!"

மனிதனுக்குக் கழிவிரக்கம், பச்சாத்தாபம் எல்லாம் அவன் அதர்மத்தின் ஒரு எல்லையைத் தாண்டிய பிறகுதான்!

தலையைக் கீழே போட்டுக் கொண்டு தனது எலும்புக் கோவையினால் சுமார் "இரு நூறு இறாத்தல்" பாரத்தை இழுத்துக் கொண்டு ஓடிய கிழவன் நான் சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தான்.

அந்த முகம்தான் அச்சமயம் எப்படி மாறிவிட்டது! எவ்வளவு கெஞ்சிற்று! எனக்கு அப்போதாவது அறிவு வந்ததா? 'ரிக்ஷோ' வை விட்டுக் குதித்து ஓடிப்போய் அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டேனோ? அல்லது அவனைத் தூக்கி 'ரிக்ஷோ' வில் வைத்து என்தேகம் ஒடியும்படி இழுத்துக் கொண்டு ஓடினேனோ? கற்றூணைப் போல அசையாமல் இருந்தேன்.

அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சோறு கொடுக்கும் 'ரிக்ஷோ' வைப் பற்றி இழிவாகக் கூறியது கிழவன் மனதில் 'சுருக்' கென்று தைத்துவிட்டது. அந்த ரோசத்துடன் நான் எங்கே இடையில் இறங்கிப் போய்விடுகிறேனோ என்ற அச்சமும் சேர்ந்த கொண்டது.

வண்டி ஒரு தரம் குலுங்கி எழுந்தது, அடுத்த கணம் 'மாயா சக்தி' பெற்று அது பறக்கத் தொடங்கிற்று. எழுபத்தைந்து வயசுக் கிழவனுக்கு இந்த ஆவேசம் திடீரென்று எங்கிருந்து வந்துவிட்டது? தூக்கிய கால்கள் நிலத்தில் படாமல் விலா எலும்புகள் வெளியே தெறித்துவிடும் போல் இரைக் இரைக்க தலையும் காலும் ஒன்றாகக் கூனிக் குறுக, மனுஷன் தாவித்தாவி ஓடத் தொடங்கி விட்டான். தெருவில் போகும் 'சோடி' வண்டிக் காரர்கள் கிழவனையும் 'ரிக்ஷோ' வையும் பார்த்துப் பிரமித்துப் போனார்கள்.

எழுபத்தைந்து வயசுக் கிழம். இருநூறு இறாத்தல் பாரத்தோடு அடடா, என்ன ஓட்டம் ஓடுகிறது!

அந்தச் சமயம் கிழவனை என்னவோ ஒன்று ஆட்டி வைத்தது, அவன் தன் உயிரை வெறுத்து ஓடினான். கிழவனும் 'ரிக்ஷோ' வும் நானும் அடுத்த நிமிஷம் சுக்குநூறாகப் போய்விடக்கூடும். ஆனால், இவை ஒன்றுக்கும் நான் தயாராகவில்லை. சினிமா பார்க்க வேண்டுமே! மனதில் கலவரம் தொட்டுவிட்டது. தன்னை மறந்து தொழில் செய்யும் கிழவனைப் பார்த்து, "என்னப்பா! வண்டிச் சக்கரங்களில் கறையான் பிடிக்கப் போகிறது!" என்று கூறிய அதே திருவாயினால் "கொஞ்சம் நிதானமாக போ அப்பா" என்றேன்.

நேரத்துக்கொரு குணம், சமயத்துக்கொரு பேச்சு, இப்படியாக நான் மாறிக்கொண்டிருந்தேனா? ஆனால் கிழவனோ மகா ரோசக்காரன்; பிடிவாதக்காரன்; எடுத்த காரியத்தை எப்படியும் முடித்துவிடும் மனத்திட முள்ளவன். நான் கூறியதைக் கொஞ்சமும் மனதில் போட்டுக் கொள்ளாமல் தான் ஆரம்பித்த அதே வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தான். படம் ஆரம்பிக்க கால் மணி இருக்க, என்னை அங்கு கொண்டுபோய்ச் சேர்ந்து விட்டான்.

'ரிக்ஷோ' வில் இருந்து இறங்கிச் சட்டைப் பையிலிருந்து கால் ரூபாவை எடுத்து அவன் கையில் வைத்தேன். ரிக்ஷோவின் கைப்பிடிகளைப் பிடித்துப் பிடித்து மரத்துப் போன அந்தக் கைகளை ஒன்றன் மேல் ஒன்று வைத்து குருக்களிடம்

**(18 ஆம் பக்கம் பார்க்க...)**

# ஒரு பள்ளிக்கூடம்: இரண்டு அதிபர்கள்

## அரசியலால் தொடரும் இழுபறி

வர்ஷி




**அண்மைக்காலமாக பல பாடசாலைகளில் அதிபர் நியமனத்தில் அரசியல் புகுந்து விளையாடத் தொடங்கியுள்ளது. அப்படி ஒரு விளையாட்டில் கடைசியாக சிக்கிய பாடசாலை குறித்த பார்வை இது.**

கிளிநொச்சி, 1995 ஆம் ஆண்டு குடா நாட்டை இராணுவம் கைப்பற்றிய பின்னர் சர்வதேசத்தின் கண்களுக்குத் தெரியவந்த இடம். விடுதலைப்புலிகளின் அரசியல் தலைநகரமாக கோலோச்சிய இடம். 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படும் வரை அதன் முக்கியத்துவம் குறையாமலேயே இருந்து வந்தது. படை நடவடிக்கைகளின் போது விடுதலைப்புலிகளும் படையினரும் மாறி மாறி அந்த இடத்தை பல்வேறு தடவைகள் கைப்பற்றியமையும் அந்த இடத்தின் முக்கியத்துவத்தை மேலும் பறைசாற்றுவதாகஅமைந்தது. விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்களது நிர்வாகமானாலும் சரி, அரச நிர்வாகமானாலும் சரி சீராகவே இயங்கியது. அது ஒரு காலம்.

★★★

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் அரசின் சிவில் நிர்வாகம் செயற்படத்தொடங்கியது. இந்த நிலையில் இம் மாவட்டத்தில் அரசியல்வாதிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்குள் சிக்கி சீரழிகிறார்கள் அதிகாரிகளும் ஏனையோரும். இவ்வாறான நிலையில் தான் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச் செயற்பாட்டிலும் புகுந்து விளையாடுகிறது அரசியல். இதனால் பெரிதும் பாதிக்கப்படுவது எமது மாணவர்களே என்பதனைப் பற்றி எவரும் அக்கறைகொள்வதாகத் தெரியவில்லை. மாறாக தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவதிலேயே அரசியல்வாதிகள் குறியாக உள்ளனர். இந்தப் பின்னணியிலேயே தற்போது கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய அதிபர் நியமன விவகாரமும் எழுந்துள்ளது.

### புகுந்தது அரசியல்

07.07.2016 அன்று பெருமாள் கணேசன் குறித்த பாடசாலையை பொறுப்பேற்கத் தயாரான நிலையில் முதல் நாள் புதன் இரவு அரசியல் வாதி ஒருவர் தொலைபேசியூடாக பெருமாள் கணேசனைத் தொடர்பு கொண்டு, "நீர் நாளை பாடசாலைக்குச் சென்று பொறுப்பெடுக்க வேண்டாம். அங்கு நீங்கள் செல்வதற்கு பெற்றோர் குழம்புகின்றனர்" எனத் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அவர் வியாழன் பாடசாலை செல்லவில்லை. எனினும் கல்வியமைச்சு செயலாளரின் கடிதத்திற்கு மதிப்பளித்து திங்கட்கிழமை பாடசாலைக்கு சென்று அங்கு கடமையில் இருக்கும் திருமதி சுந்தரமூர்த்தி ரஞ்சிதமலர் என்ற அதிபரிடம் தனது நியமனக் கடிதத்தை காண்பித்து பாடசாலையின் 'லொக்புக்' கிலும் பாடசாலையை பொறுப்பேற்பதாக கையெழுத்திட்டார்.

### தொடங்கியது சர்ச்சை

இந்த நிலையிலேயே அங்கு கடமையிலிருக்கும் அதிபர் திருமதி. சுந்தரமூர்த்திக்கும் கல்வி அமைச்சின் செயலாளரினால் 05.07.2016 கடிதத்தின் பிரகாரம் 07.07.2016 பன்னங் கண்டி வித்தியாலயத்தை பொறுப்பெடுக்குமாறு தெரிவிக்கப் பட்டிருந்தது.

ஆனால் தான் குறித்த பாடசாலைக்கு வந்து ஒரு வருடமும் பத்து மாதமுமே ஆன நிலையில் தன் மீது எவ்வித குற்றமும் காணப்படாத நிலையில் தன்னை ஏன் இடமாற்றம் செய்கிறீர்கள் எனத் தெரிவித்து 07 ஆம் திகதி வலயம் மூலமாக மாகாணத்தில் மேன் முறையீடு செய்துள்ளார் அவர்.

இவரது மேன் முறையீட்டு முடிவுவரும் வரையில் குறித்த பாடசாலையிலேயே கடமையாற்றுமாறு மாகாணகல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக வலயக் கல்விப் பணிமனை குறித்த அதிபருக்கு வாய் மூலமாகத் தெரிவித்துள்ளது. இதனால் அவர் தொடர்ந்தும் அங்கேயே கடமையாற்றுகின்றார்.



**கல்வியமைச்சு செயலாளரின் 05.07.206 கடிதத்தின் பிரகாரம் பல்வேறு இழுபறிகளுக்குப் பின்னர் 07.07.2016 கடமையைப் பொறுப்பேற்க வேண்டிய நான் 11.07.2016 திங்கள் பாடசாலை சென்று அங்கு கடமையிலிருந்த அதிபரிடம் எனது கடிதத்தைக் காட்டி லொக்புக்லும் கையெழுத்திட்டேன்.**

**எனினும் அவர் தனது இடமாற்றம் தொடர்பாக மேன் முறையீடு செய்துள்ளதாகத் தெரிவித்து என்னிடம் எந்தப் பொறுப்பையும் தரவில்லை. இதனால் அங்கு நான் கடமையற்றே இருக்கிறேன்.**

**- பெருமாள் கணேசன்**

*(புதிய அதிபர், கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்)*

05.07.2016 அன்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் 07.07.2016 அன்று பன்னங் கண்டி பாடசாலையைப் பொறுப்பேற்குமாறு கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால் நான் கிளி/ சாந்தபுரம் பாடசாலையைப் பொறுப்பெடுத்து ஒரு வருடமும் பத்து மாதமுமே ஆன நிலையில் எவ்வித குற்றச் சாட்டுக்களும் என்மீது சுமத்தப்படாத நிலையில் நான் அன்றைய தினமே மேன்முறையீடு செய்துள்ளேன். நான் அதிபர் தரம் 2 ஐச் சேர்ந்தவர். அதிபர் ஒருவர் பாடசாலை ஒன்றில் ஏழு வருடம் கடமையாற்றலாம் அல்லது குறைந்தது ஐந்து வருடம் இருக்கலாம். நான் இந்தப் பாடசாலைக்கு வந்து ஒரு வருடமும் பத்து மாதமும் ஆன நிலையில் பாடசாலையில் முன்னேற்றங்களை காட்ட வேண்டும். அப்படி இருக்கையில் என்னை திடீரென இடம் மாற்றுகிறார்கள்.

நான் சிவபாத கலையக பாடசாலையில் பிரதி அதிபராக இருந்த போது சாந்தபுரத்தைப் பொறுப்பெடுக்குமாறு கூறப்பட்டது. ஆனால் நான் அங்கு போகமாட்டேன் எனமேன் முறையீடு செய்யப்பட்டது. எனினும் எனது மேன் முறையீடு நிராகரிக்கப்பட்டதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம் தெரிவித்தார். இந்த நிலையில் நான் இந்தப் பாடசாலையை பொறுப்பெடுத்தேன். தற்போது எனக்கு இந்தப் பாடசாலையைப் பிடித்து விட்டது. இங்கு வந்து எவ்வித முன்னேற்றங்களையும் காட்டாமல் நான் வேறு பாடசாலைக்கு எவ்வாறு செல்வது? எனது இடம் உதயநகர். அங்கிருந்து பன்னங்கண்டி தூரம் எனவே நான் சாந்தபுரத்திலிருந்து போகமாட்டேன்.

**- திருமதி.சுந்தரமூர்த்தி ரஞ்சிதமலர்**

*(அதிபர், கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்)*

### பின்னணி என்ன?

கிளிநொச்சி பாரதிபுர வித்தியாலயத்தில் அதிபராக இருந்த பெருமாள் கணேசன், அப் பாடசாலையை 1 AB பாடசாலையாக தரம் உயர்த்தி உயர்தரப் பிரிவில் விஞ்ஞான, கணிதப் பிரிவுகளை ஆரம்பித்து பாடசாலையை திறம்பட நடத்தி வந்த நிலையில் "அவர் அதிபர் தரம் 3 ஐச் சேர்ந்தவர்" எனத் தெரிவித்து 2015 ஜுலை 03 அங்கிருந்து மாற்றப்பட்டு அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஒரு வருடமாக பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கடந்த 05.07.2016 அன்று வடமாகாண கல்வியமைச்சர் ரவீந்திரன் கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் அதிபராக 07.07.2016 வியாழன் பொறுப்பேற்குமாறு பெருமாள் கணேசனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

### பெருமாள் கணேசனின் நிலை

ஆனால் பெருமாள் கணேசனுக்கு எவ்வித அறிவிப்பும் மாகாணத்தாலோ, வலயத்தாலோ விடுக்கப்படவில்லை. அவர் நாளாந்தம் பாடசாலை செல்வதும் கையெழுத்திடுவதும் பாடசாலை மரங்களுக்குக் கீழ் இருப்பதும் சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்துவதுமாக பணிபுரிகின்றார்.

### தவறு எங்கே நடந்தது?

சாந்தபுரம் பாடசாலையில் ஏற்கனவே ஒரு அதிபர் கடமையில் உள்ள நிலையில் பன்னங் கண்டி பாடசாலைக்கு அதிபர் வெற்றிடமென்றால்,பெருமாள் கணேசனை அந்தப் பாடசாலைக்கல்லவா கல்வியமைச்சு நியமித்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து அதிபர்களை மோதவைக்கும் செயற்பாட்டில் ஏன் கல்வி அமைச்சு இறங்கவேண்டும்? இதனால் அதிபர்களுக்குள் மனக்கசப்பு, ஆசிரியர்கள் எந்த அதிபரின் கீழ் பணியாற்றுவது என்று தெரியாமல் திண்டாடுவது போன்ற சிக்கலுக்குள் பாதிக்கப்படுவது மாணவர்களின் கல்விச் செயற்பாடே இது ஏன் இன்னும் எமது அரசியல் வாதிகளுக்கு தெரியாமல் உள்ளது.

குறித்தபாடசாலையில் பெருமாள் கணேசன் அதிபராக பொறுப்பேற்றால் பெற்றோர் குழம்புவார்கள் என குறித்த அரசியல்வாதிக்கு யார் சொன்னது? அப்படியென்றால் வடக்குமாகாண கல்விஅமைச்சு வேடிக்கை பார்ப்பது ஏன்?

நிர்வாக ரீதியில் பணிப்புரை வழங்கும் போது அதனை செயற்படுத்த வேண்டியது கீழுள்ளவர்களின் கடமை. இதைவிடுத்து "நான் செல்லமாட்டேன் என்னைக் கேட்டா இடமாற்றம் தந்தீர்கள்" எனக் கேட்பது எந்த வகையில் நியாயம். அவ்வாறெனில் மாணவர்களுக்கு கீழ்ப்படிவு குறித்து எப்படி சொல்லிக் கொடுக்க முடியும். அவர்களை எவ்வாறு சமூகத்தில் நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க முடியும்.

எனவே இரண்டு அதிபர்கள் ஒரு பாடசாலையில் என்ற நிலையை மாற்றி சுமுகமான கல்வி நடவடிக் கைகள் தொடர அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்பட்டு எமது மாணவர்களின் கல்வி நேரியவழியில் செல்வதற்கு சம்மந்தப்பட்டவர்கள் இடமளிப்பார்களா?

# மனித மாடு

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீபூதிப் பிரசாதம் வாங்குவதுபோல, மரியாதையாக வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு திரும்பினான். புகைப்படலம் எழும்புவதற்கும், எச்சில் துப்புவதற்குமாக ஒரு ரூபா வரை மேலதிகமாகக் கையில் கிடந்தது. உயிரும் உடலும் தேய்ந்துபோக என்னைச் சுமந்து வந்த கிழவனுக்குக் கால் ரூபாவிற்கு மேல் கொடுப்பதற்கு இந்த மனம் இசையவில்லை. அவன் திரும்பிப்போகும் போது பார்த்தேன். சுகமாக மூச்சுவிடக்கூட முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தான். இவற்றையெல்லாம் பார்த்து ரசிப்பதற்கு அவகாசம் ஏது?

தியேட்டரில் மணி அடித்தது.

ஒரு ரூபா கொடுத்து உள்ளே போய்க் கதிரையில் உட்கார்ந்து கனவு காண ஆரம்பித்தேன். மூன்று நாலு மணிநேரம் நீடித்த கனவு! 'ரிக்ஷோ' வையும் கிழவனையும் ஏன் வெளி உலகத்தையுமே மறந்து கனவு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்துவிட்டு இரவு சுமார் பத்து மணியளவில் நிஜ உலகத்துக்கு வெளியேறித் தெருவழியே திரும்பி வந்து கொண்டிருந்தேன். ஆமாம் கால் நடையில்தான்.

சினிமாக் கொட்டகையிலிருந்து அரை மைல் தூரத்தில் ஒரு சாவடி, மிகவும் பழைய காலத்தியது. மனித வாழ்கையின் ஓட்டைகளைப் பற்றி அதனிடம் கேட்டால் அது நன்றாகச் சொல்லும். அது விஷயத்தில் அவ்வளவு அனுபவம் அதற்கு!

அந்தச் சாவடிப் பக்கமாக போய்க் கொண்டிருந்தேன். அதற்குப் பக்கத்தில் தெருவோரமாக ஒரு சிறு சனக்கூட்டம் தென்பட்டது. சிறிது தூரத்தில், எரிந்து கொண்டிருந்த நகர சபை வெளிச்சத்தில் அந்த சனக் கும்பல் நடுவே எதையோ வைத்துவிட்டு சுற்றி நிற்பது போல் மங்கலாகத் தெரிந்தது.

சனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே தலையை நீட்டிப் பார்த்தேன். ஒரு கிழவனுடைய பிரேதம். அதற்குப் பக்கத்தில் 'ரிக்ஷோ' ஒன்று சரிந்து கிடந்தது. பிரேதத்தின் வாயிலிருந்து இரத்தம் வடிந்து காய்ந்து போயிருந்தது.

அன்று மாலை நான் ஏறிவந்த அதே ரிக்ஷோவும் கிழவனும். கிழவனுடைய உடல், 'ரிக்ஷோ' சுற்றி நின்ற சனக் கூட்டம் எல்லாம் சுழல ஆரம்பித்தன.

அப்படியே உட்கார்ந்து விட்டேன். பகவானே அவன் உயிரைக் குடித்த பழி கடைசியில் என் தலையில் தானா பொறுக்கவேண்டுமா? சனங்கள் வந்தார்கள். வந்து கூட்டமாக நின்று பார்த்தார்கள். பார்த்துவிட்டுப் போனார்கள். மனிதனை சுமந்து திரிந்த மனித தேகம் தெருவில் புரண்டு போய்க்கிடக்கின்றது. அதன் மேல் ஏறித் திரிந்து சவாரி செய்தவர்கள் வந்தார்கள். நின்று பார்த்தார்கள். பார்த்து விட்டுப் போனார்கள். ■

---

# துருக்கிச் சதி: புரட்சியா? ஒத்திகையா?

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரேக்க அரசு அவர்களை கைது செய்து விட்டு, ஹெலிகொப்டரை துருக்கிக்கு திருப்பி அனுப்பிவிட்டது. ஆனால், அரசியல் தஞ்சம் கோரிய படையினர் திருப்பி அனுப்பப் படுவார்களா என்பது. தெரியவில்லை. இந்தியா - பாகிஸ்தான் மாதிரித் தான், கிரீஸ், துருக்கிக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளும் உள்ளன.

துருக்கியில் இது வரையில் ஜெனரல்கள் உட்பட இரண்டாயிரத்திற்கும் அதிகமான படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக இரண்டாம் படைப்பிரிவு தளபதி ஆதம் ஹூடுத்தி (Adem Huduti), மூன்றாம் படைப்பிரிவு தளபதி எர்டல் எஸ்துர்க் (Erdal ztrk) ஆகிய தளபதிகள் கைது செய்யப்பட்ட பெரிய தலைகளுள் சிலர் மூன்றாம் படைப்பிரிவு இஸ்தான்புல் மாநகர காவலுக்கும், இரண்டாம் படைப்பிரிவு சிரியா எல்லைக் காவலுக்கும் பொறுப்பான இராணுவப் பிரிவுகள் ஆகும். மேலும், 2745 நீதிபதிகளும், 140 சட்டமா அதிபர்களும் கைது செய்யப்பட்டவர்களில் அடங் குவார்கள். இன்னும் பலர் தேடப்படுகின்றனர்.

## நீதிபதிகளா? சதிகாரர்களா?

எர்டோகன் அரசு எதற்காக நீதிபதிகளை கைது செய்ய வேண்டும்? அரசு, அரசாங்கம் என்பவற்றிக்கு எதிரான வித்தியாசங்களை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். தேர்தலில் வெற்றி பெறும் கட்சி அரசாங்கம் அமைத்தாலும், அது விரும்பும் மாற்றங்களை கொண்டு வருவதற்கு தடையாக அரசு இருக்கலாம். நீதிபதிகள் போன்றோர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அரசுப் பிரதிநிதிகள். அப்படியானவர்களை அப்புறப்படுத்தினால், தான் விரும்பும் இஸ்லாமிய மதச் சார்பான மாற்றங்களை கொண்டு வரலாம் என்பது எர்டோகனின் நோக்கம்.

துருக்கியின் தென்கிழக்கு பகுதியில், சிரியா எல்லைக்கு அருகில் உள்ள இன்சிரில்க் (Incirlic) விமானப் படைத் தளத்தை சேர்ந்தவர்களே இராணுவ சதிப்புரட்சியின் சூத்திரதாரிகள் என்று ஒரு சந்தேகம் நிலவுகின்றது. அங்கிருந்து தான் சதிப்புரட்சிக்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப் படுகின்றது. இதனால், இன்சிரில்க் முகாம் சுற்றி வளைக்கப்பட்டது.

முகாமுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது. அங்கிருந்த துருக்கிப் படையினர் விசாரணை செய்யப்பட்டனர். பலர் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இன்சிரில்க் படைத்தளம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் ஒரு பகுதியில் அமெரிக்க இராணுவ வீரர்கள் தங்கியுள்ளனர். நேட்டோ அங்கத்துவ நாடான துருக்கியில் மொத்தம் 2,200 அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளனர். அவர்களில் 1,500 பேர் இன்சிரில்க் முகாமில் உள்ளனர். சிரியாவில் ISIS பிரதேசம் மீது குண்டு வீசும் அமெரிக்க விமானங்கள் இன்சிரில்க் படைத் தளத்தில் இருந்து தான் புறப்படுகின்றன.

## நண்பனே எதிரி

அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழும் குய்லன் (Glen) என்ற அரசியல் தலைவர் தான், தோல்வியுற்ற சதிப் புரட்சிக்கு காரணம் என்று எர்டோகன் குற்றம் சாட்டுகின்றார். அவர் ஒரு "பயங்கரவாதி" என்றும், துருக்கிக்கு நாடு கடத்துமாறும் அமெரிக்க அரசை கோரியுள்ளார். ஆனால், அது நடக்குமா என்பது தெரியவில்லை. எர்டோகனும், குய்லனும் ஒரு காலத்தில் நெருங்கிய நண்பர்கள்! தற்போது ஜென்மப் பகைவர்கள்!

தற்போது ஆளும்கட்சியான அக் கட்சி, முதன் முதலாக 2002 ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடித்தமைக்கு குய்லன் முக்கிய காரணம். அவரது மேற்பார்வையின் கீழிருந்த குய்லன் இயக்கம் தேர்தல் வெற்றிக்காக கடுமையாக உழைத்தது. ஆட்சியைப் பிடித்த பின்னர், எர்டோகனுக்கும், குய்லனுக்கும் இடையில் விரிசல் தோன்றியது.

எர்டோகன் தீவிர இஸ்லாமியவாதியாக இருந்தது மட்டுமல்லாது, தனது சர்வாதிகார தலைமையின் கீழ் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முயற்சித்தார். அதற்கு மாறாக, குய்லன் மிதவாத இஸ்லாமியவாதியாக, பாராளுமன்ற ஜனநாயகத்தை ஆதரித்து வந்தார்.

இது மட்டுமே, அக் கட்சியின் இரண்டு தலைவர்களுக்கும் இடையிலான கொள்கை வேறுபாடு. அதைத் தவிர வேறு தனிப்பட்ட காரணங்கள் இருக்கலாம்.

## குய்லன்: தனிமரமல்ல தோப்பு

ஒரு காலத்தில் ஐரோப்பாவில் பின்தங்கிய நாடாக இருந்த துருக்கி, தொண்ணூறுகளுக்குப் பிறகு பொருளாதார வளர்ச்சி கண்டது. அப்போது தோன்றி வளர்ந்த தேசிய முதலாளிகளின் செல்வாக்கும் அதிகரித்தது. அவர்கள் தான் இஸ்லாமியவாத AK கட்சியின் நிதிப் புரவலர்கள். தேசிய முதலாளித்துவமும், இஸ்லாமியவாதமும் கையோடு கைகோர்த்து ஆட்சியைப் பிடித்தன. இருப்பினும் ஆளும் வர்க்கத்தின் உள்ளேயே பிளவுகள் தோன்றின. அவற்றில் குய்லன் ஆதரவுக் குழுவினர் முக்கியமானவர்கள். இது ஒரு கோஷ்டி மோதல். குய்லன் இயக்கம் என்பது, ஒரு சமூக அரசியல் அமைப்பாக, ஏராளமான உறுப்பினர்கள், ஆதரவாளர்களைக் கொண்டுள்ளது.

துருக்கியர்கள் ஒரே மொழி பேசினாலும், அவர்கள் ஒரு பிளவுபட்ட சமுதாயம் தான். கொள்கை முரண்பாடு காரணமாக சிலநேரம் உறவினர்களும் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வதில்லை. இடது சாரிகளும், வலது சாரிகளும் நேரில் கண்டால் கடித்து இரத்தம் குடிக்குமளவிற்கு வெறுப்பார்கள். அந்தப் பிரிவினை ஒரு புதினமல்ல. காலங்காலமாக இருந்து வருவது தான். ஆனால், இஸ்லாமியவாதிகள் (துருக்கி இடதுசாரிகள் அவர்களை "இஸ்லாமிய - பாசிஸ்டுகள்" என்றும் அழைக்கிறார்கள்) தமக்குள் பிளவு பட்டு அடிபடுவது ஒரு புதிய அரசியல் தோற்றப்பாடு என்று தான் சொல்ல வேண்டும்.

தோல்வியுற்ற சதிப்புரட்சிக்கு குய்லன் தான் காரணம் என்று எர்டோகன் சொல்வது உண்மையானால், இது ஆளும் வர்க்கத்திற்குள் தோன்றிய முரண்பாட்டின் விளைவு என்பது தெளிவாகின்றது. ஏனெனில், சதிப் புரட்சிக்கு காரணமானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர், நீதித் துறையினரில் பெரும்பான்மையானோர் குய்லன் இயக்கத்தை சேர்ந்தவர்கள்.

குய்லன் இயக்கம் ஒரு சாதாரணமான சமூக அமைப்பு அல்ல. உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் உள்ள மசூதிகள், பள்ளிக் கூடங்கள், வணிக நிலையங்கள் பல குய்லன் இயக்க ஆதரவாளர்களினால் நடத்தப்படுகின்றன. உண்மையில் இன்னும் சில சமூக அமைப்புகள் அவ்வாறு இயங்குகின்றன. ஆனால், எர்டோகனின் சர்வாதிகாரத்திற்கு சவாலாக இருப்பது குய்லன் இயக்கம் மட்டும் தான். பிரபல இஸ்லாமிய அறிவு ஜீவியான பெதுல்லா குய்லன், அமெரிக்காவில் பென்சில்வேனியாவில் வாழ்ந்து வருகிறார்.

துருக்கி அமைச்சர் சொய்லு, "இராணுவ சதிப்புரட்சியில் அமெரிக்காவுக்கு பங்கிருக்கிறது" என்று தெரிவித்தார். இவ்வாறு துருக்கி அரசு பகிரங்கமாக அமெரிக்காவை குற்றம் சாட்டிக் கொண்டிருந்தால், "இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் விரிசல் ஏற்படும்" என்று அமெரிக்க அமைச்சர் கெரி எச்சரிக்கை விடுத்திருந்தார். அமெரிக்க - துருக்கி உறவில் விரிசல் ஏற்படுமானால், அது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை உண்டாக் கும். தற்போது நடந்துள்ள இராணுவ சதிப்புரட்சி ஓர் ஒத்திகை மட்டுமே. ஆட்டம் இனித்தான் ஆரம்பமாகவுள்ளது.

## விலகவில்லை அபாயம்

துருக்கியில் இராணுவ சதிப்புரட்சி தோல்வியடைந்ததும், மக்கள் சக்தி வெற்றி பெற்று விட்டதாக பலர் நினைக்கலாம். ஆனால், ஆட்சியாளர்கள் அப்படிக் கருதவில்லை. "சதிப்புரட்சி அபாயம் இன்னும் நீங்கவில்லை" என்று பிதமர் யில்ட்ரிம் சொல்லிக் கொண்டிருக்கிறார். வழமையாக இஸ்லாமியவாத AK கட்சியுடன் கொள்கை ரீதியாக முரண்படும், HP (துருக்கி தேசியவாதிகள்), HDP (குர்திய உரிமைப் போராளிகள்) போன்ற எதிர்க்கட்சிகளும் சதிப்புரட்சியை கண்டித்துள்ளன. ஆனால், அமெரிக்க தூதுவராலயம் சதிப்புரட்சியை வரவேற்று அறிக்கை விட்டதாக சொல்லப்படுகின்றது. ஐரோப்பிய தீவிர வலது சாரிகளும் "எர்டோகன் ஆட்சி கவிழ்க்கப் பட்டதற்கு" மகிழ்ச்சி தெரிவித்திருந்தனர்.

துருக்கியில் நடந்த சதிப்புரட்சியில் அமெரிக்காவின் பங்கு என்ன? எர்டோகன் தன்னை ஒரு நவீன சுல்தானாக காட்டிக் கொள்வதும், ஓட்டோமான் சாம்ராஜ்யப் பெருமை பேசுவதும் மத்திய கிழக்கின் அரசியல் வரைபடத்தை மாற்றும் உள்நோக்கம் கொண்டது. எர்டோகனின் இஸ்லாமியவாத அரசியல் கொள்கை அமெரிக்காவை எரிச்சலூட்டி வருகின்றது. ஐ.எஸ். அல்கைதா போன்ற தீவிரவாதிகளை விட, எர்டோகன் போன்ற ஜனநாயகவாதிகள் ஆபத்தானவர்கள் என்று அமெரிக்கா நினைக்கிறது. அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழும் எர்டோகனின் எதிரி குய்லன். இன்சிரில்க் இராணுவ தளத்துடன் தொடர்பு பட்டவர்களின் கைது. சிரியா எல்லைக் காவல் படைத் தளபதி கைது. இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் கணக்கு சரியாகத் தான் வருகின்றது. ■



# 02 வேட்டையாடிகள்

எஸ்.கிருபானந்தகுமாரன்
(கால்நடை வைத்தியர் )

**பன்றிக்கு வைக்கப்படும் மேற்படி வெங்காய வெடிகளில் யானை, மாடு, ஆடு நாய் போன்ற இதர விலங்குகளும் சிக்கிக் கொள்கின்றன. வெடி மருந்து பெரும்பாலும் தாடைப் பகுதியை சிதைத்து விடுவதால் சிங்களத்தில் ஹக்க பட்டாஸ் என்பர்.**

இதற்கு நான் மடு மற்றும் சிங்கராஜவன காட்டுப் பிரதேசங்களில் வேலை செய்த, செய்கின்ற அனுபவங்கள். மற்றும் பல்கலைக்கழக காட்டு விலங்கு சிகிச்சை சார் அனுபவங்களைப் பயன்படுத்தியிருக்கிறேன்.

வேட்டை மனிதர்கள் கிராம வாசிகள் மற்றும் வன அலுவலர்கள், வைத்தியர்கள் போன்றவர்களுடன் கதைத்திருந்தேன்.

சாதாரணமாக நாய்களைக்கொண்டு முயல், உடும்பு, சருகு மான் போன்ற சிறிய விலங்குகள் வேட்டையாடப்படுகின்றன. இதற்காக நாய்கள் சிறு வயது முதல் பழக்கப்படுகின்றன.

சிறிய உயிரினங்களின் இருப்பிடங்களை மோப்பம் பிடிக்கும் நாய்கள் அவற்றை தேடி வெளியே இழுத்து அவை ஓடாமல் மறித்து, மனிதனுக்கு அடையாளம் காட்டுகின்றன.

லப்ரடோர் ரிட்ரீவர் (labrador retriver) கோல்டன் ரிட்ரீவர் (golden retriver) சல்கி (saluki) போன்ற வெளிநாட்டு நாய் இனங்கள் வேட்டைக்கு பயன்படும் பிரத்தியேக இனங்களாகும். இலங்கையைப் பொறுத்தவரை உள்ளூர் நாய்கள் தான் வேட்டை நாய்கள். சில வேளைகளில் மான், மரை போன்ற பெரிய விலங்குகளை வேட்டையாட பக்கத் துணை புரிகின்றன.

இதனை விட மான், மரைகளை பிடிக்க இடியன் எனும் ஒரு வகை உள்ளூர் தயாரிப்பு கருவி பயன்படுகிறது. சில இரும்பு மற்றும் பிளாஸ்டிக் குழாய்கள் இடியனை அமைக்க பயன்படுகின்றன. நெருப்புக் குச்சி, சீன வெடி மருந்துகள் வெடிக்கும் பொருளாக இருப்பதோடு சில ஈய மற்றும் இரும்புக் குண்டுகள் தோட்டாவாக பயன்படுகின்றன. குறிப்பிடத்தக்க அளவு சத்தத்தை வெளிவிடும் மேற்படி கருவி யானைகளை விரட்டவும் பயன்படுகிறது. மேலும் கட்டுத்துவக்கு (Trap gun) எனும் ஒருவகைக் கருவி நூல் மற்றும் கயிற்றினால் தொடுக்கப்பட்டு மிருகங்களின் தொடுகை மூலம் இயக்கப்படுகிறது. இதுவும் இடியன் போன்றதே.

வெங்காய வெடி எனும் பதத்தை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். எறிவெடி எனும் வினோதமான பட்டாசு வகையை பயன்படுத்தி பெரும்பாலும் செய்யப்படும் ஒருவித வேட்டைக் கருவிதான் வெங்காய வெடி. சிலவேள்ளகளில் யானைகளை விரட்ட பயன்படும் வெடி மற்றும் நெருப்பு குச்சி மருந்துகள் போன்றவற்றை பயன்படுத்தி வெங்காய வெடி செய்யப்படுகிறது. தவிடு போன்ற உணவு வகைகளுடன் குழைத்தும் கருவாடு மற்றும் சில நாட்பட்ட இறைச்சி வகைகளுடன் கலந்தும் இவை தயாரிக்கப்படுகின்றன. இந்த வெடி பொருளின் பிரதான இலக்கு காட்டுப் பன்றிதான். தவிடு மற்றும் நாட்பட்ட இறைச்சியின் வாசனையால் கவரப்படும் பன்றிகள் இந்த வெங்காய வெடியை கடிக்கின்றன. இதன் போது வெங்காய வெடி வெடித்து தலை சிதறி உயிரிழக்க நேரிடுகிறது. வெடிச் சத்தத்தை கொண்டு வேட்டை மனிதர்கள் தமது இலக்கை உறுதிப்படுத்தி இறைச்சியை பெறுகின்றனர்.

பன்றிக்கு வைக்கப்படும் மேற்படி வெங்காய வெடிகளில் யானை, மாடு, ஆடு நாய் போன்ற இதர விலங்குகளும் சிக்கிக் கொள்கினறன. வெடி மருந்து பெரும்பாலும் தாடைப் பகுதியை சிதைத்து விடுவதால் சிங்களத்தில் ஹக்க பட்டாஸ் என்பர். ஹக்க என்றால் சிங்களத்தில் தாடை. நான் பல்கலைக் கழகத்தில் படித்த போது ஹபரணையில் மேற்படி வெடி வெடித்து வாய்ப்பகுதி சிதறிய யானையை கண்டிருக்கிறேன். பூசணிக்காயில் வைக்கப்பட்டிருந்த வெங்காய வெடி வெடித்ததில் அது பாதிக்கப்பட்டிருந்தது. ஒரு கிழமை வரை அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டும் அது சிகிச்சை பலனின்றி இறந்து போனது. தினமும் பல நூறு கிலோ தாவரங்களையும் பல நூறு லீட்டர் நீரும் அருந்தும் மேற்படி பேருயிரினம் அதனைச் செய்ய வழியின்றி இறந்து போனது.

வடக்கு கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண காடுகளில் வெங்காய வெடியில் பாதிக்கப்பட்ட ஏராளமான யானைகள் கடும் காயமுற்று சீழ் பிடித்து புழு வைத்து சாப்பிடாமல் இருந்து சில நாட்களில் இறப்பதை கேள்விப் பட்டிருக்கிறேன்.யானைகள் மட்டுமின்றி மான், காட்டெருமை போன்றவையும் இப்படி காடுகளில் இறக்கின்றன.

சில வேளைகளில் வேட்டைக்காரர்கள் தமது உடைப் பைகளில் வெங்காய வெடிகளை வைத்து கொண்டு செல்லும் போது உராய்வு ஏற்பட்டோ வெப்பம் கூடியோ வெடித்துவிடும்.

**(வேட்டை தொடரும்...)**

## சொல்லுங்கள் – 06 வெல்லுங்கள்

கீழுள்ள வினாவுக்குரிய விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் ஐவருக்கு பணப்பரிசு காத்திருக்கிறது. பலர் சரியான விடையை எழுதி அனுப்பியிருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**வினா -**
**துருக்கி நாட்டு அதிபரின் பெயர் என்ன?**

**விடை:**............................................

முதற்பரிசு - ரூபா. 2000.00
இரண்டாம் பரிசு - ரூபா. 1500.00
மூன்றாம் பரிசு - ரூபா. 1000.00
ஆறுதல் பரிசுகள் - ரூபா. 500.00 இருவருக்கு

**முடிவுத்திகதி: 02.08.2016**

அனுப்பவேண்டிய முகவரி:
"சொல்லுங்கள் வெல்லுங்கள்" - 06
புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## சொல்லுங்கள் வெல்லுங்கள் -04 முடிவுகள்

**விடை : அஞ்சலோ மத்தியூஸ்**

**முதலாம் பரிசு - ரூ. 2000**
கேதீஸ்வரன் டன்சியா
மொட்டையன் குளம்,
கிராஞ்சி - சிவபுரம், பூநகரி.

**இரண்டாம் பரிசு - ரூ. 1500**
ஏ.சீ.எம். நுதம்மில்
இல.179 நியூ எல்லிப்பிட்டிய,
கெலிஓயா.

**மூன்றாம் பரிசு - ரூ. 1000**
அ.திலோத்தமன்
அராலிமத்தி, வட்டுக்கோட்டை.

**ஆறுதல் பரிசு - (தலா ரூ.500'வீதம்)**
i. பி.எஸ்.ஏ. தாஹிர்
10/1 மத்தியவீதி, காத்தான்குடி- 03.

ii. எஸ்.மோகனதாசன்
சஞ்சீவன் ரயர் வேக்ஸ்
திருமுறிகண்டி.

(பரிசில்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்)

* சொல்லுங்கள் வெல்லுங்கள் போட்டி - 02 இல் முதல் பரிசு பெற்றவரின் பெயர் இராஜேந்திரன் சரஸ்வதி - திருகோணமலை.என்பதே சரியானது. தவறுக்கு வருந்துகிறோம்.

புதுவிதி PUTHU VITHI

### பாராட்டுப்பெறுவோர்

- எஸ்.கெங்காதரன் -அல்வாய்.
- கே.எல்.அப்துல் றகூல்- நிந்தவூர்.
- யாழினி-கொடிகாமம்.
- தம்பையா யோகராசா - சரசாலை.
- இராஜேந்திரன் சரஸ்வதி - திருகோணமலை.
- ரெ.கமலநாதன் -யாழ்ப்பாணம்.
- யூலியஸ் ஆதர் டோசன் - மானிப்பாய்.
- கே.எஸ்.சிவஞானராஜா -கொக்குவில்.
- ஞா.செந்தமிழ்ச் செல்வன் - ஏழாலை.
- ச.ஜதியன் - வடலியடைப்பு.
- எஸ்.பரிதியன் -யாழ்ப்பாணம்.
- உ.பிறேமிளா - ஊர்காவற்துறை.
- கு.அபிசன் - வடலியடைப்பு.
- குமாரசாமி பிரபாகரன் - யாழ்ப்பாணம்.
- இ.சிவசிறிதரன் - வட்டுக்கோட்டை.
- சி.தருண் -அராலி.
- தினேஷிகா மணிவண்ணன் - சுழிபுரம்.
- வற்சலா துரைசிங்கம் - தெல்லிப்பளை.
- ஜெ.மேரிதிரேசா - யாழ்ப்பாணம்.
- எம்.எல்.ஆதம் லெவ்வை, அக்கரைப்பற்று.
- ம.விஜேந்திரன் - ஊர்காவற்றுறை.

# ஒரு பெண்ணின் நாட்குறிப்பு பக்கங்கள்



**அன்பின் டயரி!**

ஒவ்வொரு பிரச்சினைய்யும் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் போதும் எனக்கு இருக்கிற பெரிய பிரச்சினை எதுவென்றால் அதை யாரிடம் சொல்வது என்பது தான். ஏனென்றால் நான் ஒரு பெண். என்னால் பொதுவெளியில் எதையும் பகிர்ந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளதால் ஊர் அடங்கிய பின் உன்னுள் என் அனைத்து குமுறல்களை கொட்டித் தீர்த்து விடுகின்றேன். அதனால் தான் காலையில் என்னால் இயல்பாக இருக்க முடிகின்றது. இன்று இரண்டு விடயங்கள் என் மனதிற்குள் நெருடிக் கொண்டுள்ளன.

ஒரு நீண்ட நாட்களின் பின் என் தோழியொருத்தியை சந்தித்தேன். அவள் பதின்ம வயதில் இருந்த துடிப்புக்கள் எல்லாம் உதிர்ந்து போய் வாடிய மலர் போல் இருந்தாள். காரணம் அவளுக்குத் திருமணம் ஆகியிருந்தது. என்னிடம் கூட அவளால் இயல்பாக கதைக்க முடிய வில்லை. அநேகமாக நீங்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி னாள். விடைபெறும் போதும் அவள் கூறிய வார்த்தைகள் இன்னும் நினைவில் உள்ளது. "நாங்கள் பிறந்ததில் இருந்து அப்பா அம்மா அண்ணா குடும்பம் எண்டும் வாழுஞ் கல்யாணம் கட்டின பிறகு புருஷன் பிள்ளையள் எண்டும் வாழ்ந்து முடிக்கிறம். கடைசி வரைக்கும் எங்களுக்காக வாழறதே இல்ல"

இரண்டாவது என்னிடம் பாடம் கற்க வரும் சில பெண்பிள்ளைகள் பற்றியது. அவர்கள் படிக்கும் இடங்களில் உடல் அளவிலும் மன அளவிலும் செக்ஸுவல் விடயங்களில் எப்பிடியெல்லாம் திணிக்கப் படுகின்றார்கள் என்பது பற்றிக் கதை கதையாகக் கூறுவார்கள். காலைச் சுரண்டும் ஆண்கள், கழுத்திற்கு கீழ் மட்டும் பார்த்துப் பேசும் ஆண்கள் என்று தினமும் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இலக்காகும் விடயங்கள் பல. அதை அவர்கள் பெற்றோரிடமும் கூற முடியாமல் நிர்வாகிகளிடமும் கூறவும் முடியாமல் என்னிடம் வந்து கொட்டு வார்கள். எச்சரிக்கையாக இருங்கள் என்றும் சுய விழிப்புணர்வுடன் இருங்கள் என்றும் மட்டும் அவர்களுக்கு கூறியனுப்புவேன்

எனக்குத் தெரியும் அது போதாது என்று. பெற்றோர் இந்த மாதிரி விடயங்களில் கவனம் எடுப்பது மிகக் குறைவு. பிரச்சினை நடந்த பிறகு தான் புலம்பிக் கொள்கின்றார்கள். வெள்ளம் வரும் முன்பே அணை கட்டுவது தானே முறை?

பெண் என்னும் ஜென்மத்தை எடுத்து விட்டு நாம் படுகின்ற பாடோ சொல்லி மாளாது. நமக்காகவே வாழாமல் நாம் சார்ந்தவர்களுக்காக வாழும் கட்டாயத்தில் இருக்கின்ற நமக்கு இந்தப் பாலியல் சுரண்டல்களில் இருந்து எப்போது வரும் விடிவு காலம் என்றபடியே என் ஒவ்வொரு இரவும் புலம்பல்களுடன் தொடர்கின்றன.

**"யாரோடு நோவேன் யார்க்கெடுத்துரைப்பேன்?"**

# மறக்கவேண்டுமா மயிலிட்டியை?

(03 ஆம் பக்க தொடர்ச்சி...)

நாலா திக்கிலுமிருந்து பெட்டிக் காரரும் மீன் வியாபாரிகளும் வருவார்கள்.

இது போக, துறையடியில் இருந்து ஐஸ் வாடிக்கு லோட் கணக்காக மீன் போகும். அவ்வளவு மீனும் பின்னேரத் தில் கொழும்புக்கு ஏறும். அது மீன் லொறிகளும் வெங்காய லொறிகளும் கொழும்புக்குச் சீறிக் கொண்டோடிய காலம். மீனை ஏற்றிக்கொண்டு ஆறு மணிக்கெல்லாம் என். எஸ். ஆரின்ரை லொறிகளும் கே.வி.ரியின்ரை லொறிகளும் ஓடும். போட்டி தான். மீன்பாடு கூடுதல் என்றால் வல்வெட்டித்துறை குமரகுருவின் லொறிகளும் வரும். கொழும்பு மீன் சந்தையில் மயிலிட்டி செல்வாக்குச் செலுத்திய காலம் அது.

## திறக்கப்படாத கதவுகள்

போரோடு எல்லாம் போனது. பலாலி விமான நிலையம் படைத்தளமாக மாறத் தொடங்க, பக்கத்திலிருந்த மயிலிட்டியும் கட்டுவனும் வறுத்தலைவிளானும் களப்பலியாகின. 1990 இல் மயிலிட்டியின் பாதைகள் முழுதாகவே மூடப்பட்டன. அன்று மூடப்பட்ட பாதைகள் இன்னும் திறக்கப்படவில்லை. சனங்கள் தட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். தேவன்கள் திறப்பதாயில்லை. சனங்கள் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். தேவன்கள் செவிமடுப்பதாக இல்லை.

காற்றிலே கரைந்து போகின்றன கோரிக்கைக் குரல்கள். கண்ணீரிலே கரைந்து கொண்டிருக்கிறது ஊர் விரும்பிகளின் வாழ்க்கை. மயிலிட்டியைப் பற்றி நினைத்தால் இப்ப இப்படித்தான் கண்ணீரும் துக்கமும்தான் வரும்.

மயிலிட்டிக்குப் போகும் வழியில் ஊறணியில் இருந்தது, காசநோய் ஆஸ்பத்திரி. ஒரு காலம் இந்த ஆஸ்பத்திரி மிகப் பிரபலம். அது நோயும் பிணியுமாக வாழ்க்கை மல்லாடிக் கொண்டிருந்த காலம். தொலை தூரங்களில் இருந்தெல்லாம் ஊறணி ஆஸ்பத்திரிக்கு வருவார்கள். காசநோய்க்குக் கடற்காற்று நல்லது என்பார்கள்.

## பெருநாள் காலங்கள்

அதற்கு அப்பால் மயிலிட்டியில் முருகன் கோயில் இருந்தது. அதற்குக் கிழக்கே, மாதா கோயில். மாதா கோயிலை, வேதக் கோயில் என்றும் சிலர் சொல்வதுண்டு. முருகன் கோயிலில் திருவிழா என்றால் இன்னொரு நாளில் மாதா கோயிலில் பெருநாள். ஊரும் உறவும் ஒன்றாகக் கூடிக் களித்திருந்த நாட்கள் அவை.

மயிலிட்டிக்குக் கிழக்கே பலாலி. அதற்குக் கீழே வளலாய். தெற்கில் மயிலிட்டிக் கிராமக்கோடு. அது செம்மண் நிலம். அதனோடிருக்கிற ஆட்கள் எல்லாம் தோட்டக்காரர்கள். சிறு விவசாயிகள். வெங்காயமும், புகையிலையும், மிளகாயும், மரவள்ளியும், குரக்கனும் விளையும் தோட்டங்கள். பச்சைப் பரப்பு. அப்பால் தொழிலாளிகள் வாழும் பகுதி. அநேகமாக விவசாயக் கூலிகள். இப்படி இருந்தாலும் ஊர் கூடிப் பாடிக் கிடந்தது. தொழிலும் வாழ்வும் நகர்ந்து கொண்டிருந்தன.

## மயிலிட்டி ஆளுமைகள்

இந்த மயிலிட்டியில் தான் அந்த நாளில் சி. புஸ்பராஜா என்றும் மயிலிட்டிப் புஸ்பராஜா எனவும் சொல்லப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையின் தலையாள் இருந்தார். பிறகு புஸ்பராஜா தமிழ் ஈழ இயக்கத் தில் இருந்தார். அதற்குப் பிறகு ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் இணைந்து செயற்பட்டார். புஸ்பராஜாவோடு அவருடைய சகோதரி சி. புஸ்ப ராணியும் இந்த அமைப்புகளில் எல்லாம் சேர்ந்து செயற்பட்டார். அன்று தமிழர் விடுதலைக்கூட் டணியில் புஸ்பராஜா அறியப்பட்ட ஒருவர். மாவை சேனாதிராஜாவின் நெருங்கிய தோழமை என்ற அளவில் ஒன்றாகக் கூடித் தேரிழுத்த கைகள். புஸ்பராஜாவும் புஸ்பராணியும் சிறைவரை சென்றனர். பின்னாளில் புலம்பெயர்ந்து பிரான்சுக்குப் போன புஸ்பராஜா ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற புத்தகத்தை எழுதினார். சி. புஸ்பராணி அகாலம் என்று தன்னுடைய சிறை வாழ்க்கை அடங்கலான வாழ்க்கைப் பதிவுகளை எழுதி வெளியிட்டார்.

## கே.பி யின் ஊரும் மயிலிட்டியே

மயிலிட்டியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சில காலம் தலைமறைவாக இருந்தார். வீரமாணிக்கன் தேவன் துறையில் அவர் தன்னுடைய தொடர்பு வழியாட்களைச் சந்தித்த காலம் அது. அங்கே அந்த நாட்களில் புலிகளுக்கு முக்கியமானவர்களாக இருந்தவர்கள் வீரவேங்கை சஞ்சீவியும் கே.பி என்ற குமரன் பத்மநாதனும். கே.பியின் ஊர் மயிலிட்டியே. சஞ்சீவி வீரமாணிக்கன் தேவன் துறையில் இருந்தார்.

மயிலிட்டிச் சனங்களுக்கு ஊறணி யில் 'யாழ்' என்றொரு சினிமாக் கொட்டகை இருந்தது. பின்னாளில் அது பெரிதாகக் கட்டப்பட்டு 'யாழ் தியேட்டர்' என்றாகியது. 1982 இல் அதில் தான் கடல் மீன்கள் என்ற கமலஹாசன், சுஜாதா நடித்த படம் பார்த்தேன். அது மீனவர்களின் வாழ்க்கையை வைத்து எடுத்த படம் என்பதால் ஹவுஸ்புல்லாக மாதக் கணக்கில் அந்தத் தியேட்டரில் ஓடியது. 'தாலாட்டுதே வானம்' என்ற இளையராஜாவின் பாடல் இன்னும் மனதில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

## விதியுமில்லை வீதியுமில்லை

காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியில் மயிலிட்டி கொடிகட்டிப் பறந்த காலத்தில் வட கடலோரம் நீளத்துக்கும் செழித்திருந்தது. இன்று பருத்தித்துறை - காங்கேசன்துறை வீதி வல்வெட்டித்துறையோடு நிற்கிறது. அதற்கப்பால் மயிலிட்டிக்கு போவது படையினர் மட்டும் தான். சனங்களுக்கு விதியில்லை. விதியில்லாச் சனங்க ளுக்கு வழியுமில்லை. இதில் கமரோ னின் கதையும் சரி மைத்திரியின் வாக்கும் சரி, பொய்யுரைகளாகவே போயின.

சபாபதிப்பிள்ளை முகாமில் ஐம்பதாவது ஆண்டை - பொன் விழாவைக் கொண்டாடுவதற்கு நல்லிணக்க முயற்சிகள் உதவினால் சரி.

# சுண்ணாம்புக்கல்
## செதுக்கல் தொட்டிகள்

யாழ்ப்பாணச் செதுக்கல் மரபில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பிடிப்பவை சுண்ணாம்புக் கல் செதுக்கல் தொட்டிகள். நீர் சேமிப்பதன் பொருட்டு செதுக்குவதற்கு கடினமான அதேவேளை நீரினை நன்கு தேக்கி வைக்கக் கூடிய மயோசின் சுண்ணக்கல்லை செதுக்கி தொட்டிகளை அமைத்து நீர் நிலைகளின் அருகில் மக்களுக்கும் விலங்குகளுக்கும் தாகம் தீர்த்தனர் எங்கள் முன்னோர்கள். இன்று இவ்வாறான தொட்டிகள் அருகிவருகின்றன.



# பறங்கி கோட்டை போனது போல



இலங்கைத்தீவில் 'பறங்கி கோட்டை போனது போல' என்று ஒரு வழக்கு நிலவி வருகின்றது. இது ஒரு வரலாற்றுச் சம்பவத்தை குறிக்கும் தொன்ம வழக்காகும். 1505 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடு காண் பயணிகளான போர்த்துக்கேயரது லொரன்ஸ் சோடி அல்மெய்டா என்ற கப்பல் படைத்தளபதி புயல் காற்றில் சிக்குண்டு இலங்கையின் தென் துறைமுகமான காலிக் கடற்கரையில் வந்து நங்கூரமிட்டான். அப்போது இலங்கை இராசதானியின் தென் பகுதியை 8 ஆவது வீர பராக்கிரமபாகு என்ற மன்னன் ஆட்சி செய்து கொண் டிருந்தான். அவனுடைய இராஜ்ஜியம் கோட்டை என்று அழைக்கப்பட்டது.

லோரன்ஷோ டி அல்மெய்டாவை கோட்டை மன்னனின் வீரர்கள் கண்ணுற்றனர். அந்த சந்திப்பை இலங்கையில் கேலியாக இவ்வாறு குறிப்பிடுவர். வீரர்கள் மன்னனிடம் வந்து அந்த வெள்ளையர்கள் கல்லைக் கடித்து, இரத்தத்தை அருந்துபவர்களாக இருக்கின்றனர் என்று கூறினர். அவர்கள் பாணையும், வைனையும் தான் அவ்வாறு குறிப்பிட்டனர். அத்துடன் அவர்கள் வியாபரத்தின் பொருட்டு மன்னரை நட்புறவாக சந்திக்க விரும்புவதாகவும் அறிவித்தனர்.

மன்னர் உடனடியாக தன் இராஜ தந்திரத்தை கைக்கொண்டார். காலியில் இருந்து கோட்டையை சில மணிநேர பயணத்தில் அடைந்துவிடலாம். ஆனால் பறங்கியர் அந்த சுலப வழியை அறிந்து கொண்டால். இலகுவாக கோட்டைக்கு தீங்கிழைக்கலாம் என்று மன்னர் கருதினார். எனவே அவர்களை சுற்றுப்பாதை யூடாக அழைத்து வந்து, கோட்டை வெகு தொலைவில் காடு மலைகளுக்கு அப்பால் பாதுகாப்பாக இருக்கின்றது என்ற மாயையை அவர்களுக்கு உண்டுபண்ண வேண்டும் என்று மன்னர் திட்டமிட்டார். எனவே அவர்களை மலையகத்தைச் சுற்றி பல நாள் பயணத்தின் பின் தன்னிடம் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். பறங்கியரின் இந்தப் பயணத்தைத்தான் இலங்கை மக்கள் 'பறங்கி கோட்டை போனது போல' என்று அழைத்தனர்.

## மரபுரிமைப்போட்டி - 06

**யமுனா ஏரி அமைந்துள்ள இடம் எது?**

சரியான விடை எழுதி அனுப்புபவர்களில் ஒருவருக்கு குலுக்கல் முறையில் ரூபா. 1000 பரிசாக வழங்கப்படும். முடிவுத் திகதி 03.08.2016

**அனுப்பவேண்டிய முகவரி:** புதுவிதி, 107, இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## மரபுரிமைப்போட்டி - 04 முடிவு

சரியானவிடை - யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள நாவலர் வீதியில்.

வெற்றிபெற்றவர்: ஞா.செந்தமிழ்ச் செல்வன் குப்பிளான் தெற்கு, குப்பிளான்.

# மாயக்கை



பண்டித வித்துவான் ஆறுமுகம் சின்னத்தம்பி எழுதிய "ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு" நூலில் மாயக்கை பற்றி எழுதப்பட்டுள்ள குறிப்பு ஒன்று...

"வடக்கே தற்போது அல்வாய் என அழைக்கப்படும் இடத்தில்" 'மாயக்கை' என அழைக்கப்படும் ஓர் குறிப்பிட்ட இடம் உண்டு. மா - யக்கா - மாயக்கா. அது காலத்தில் மாயக்கை என வழங்கலாயிற்று. இவ்விடத்துக்கும் தம்பான் என்ற இடத்துக்கும் 4 கல் தொலைவு இருக்கும். மகாயக்கா என்பான் ஒருவன் அப்பகுதியில் ஓர் சிற்றரசனாய் இருந்திருக்கலாம். அங்கே மகாயக்கா வாழ்ந்தமைக்குப் பல அறிகுறிகள் இன்றும் உள. வெள்ளம் தேங்கி நிற்கும் ஒரு பாரிய அகழி. அது கடலைச் சென்றடைகிறது. அது தற்பொழுது தூர்ந்த நிலையில் தரிசாய்க் கிடக்கின்றது. மாரியில் வெள்ளம் தேங்கி நிற்கும். அவ்வகழியின் தென் அந்தம் பாரிய மலைப் பாறைகள் உள்ளே மேடையும் அம்மேட்டுப் பகுதியின் கீழ் ஒரு குகை வழியும் சிதைவுற்ற நிலையில் காணக்கிடக்கின்றன. இக் குகைவழி கீரி மலையைச் சென்றடைவதாகப் பேசிக்கொள்கிறார்கள்.

அம் மேட்டுப் பகுதியில் பல காவல் தெய்வங்களின் இருக்கைகள் பல இன்றும் காணக் கிடக்கின்றன. அவற்றிற்கு இன்றும் தீபமேற்றி தூபமிட்டு வணங்கும் வழக்கம் இருந்து வருகிறது. இனி அந்த அகழியின் ஓரமாக கிழக்குப் பாகமாக ஆச்சரியப்படத்தக்க கிணறு ஒன்று இருக்கிறது. அதன் மேற்பகுதி தற்காலம் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. எவ்வளவு நீர் வெளியே இருந்து உட்சென்றாலும் நீர்மட்டம் அணுவளவேனும் வேறுபடாது. இறைத்தாலும் அப்படியே. இத்தகைய பழமையை உணர்த்தும் இயல்புகள் பல அம் மாயக்கை என்னும் இடத்தில் இன்றும் காணலாம். அகழியின் ஓரத்தில் ஒரு விநாயகர் ஆலயமும் உள்ளது. அது மாயக்கைப் பிள்ளையார் கோயில் என்றே வழங்கப்பட்டு வருகிறது. இம் மாயக்கை என்னும் இடம் சிங்கை நகருக்கு மிக அண்மையில் உள்ளது.

இவ்வாறு எழுத்து குறிப்புகள் மட்டுமன்றி பேராசிரியர் கிருஸ்ணராஜா உள்ளிட்ட தொல்லியலாளர்கள் இதனை அகழ்வு ஆய்வு செய்து கற்காலத்தை சேர்ந்த ஆதாரங்கள் பலதைக் கண்டுபிடித்துள்ளனர். எங்களுடைய வரலாற்றை உறுதிப்படுத்தும் மாயக்கையைப் பற்றி உலகறியச் செய்தலும் பாதுகாத்தலும் அவசியமாகும்.

ஈழத்து வடபுலத்தவர்களை வந்தேறு குடிகள் என்று சில மிதவாதிகளும் இன வாதிகளும் சொல்லிக் கொண்டிருக்க, சத்தமில்லாமல் மாயக்கை குகைக்குள் உறங்கிக் கொண்டிருக்கின்றது கற்காலம் வரை நீண்டு செல்லும் எங்களுடைய வரலாறு.

மாயக்கை, வடக்கில் கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் எடுக்கப் பட்ட குகைத் தொகுதியாகும். பேரினவாதம் தலை தூக்கியாடும் கல்வி முறையாலும் வரலாற்று எழுத்தாலும் புறக்கணிக்கப்பட்டு எம்மாலும் கவனிப்பாரற்று ஒரு சிறிய கிராமத்தில் மேலதிக ஆய்வுகளோ பாதுகாப்பு முயற்சிகளோ இன்றி மண் தூர்ந்து பற்றை மண்டிக் கிடக்கின்றது மாயக்கை குகை.

# மோர்... 'ஒன்ஸ்மோர்'



**கே.** கே.எஸ் வீதி தட்டார் தெருச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கிறது ஐயனார் தெரு. சந்தியிலிருந்து 100 மீற்றர் தொலைவிலுள்ள சிவப்பிரகாசம் வீதி வளைவிலுள்ள பிள்ளையார் கோயில் அரச மரத்தின் கீழே கூட்டமாகச் சனங்கள். ஏதும் அசம்பாவிதமோ என்று எட்டிப் பார்த்தோம். எல்லோரும் கைகளில் வெள்ளி ரம்ளர்களில் நிரப்பப்பட்ட மோரை ஒரே மூச்சில் குடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் 'ஒன்ஸ்மோர்' கேட்டு அடுத்த ரவுண்டுக்கு அடிகோலிக் கொண்டிருந்தனர். வெயில் ஏற ஏற கூட்டமும் கூடிக் கொண்டே போனது. கேட்டவர் எல்லோருக்கும் முகம் சுளிக்காமல் உடனுக்குடன் ஊறுகாயின் சுவையோடு, பச்சை மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை கலந்த மோரை விநியோகித்துக் கொண்டிருந்தார் சந்திரசேகரம் ஸ்ரீகாந்த். அவர்தான் அந்த மோர்க்கடையின் முதலாளி, தொழிலாளி எல்லாமே.

'மோர்' என்றால் ஆங்கிலத்தில் 'அதிகம்' என்று அர்த்தம். பருகும் தோறும், இன்னும் பருகலாம் என்ற உள்ளுணர்வைத் தருவது மோர். தாகத்தைத் தீர்க்கக் கூடியதும், பசியைப் போக்கக் கூடியதுமான ஆற்றல் பசுப்பாலின் உபதயாரிப்பான மோருக்கு உண்டு. சித்த வைத்தியத்தில் மோருக்கு சிறப்பிடம் உண்டு.

அத்தனை மோர்ப் பிரியர்களின் அலை மோதலுக்கிடையில் 'சுளித்துவிட்டு' அவரை, 'புதிவிதி' க்காக சந்தித்தோம்..

நேர்காணல் -
கணபதி சர்வானந்தா



**கேள்வி:** எல்லாருக்கும் பெரிய பெரிய தொழில் செய்யத்தான் ஆசை வரும். அப்படியிருக்க இந்தக் கால இளைஞரான நீங்கள் எப்படி மோர் விற்பனைத் தொழிலுக்குள் வந்தீர்கள்?

**ஸ்ரீகாந்த்:** உண்மையில் இப்பிடி வந்தது ஒரு அக்சிடண்டால ஏற்பட்ட அக்சிடெண்ட் தான்.

எங்கடை பரம்பரைத் தொழில் நகைத்தொழில். இது நடுவிலை தொடங்கியது. கொஞ்ச வருசத்துக்கு முதல் நான் ஒரு அக்சிடெண்டில சிக்கிட்டன். அதாலை குந்தியிருந்து தொழில் செய்யேலாமைப் போக, இந்த இடத்திலையே ஒரு மரக்கறிக் கடையை நடத்தினன். அப்ப மரக்கறியோடை சேத்து தயிர் முடிச்சுகளும் வித்தனான்.

ஒரு நாள் 3 முடிச்சு தயிர் மிஞ்சிப்போட்டுது. அதை மோராக்கி வித்துப் பார்க்கலா மெண்டு கொண்டு வந்தன். முதல் நாள் நிறைய மோர் மிஞ்சிப்போயிட்டுது. ஆனா பிறகு மரக்கறியை விட மோர் தான் நல்ல வியாபாரம். அதுக்கு பிறகு மரக்கறி வியாபாரத்தை விட்டிட்டு, மோரிலயே முழுசா இறங்கிட்டன்.

இப்ப நிறையப் பேர் என்னட்ட மோர் வாங்க தூர இடத்தில இருந்தெல்லாம் வருகினம். கூலி வேலை செய்யிற ஆக்களில இருந்து, டொக்டர், பாங்கர்ஸ் எல்லாம் தேடி வந்து குடிச்சிட்டு போகினம். சிலர் போத்தில், சொப்பிங் பையிலயும் வாங்கிக் கொண்டு போறவை.

**கேள்வி:** எல்லாரும் தேடி வந்து வாங்கிற அளவுக்கு உங்கட மோரில ஏதும் மாயம், மந்திரம் இருக்கோ?

**ஸ்ரீகாந்த்:** அந்தக் காலத்திலை, மோர் எண்டால், வயித்தைக் கலக்குமெண்டு ஆக்களுக்குப் பயம் அதிகம். அந்தப் பயத்தை இல்லாமல் செய்ய இயற்கையாக எந்தவித கெமிக்கலையும் சேர்க்காமல் ஒரு பக்குவத்தை கையாளுகிறன். சுவையோட உடம்புக்கும் ஒத்துக் கொள்ளுற தன்மை. அதால எல்லாருக்கும் பிடிச்சுப் போட்டுது. இது என்ரை கைப் பக்குவம் .அதுதான் என்ரை வியாபார ரகசியம்,மாயம், மந்திரம் எல்லாம்.

**கேள்வி:** இந்தக் கைப்பக்குவம் எப்பிடி வந்திச்சு? எங்கையாவது பழகினீங்களோ?

**ஸ்ரீகாந்த்:** அப்பிடியெல்லாம் இல்லை. முந்தி வீட்டுத் தேவைக்காக அம்மா மோர் செய்யிறவா. அவவுக்கு மோர் கடையிறதுக்கு நான்தான் உதவி செய்வேன். அப்பதான் மோருக்கு என்னத்தைப் போடுறது? எப்படிச் செய்யிறதெண்டு சொல்லித் தந்தவ. அம்மா தான் எனக்கு குரு. அம்மா சொல்லித் தந்த கைப்பக்குவம் தான் இப்ப எனக்கு சோறு போடுது.

**கேள்வி:** எவ்வளவு காலமாய் இந்த இடத்தில உங்கட மோர் வியாபாரம்?

**ஸ்ரீகாந்த்:** கிட்டத் தட்ட நாலு வருசமா செய்யிறன். தொடக்கத்திலை பத்து ரூபாக்கு வித்தன். பிறகு பால் விலை ஏற ஏற, 15 ரூபா ஆக்கி, இப்ப 20 ரூபாக்கு ஒரு கப் மோர் விக்கிறன். பத்து மணிக்கெல்லாம் வியாபாரத்தைத் தொடங்கிவிடுவன். ஆனாலும் விடிய ஐந்து மணிக்கே எழும்பி, ஆயத்தங்களை செய்தால் தான் இங்கை பத்து மணிக்கு வரக்கூடியதாக இருக்கும்.

பக்குவமாகச் செய்ய வேண்டிய தொழில் இது. இந்தத் தொழிலிலை என்ரை மனைவி தான் ஒத்தாசை. தயாரிப்பிலை அவவின்ரை உழைப்புத் தான் அதிகம்.

**கேள்வி:** அப்போ சிக்கல் இல்லாத தொழில். சிறப்பான வருமானம். அப்படித்தானே?

**ஸ்ரீகாந்த்:** சிக்கல் இல்லாமல் எந்தத் தொழில் இருக்கு? நிறையச் சிக்கல் வரும்.

பால் இப்ப முந்தின மாதிரி இல்லை. முந்தியெல்லாம் மாடுகளுக்குப் புல்லைப் போட்டினம். வைக்கலைப் போட்டினம். தவிடு, புண்ணாக்கு வைச்சினம். அதால பாலும் தரமா இருந்திச்சு. இப்ப சாக்கிலை வாற தீவனத்தோடை செயற்கையா கெமிக்கலும் சேர்த்து வைக்கினம். அதால பாலும் ஒரேமாதிரியா இல்லை. அதாலை மீற்றர் வைச்சுப் பாத்துத்தான் பாலை எடுக்கிறம். தரமில்லாட்டி திருப்பி விட்டிடுவம். விரத காலத்திலைதான் பால் தட்டுப்பாடு கூட. அப்பிடியான நாளில சிக்கல்தான்.

அதை விட இப்ப பாலை பிறைவேட் கொம்பனிகள் வாங்கிக் கொண்டு போறதாலையும் பால் தட்டுப்பாடு வரும். அப்ப மோர் எடுக்க கஷ்டம். மற்றும்படி எப்பவும் நல்ல பிஸ்னஸ் தான்.

எனக்கிருக்கிற முக்கிய பிரச்சினை வியாபார உரிமத்தைப் பதிவு செய்யிறது. ஆனால் பதிவு செய்ய முடியாமல் இருக்கிறன். எனது பூர்வீகம் கன்னாதிட்டி. இங்கை வாடகைக்குத் தான் இருக்கிறம். அந்த விலாசத்திலை இருக்கிறன் எண்டதுக்குக் குறைஞ்சது ரண்டு வருச அத்தாட்சி தேவை. அதை வீட்டுக்காரர் தரமாட்டினமாம்.

'பி.எச்.ஐ' (சுகாதாரப் பரிசோதகர்) வந்து, என்ர மோர்க்கடையை செக் பண்ணி பாத்திட்டு, "சீனி கலக்காத உணவு எண்டதால சிக்கல் இல்லை. ஆனா நாங்கள் செக் பண்ணி, சிபார்சு பண்ற கிணத்தில தான் மோருக்கு கலக்க தண்ணி எடுக்க வேணும்" எண்டு சொன்னவை. நானும் அவை சொன்ன கிணத்தில தான் தண்ணி எடுத்து கலக்கிறனான். அதோட எப்பவும் பாத்திரம், கப் எல்லாத்தையும் உடனுக்குடன் கழுவி சுத்தமாத்தான் வைச்சிருப்பன். இந்த சுத்தமும் நிறையப் பேர் என்ர மோர்க்கடைக்கு வாறதுக்கு முக்கிய காரணம்.

**கேள்வி:** இந்த மோர்க்கடையை பெரிசாக்கி இன்னும் கூட உழைக்கிற திட்டமில்லையோ?

**ஸ்ரீகாந்த்:** திட்டமிருக்குத்தான். ஆனால் பெரிய முதல் வேணுமே. நான் சமுர்த்தி திட்டத்திலை இருக்கிறதாலை எனக்கு கடன் தந்திருக்கினம். அந்தக் கடனில பாலைப் பாதுகாத்து வைக்க 'டீப் பிரிட்ச்' ஒன்று வாங்கியிருக்கிறன். கண்ணாடியும், மரமும் கொண்டு விக்கிற இடத்தை 'பேர்மனண்டா' செய்து போட இருக்கிறன்.

அனுபவத்தொடர்



# பனித்தேச வடலி

06

கபிலன்

> **தமிழ் சமூகத்திற்குள் எப்பொழுதும் ஒரு போட்டி இருந்து கொண்டேயிக்கும். இது குடும்பங்களிற் கிடையிலான போட்டி. இந்த போட்டியில் தான் குடும்ப கௌரவமே தங்கியுள்ளது. இந்த கௌரவப் போட்டிகளில் பலியாகுவது பிள்ளைகளே.**

புலம்பெயர் வாழ்வில் தாங்கள் பட்ட கஸ்ரங்களிற்கெல்லாம் பிள்ளைகள் படித்து நல்ல வேலைக்குச் சென்றால் போதும் என்பதே அவர்களின் குறிக்கோள். நல்ல வேலை என்பது தமிழ் சமூகத்தில் இன்றுவரை டாக்டர், இஞ்சினிய ராகவே உள்ளது. சற்று படிப்பில் குறைந்த பிள்ளையென்றால் ஏதாவது ஒரு அலுவலக வேலை. இவை நிறைவேறும் பட்சத்தில் தாங்கள் பிள்ளைகளை நன்றாக வளர்த்து விட்டதாக உறவினர்களிற்கு மத்தியில் பெருமைபட்டுக் கொள்ளலாம் என்கின்ற சுயநலம்.

பெண்பிள்ளை என்றால் படிப்புடன் சேர்ந்து பரதநாட்டியமும் ஒரு குறிக்கோளாகின்றது. இந்தக் குறிக்கோளை நோக்கி நகராத பிள்ளைகளிற்கு பெற்றோரிடமிருந்து கிடைப்பது அவமானமும் அடியும்தான்.

உறவினர்களிற்கிடையில் நடைபெறும் இந்த நிழல்யுத்தத்தில் பாதிக்கப்பட்டு மன அழுத்தினால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இவையனைத் தையும் உடைத்துக் கொண்டு வெளியில் வந்த பிள்ளைகளையும் நான் பார்த்திருக்கின்றேன்.

தமிழ் சமூகத்திற்குள் எப்பொழுதும் ஒரு போட்டி இருந்து கொண்டேயிக்கும். இது குடும்பங் களிற் கிடையிலான போட்டி. இந்தப் போட்டியில் தான் குடும்ப கௌரவமே தங்கியுள்ளது. இந்தக் கௌரவப் போட்டிகளில் பலியாகுவது பிள்ளைகளே. ஒரு முறை கௌரவத் தில் தோற்றுப்போன குடும்பம் ஆட்டத் திலிருந்து விலக்கப்படுகின்றது. அந்த குடும்பம் தோற்றுப் போனதாகவே ஆட்டத்திலுள்ளவர்களால் தள்ளி வைக்கப்படுகின்றது.

> **“ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். உங்களின் பிள்ளைகளிடம் நீங்கள் பொறுப்பான வேலைகள் என்று இது வரை எதை ஒப்படைத்தீர்கள்?”**

இந்தப் போட்டி எப்பொழுதுமே தமிழ் சமூகத்திற்குள் தமிழர்களுடன் மட்டுமே நடைபெறுகின்றது. இந்தப் போட்டியில் பிள்ளைகளே களமிறக்கப்படுவதால் அவர்களின் உணர்வுகள் பின் தள்ளப்படுகின்றன. பதின்ம வயதை எட்டியதும் பிள்ளைகளிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பும் போது அது குடும்பப் பிரச்சி னையாக வெடிக்கின்றது. இப்படி வெளியேறும் பிள்ளைகள் தமிழ் சமூகத்தைவிட்டு தூரம் செல்கின்றனர்.

பேசித் தீர்த்த பிள்ளைகள் பெற்றோர் பிரச்சினையென்பது அரிது. பல சந்தர்ப்பங்களில் பெண்தான் அடங்கிப் போகின்றாள். இதைப் பார்த்து வளரும் பிள்ளைகள் என்ன மாதிரியான மனநிலை உடையவர்களாக இருப்பார்கள்? இந்த சம்பிரதாயத்தை அவர்கள் தொடர்ந்து தூக்கிச் செல்வார்கள். இதை பார்த்து வளர்ந்த நானும் இந்த ஆணாதிக்க மனோ பாவத்திற்குள் தள்ளப்பட்டேன். இந்த ஆணாதிக்க மனோ பாவத்திலிருந்து நான் எனது 30 ஆவது வயதில் ஓரளவு விடுபட்டேன்.

நான் தமிழ்ப் பாடசாலையில் படித்த காலங்களில் அங்கே அனைத்துப் போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டிருக்கின்றேன். எப்பொழுதும் பெற்றோர்களிற்கிடையில் ஒரு போட்டி நிலவிக் கொண்டேயிருக்கும். போட்டி யில் பங்குபற்றிய எனக்கும் எனது நண்பர்களிற்குமிடையில் எந்தத் தாழ்வு மனப்பான்மையும் இருந்ததில்லை. தோற்றாலும் அதனை நாங்கள் பெரிது படுத்திக் கொண்ட தில்லை.

இந்தப் போட்டியில் நான் தொலைத்தது என்னவோ இந் நாட்டு கல்வியை. எனது பெற்றோர்களை தமிழ்ப் பாடசாலை போட்டிகளில் திருப்திப்படுத்துவதன் மூலம் அவர்களிடமிருந்து எனக்கு வரவிருக்கின்ற பிரச்சனைகளை நான் தவிர்க்க முடிந்தது.

இந் நாட்டுக் கல்வியை அவர்கள் எனக்கு கற்றுத் தருவதற்கான நடைமுறைச் சிக்கலும் எனது பெற்றோரிற்கு மட்டுமல்ல அனைத்து பெற்றோரிற்கும் இருந்தது. அந்தக் காலத்திலிருந்து இந் நாட்டு கல்வியில் நான் அக்கறை கொள்ளாமல் போனதற்கு இதுவும் ஒரு காரணம். பெற்றோர் எங்களை பொறுப்பான பிள்ளைகளாக வளர்க்க விரும்பினார்கள். அதற்கு அவர்கள் தங்களிடம் இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எங்களிற்கான பல முடிவுகளைத் தாங்களே எடுத்துக் கொண்டார்கள். அது தான் எங்களின் எதிர்காலத்திற்குச் சிறந்தது என்றும் நினைத்துக் கொண்டார்கள்.

ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். உங்களின் பிள்ளைகளிடம் நீங்கள் பொறுப்பான வேலைகள் என்று இதுவரை எதை ஒப்படைத்தீர்கள்? மாறாக பெற்றோர்களாகிய உங்களின் பொறுப்புக்களை அவர்களின் தலையில் கட்டிவிட்டு அதனை அவர்களின் பொறுப்பு என்று எண்ணிக் கொண்டிருந்தீர்கள். இந்த வகையான பொறுப்புக்கள் கூட பொருளாதாரம் சம்மந்தப்பட்ட தாகவே இருக்கின்றது.

எனது நண்பர்கள் வட்டாரத்திலும் சரி எனக்கும் சரி நாங்கள் வேலை செய்யத் தொடங்கிய குறுகிய காலத் திற்கு பின்னர் எங்களின் பெயர்க ளில் வருகின்ற பில்களை நாங்களே கட்ட வேண்டும். பெற்றோர்களைப் பொறுத்தவரை இதுதான் பொறுப் பான ஆண் பிள்ளைக்கு அழகு. ஆனால் இந்த வகையான பொறுப் புக்கள் எங்களை இன்னும் பண நெருக்கடிக்குள் தள்ளியதே தவிர வேறொன்றையும் சாதித்து விட வில்லை.

பணத்தை கையாளத் தெரிந்தால் அது பொறுப்பான பிள்ளையாகி விடுமா? நாங்கள் யாரும் அவர்களிடம் பணம் கேட்ட தில்லை. எங்களிற்கு வருகின்ற சிறிய சம்பளத் தொகையை எங்களின் அன்றாட செலவுகளிற்கும் சாப்பாட்டிற்கும் பயன்படுத்திக் கொண்டோம். அவர் எப்பொழுதும் பணத்திற்காக கஸ்ரப்படுகின்றார்கள் என்ற உணர்வையே அவர்களின் நடைமுறைகள் எங்களிற்கு தந்தது.

இதற்கு எதிர்மாறான பெற்றோரும் இருந்தார்கள். கூடுதலாக இது பெண் பிள்ளைகளிடம் கடைப்பிடிக் கப்பட் டது. பெண் பிள்ளைகளின் சம்பளத்தை அப்படியே வங்கியில் போட்டுவிட்டு செலவிற்கு தங்களின் பணத்தை பெற்றோர் கொடுத்தார்கள்.

இந்த இரண்டு வழி முறைகளுமே பிள்ளைகளை பொறுப்புள்ளவர்களாக மாற்றாது. “நான் பெற்றோருக்கு பாரமாக இருக்கின்றேன்” என்ற எண்ணத்தை ஓர் இடத்திலும் “நான் பெற்றோர்களின் செல்லப் பிள்ளை. எனவே எனக்கு எது கேட்டாலும் கிடைக்கும்” என்ற எண்ணத்தை இன்னோர் இடத்திலும் கொடுக்கின்றது.

இதற்கொரு முன் மாதிரியான தீர்வை எழுதி விடமுடியாது. ஒவ்வொரு குழந்தைக்கும் வேறு மாதிரியான குணாதிசயங்கள் உண்டு. அதற்கேற்றாற் போல் எந்த இடத்தில் எதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் தீர்மானிக்க வேண்டும்.

**(இன்னும் வளரும்)**

## தாக்கம்...

*கிறுக்கிய பல கவிதை ...*
*கிழித்தே போட்டேன் நான்*
*காரணம் எதுவென்று*
*கேட்டால் சிரிப்பார்கள்*

*எழுதிய பின்னர்*
*வாசித்துப் பார்த்தேன்*
*எங்கோ படித்ததாய்.......*
*உள் மனம் சொல்லும்*

*களவாடி போட்டனோ?*
*மனச்சாட்சி கேட்கும்*
*பிறகென்ன செய்ய....*
*கிழித்தே போட்டேன்*

*கேட்டது கதைச்சது....*
*பாத்தது எல்லாம்*
*ஒன்றாய்ச் சேர்ந்து*
*தாக்குதோ மனதை?*

*ஆரோ ஆரோ*
*எழுதிய தெல்லாம்*
*எனக்குள் புகுந்து*
*தாக்கம் புரியுதே!*

*இதனால் தான்*
*கிறுக்கிய பல கவிதை*
*கிழித்தே போட்டேன் நான்...*

**றோய் மதிவதனன் (ஜேர்மனி)**

# அறிந்தும் அறியாமலும்





விளையாட்டு

தொகுப்பு: சி. விமலன்

## வரலாறு முக்கியம்!

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகம்மட் அமீரின் மீள்வருகை குறித்து "துணைக்கண்ட வீரர்கள் (இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஸ்) மிகவும் வறுமையான கிராமங்களில் இருந்து வருகிறார்கள். தங்களுடைய குடும்பத்திற்குச் சிறப்பான வாழ்க்கை கொடுக்க வேண்டும் என்பதால் ஏதாவது செய்வார்கள். அவர்கள் சர்வதேச அளவில் விளையாட வாய்ப்புக் கிடைக்கும் போது அதிகளவில் பணம் சம்பாதிக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு ஆசையும் தூண்டப்படுகின்றது. ஆனால் ஒரு நோபோல் வீசி அதற்கு 50 ஆயிரம் பவுண்டுகள் என அதிக பணம் சம்பாதிப்பது பேராசை" என்று கூறியுள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்ஸன்.

எந்தவொரு விளையாட்டிலும் சூதாட்டம் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது விளையாட்டின் புனிதத்துக்கு களங்கத்தை ஏற்படுத்துவதோடு ரசிகர்கள் விளையாட்டு மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் துரோகமிழைக்கின்றது. அந்தவகையில் முகமட் அமீர் 2010 ஆம் ஆண்டு சூதாட்டப்புகாரில் சிக்கி 6 மாத தண்டனையும் 5 வருட போட்டித் தடையையும் பெற்றிருந்தார். தற்போது அவர் பதின்ம வயதுகளில் தான் செய்த குற்றத்துக் காக மானசீகமாக மன்னிப்புக் கோரிய பிற்பாடும் அவர் மீது மீண்டும் மீண்டும் சூதாட்டம் தொடர்பில் விமர்சிப்பது எத்தகைய சமூக உளவியலைப் பிரதிபலிக்கின்றது?

பீற்றர்ஸனின் கருத்துப்படி துணைக்கண்ட வீரர்கள் மட்டும் தான் சூதாட்டத்தில் ஈடுபடுவது போன்றும் ஏனைய நாட்டு வீரர்கள் அப்பழுக்கற்றவர்கள் என்ற மாதிரியுமான தொனியும் தெரிகிறது. 1993 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வருகை தந்த இங்கிலாந்து அணியில் இடம்பெற்ற விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் ஸ்ருவார்ட் போட்டியின் காலநிலை குறித்தும் ஆடுகளம் குறித்தும் சூதாட்டத் தரகரான முகேஸ் குப்தா என்பவரிடம் தகவல் தெரிவித்து 5000 ஸ்ரேலிங் பவுண்டுகள் பெற்றுக் கொண்டமையை ஒப்புக்கொண்டுள்ளார்.

அதேபோல அவுஸ்ரேலிய வீரர் மாக்வோ, நியூசிலாந்து வீரர்களான மார்டின் குரோ, கிறிஸ் கெயின்ஸ், தென்னாபிரிக்காவின் ஹன்ஸி குரென்ஜே, கிப்ஸ், நிக்கி போஜே மற்றும் மேற்கிந்தியத் தீவுகளின் மார்லன் சாமுவேல்ஸ் போன்றவர்கள் மீதும் கடந்த காலங்களில் சூதாட்டப்புகார்கள் சுமத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளதுடன் இவற்றில் சிலர் தண்டனையும் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் பீற்றர்ஸன் இதுவரை அறியாமல் உள்ளார் போலும்.



கிரிக்கெட் போட்டிகளில் பயன்படுத்தப்படும் துடுப்புக்களின் அளவை மட்டுப்படுத்துவதற்கான விதிகளில் மாற்றம் கொண்டுவர மெர்ல்பேன் கிரிக்கெட் கழகம் (எம்.சி.சி) பரிந்துரைகளை முன் வைத்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பேச்சு அடிபட்டபோதே கிறிஸ்கெயில் "எனது உயரத்துக்கு எடை கூடிய துடுப்பையே பாவிக்க வேண்டியுள்ளதனால் அதனை ஏற்க முடியாது" என்றார். அவரது கூற்றில் உண்மை இருந்தாலும் கிரிக்கெட்டில் துடுப்பின் எடையைத் தீர்மானிக்கும் முக்கியகாரணியாக வீரரின் உயரம் இருக்கும் என்று தோன்றவில்லை. சச்சின் விளையாடும் வரைக்கும் சர்வதேச கிரிக்கெட்டில் எடை கூடிய துடுப்பை அவர் தான் பாவித்து வந்திருந்தார். பிற்பட கையில் ஏற்பட்ட டெனிஸ் - எல்போ காயத்தினாலேயே துடுப்பின் எடையைச் சற்றுக் குறைத்துக்கொண்டார்.

கிரிக்கெட் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து இற்றைவரைக்கும் துடுப்பின் தடிப்பும் எடையும் அதிகரித்து வந்துள்ளது, வாஸ்தவமானாலும் "துடுப்பாட்டம் பந்துவீச்சை அதிகளவில் ஆதிக்கம் செலுத்துவதனால் துடுப்பின் தடிப்பு மற்றும் எடை குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும்" என்று எம்.சி.சி தற்போது கூறியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் இருபதுக் கிருபது போட்டிகளின் வருகைக்குப் பிறகு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளின் போக்குகளும் மாறியுள்ள நிலைக்கு எம்.சி.சி கூறுவதைப் போன்று துடுப்பின் தடிப்பு மற்றும் எடை காரணமா? அல்லது போட்டிகளை விறுவிறுப்பாக்குவதற்காக பந்து வீச்சாளர்களைப் பலிக்கடா ஆக்கி துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக அமுல் படுத்தப்பட்ட புதிய விதிகள் காரணமா?




ஆசிய நாடுகளில் கிரிக்கெட் மோகம் தலைவிரித்தாடுகின்ற நிலையில் இந்திய உதைபந்தாட்டச் சங்கம் உதைபந்தாட்டத்தைப் பரந்த அளவில் கொண்டு செல்வதற்கும் வீரர்களின் வளர்ச்சி கருதியும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) உதைபந்தாட்டப் போட்டிகளில் வணிக நோக்கம் முதன்மை பெற்றிருந்தாலும் ஜீஜே, சுனில் ஷெட்டி போன்ற சில திறமை வாய்ந்த இந்திய வீரர்களை அடையாளம் காண்பதற்கும் வழிவகுத்துள்ளது.

அதேபோல சென்ற வருடம் பதினேழு வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டத்தொடரின் இறுதிப்போட்டிக்கு பிறேசிலின் முன்னாள் வீரர் பீலேயை கொல்கத்தாவுக்கு சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தமையையும் மேற்படி பின்னணியில் நோக்கலாம்.

இந்த நிலையில் ஒரு அணியில் 5 வீரர்கள் மாத்திரம் விளையாடும் "புட்சல் கால்பந்து லீக்" சென்னையில் முதன்முதலாக தற்போது நடைபெற்று வருகின்றது. ஐ.எஸ்.எல்லின் வணிக வெற்றியே புட்சல் லீக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான முகாந்திரமாக அமைந்துள்ளது என்பது வெளிப்படை. அதிலும் பிறேசிலின் முன்னாள் வீரர் றொனால்டினோ, ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் வீரர் கிறெஸ்போ போன்ற நட்சத்திரங்களின் வருகை ரசிகர்களுக்கு உற்சாகத்தைத் தந்தாலும் இந்த லீக் தொடருக்கு சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தினதோ, இந்திய உதைபந்தாட்டச் சங்கத்தினதோ அங்கீகாரம் கிடைக்காத நிலைமை இதன் எதிர்காலத்தைக் கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

அதேவேளை அணிக்குப் பதினொருபேர் விளையாடுகின்ற ஐ.எஸ்.எல் தொடரிலேயே இந்தியவீரர்களுக்குப் போதியளவு சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமை பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில் 5 பேர்களை மட்டும் கொண்ட இந்த "புட்சல் லீக்" தொடரின் மூலம் ரசிகர்களிடம் ஆர்வத்தைத் தூண்ட முடியுமே தவிர இந்திய வீரர்களின் உருவாக்கத்தில் குறிப்பிடத்தகுந்த வகிபங்கை அளிக்க முடியாதென்பதே உண்மை.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 23.07.2016 அன்று
107, இராசவீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.